# Chola I.

L. ULAGANATHA PILLAI,
TAMIL PANDIT,
KRISHNA RAYAR LANE, TANJORE.

FOURTH EDITION.

1941.

# முதல் இராசராச சோழன்.

எல். உலகநாத பிள்ளை,

தமிழ்ப்பண்டிதர்,

கிருஷ்ணராயர் சந்து, தஞ்சை.

நான்காம் பதிப்பு.

All Rights Reserved.] [விலை ரூபா ஒன்று.

# முன்னுரை.

தமிழகத்தில் செங்கோல் செலுத்திய சோழர் பலர் சங்க நூல்களில் கூறப்படினும், அன்னவர் வரலாறு இன்னதென அறிவதற்கேற்ற கருவிகள் கிடைத்தில; ஆதலால், அவர் களைப்பற்றி ஆராய்வதற் கியலாதாயிற்று. ஆயினும், அரசியலார் கல்வெட்டாராய்ச்சியாளரின் ஆண்டு அறிக்கைகளால், கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டு தொட்டுச் சோழர் வரலாறு இருள் சிறிது நீங்கி ஒளிருதல் மகிழத்தக்கது. பெரும்பான்மையும், அவ்வறிக்கைகளையும், கல்வெட்டுக்களையும், சிறுபான்மை ஏனையவற்றையும் துணையாகக்கொண்டு, ஆராய்வதற்கு ஈண்டு எடுத்துக்கொள்ளப்பட்டவன் முதல் இராசராசன் ஆவான். இவனுக்கு முன்னர் இராசராசன் என்னும் பெயருடையார் காணப்படாமையாலும், இப்பெயருடையவர் பலர் பின்னர்க் கேட்கப்படுவதாலும், இவனே அவருள் முன்னவனெனக் கொள்வது சால்புடைத்தாயிற்று. இவனைப் பற்றி, விரிவாக எழுதி வெளியிடக் கருதிச் சிறுசிறு பகுதியாகத் தமிழ்ப் பொழிலில் திங்கள் தோறும் வெளியிட்டு வந்தேன். இதற்கிடையில் ஒரு பெரியார். இராசராசன் அரசியன் முறை, இராச்சியப் பரப்பும் அதன் பாகுபாடும், ஊர்ச்சபைகள் அமைப்பும் அவற்றின் கடமையும், ஆட்சித்துணையும் அவற்றின் அங்கமும் பிறவும் என்பவற்றினின்றும் பலப்பல பகுப்புகளைக் கையாண்டு தம் நூலுட் பெய்து விரைவில் வெளியிடுவாராயினர். அதைக் கண்ட பின்னர், இனிக் கால இடையீடின்றி வெளியிடல் நலம் எனத்துணிந்து, இவ்வாராய்ச்சியை ஒருவாறு செப்பம் செய்து முடித்தலை மேற்கொண்டேன்.

காலந்தோறும் கிடைக்கும் கருவிகளால், கருத்தும் பிறவும் மாறுபடுதல் இயற்கை யாதலின், கற்றுவல்ல சான்றோர், இதன் கண் குற்றம் நாடாது நற்றம் நோக்கி மகிழ்வாராக.

இங்ஙனம்,


தஞ்சாவூர், 21—5—1941.

எல். உலகநாதபிள்ளை,
தமிழ்ப்பண்டிதர்.

# பொருளடக்கம்.


பக்கம்.

1. சோழரின் தொன்மை ... ... ... 1
2. இராசராசன் முன்னோர்கள் ... ... 4
3. இராசராசன் இளம்பருவமும் முடிசூட்டும் ... 20
4. இராசராசன் மனைவியரும் மக்களும் ... ... 25
5. இராசராசன் வென்றிமேம்பாடும் விருதுப் பெயர்களும் ... ... ... ... 28
6. இராசராசன் அரசியன்முறையும் இராச்சியப் பரப்பும் பாகுபாடும் ... ... ... 42
7. இராசராசன் ஊர்ச்சபைகள் அமைப்பும் அவற்றின் கடமையும் ... ... ... 48
8. இராசராசன் காலத்தில் உழவு, வாணிபம், கைத்தொழில்களின் நிலையும், அவன் முத்தமிழ் வளர்த்த முறையும் ... ... ... 54
9. இராசராசன் ஆட்சித்துணையும் அரசியல் அங்கமும். 58
10. இராசராசன் இராசராசேச்சரம் எடுப்பித்தது ... 73
11. இராசராசேச்சரத் திருவிசைப்பாக்கள் ... 96
12. இரர்சராசன் திருமுறை கண்டது ... ... 100
13. இராசராசன் எடுப்பித்த வேறு ஆலயங்களும் பிறவும் ... ... ... ... 107
14. முடிப்புரை ... ... ... ... 109
15. தஞ்சைச் சோழர் வம்சாவளி ... ... 116



தஞ்சை இராசராசேச்சரம் என்னும் பெரியகோவில்.

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURA TAMIL SANGAM

THE MADURA TAMIL



# முதல் இராசராச சோழன்.

## 1. சோழரின் தொன்மை.

"தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே" என்னும் முன்னோர் மொழிக் கிணங்கக், காவிரி யாறு இடை யறாது ஒழுகலின், விதைத்த ஒன்று நூறாக விளையும் வளத்திற் சிறந்த நீர் நாட்டின்கண் செங்கோல் நடாத்திய சோழர்கள், படைப்புக் காலந் தொட்டு மேம்பட்டிருந்தவர் என்பது ஆன்றோர் கொள்கையாகும்.

சூரிய குலத்தில் சோழன் என்று ஒரு அரசன் தோன்றினான் எனத் திருவாலங்காடு, நாகபட்டினம் என்ற இரண்டிடத்துச் செப்பேடுகளும், கன்னியாகுமரிக் கல்வெட்டும் கூறுகின்றன. இதனால், சோழன் என்பது முன்னர் ஒருவனுக்கு இயற்பெயராய்ப், பின்னர் அவனது மரபிற் பிறந்தோர்க்குக் குடிப்பெயராய் வழங்கி இருத்தல் அமையும் என்பர்.

"குடிப்பெய ராவன கூறுங் காலைச்
சோரன் சோழன் பாண்டியன் என்றிப்
போல்வன பிறவும் பொருத்தங் கொளலே"

என்னும் பன்னிரு பாட்டியற் சூத்திரம், சோழர் என்பது ஒரு குடிக்கட் பிறந்தாரைக் குறிக்கும்பெயரெனல் விளக்குகின்றது.

அன்றியும், 'பழங்குடி-தொன்று தொட்டு வந்த குடி, தொன்று தொட்டு வருதல்-சேர சோழ பாண்டியர் என்றாற் போலப் படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வருதல்' என, 'வழங்குவதுள்வீழ்ந்த' என்னும் குறள் உரையில், பரிமேலழகர் கூறுவாராயினர்.

'வட இந்தியாவில் அரசுபுரிந் திருந்த அசோக மன்னன் தன் மக்களாகிய சங்கமித்திரை, மகேந்து என்பாரை, பௌத்த மத விரிவுரையாளர் பலருடன், கி. மு. மூன்றும் நூற்றாண்டில் தேயங்கடோறும் செல்லவிடுத்துத் தனது சமய உண்மையைப் பரப்ப முயன்ற போது, அவர்கள் சோழ பாண்டியர் நாடுகளி லும் அதனைப் பரவச்செய்தனர்' என அசோகன் கல்வெட்டுச் சாசனங்கள் கூறுகின்றன.

'சோழன் ஒருவன் பாரதப்போர் முடிவுறுமளவும் தருமன் படைக்கு உதவி புரிந்தனன்' எனக் கலிங்கத்துப் பரணி கூறு கின்றது.

சுக்ரீவன் பிராட்டியைத் தேடுவதற்கு விடுத்த வானர வீரர்களில், தென்முகமாகச் செல்வாரை நோக்கி, "ஆந்தரம், புண்டரம், சோளம், கேரளத்தோடு கூடிய பாண்டிய நாடுகளை யும் காண்பீர்கள்" என்றுரைத்ததாக வான்மீக ராமாயணம் கூறுநிற்கும்.

அகத்திய முனிவர் கோதாவரிக் கரையில், பஞ்சவடியில் இருந்தபோது, இராமர் அவரைக் கண்டு சென்றதாக இராமா யணத்துக்கூறப்பட்டுள்ளது. இதனால், அகத்தியர் இராமாயண காலத்தில் இருந்தவர் என்பது வெளிப்படை. இம் முனிவரது கட்டளையைத் தலைமேற்கொண்டு, வானத்தில் அசைந்து கொண்டிருந்த மதில்களை அழித்தமையால், 'தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்' என்று பெயர் பெற்ற சோழன்

ஒருவன் இருந்தமை, புறநானூறு, பழமொழி, சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் நூல்களால் அறியலாம்.

தமிழ் மக்களின் பண்டைக்கால ஒழுக்க வழக்கங்களை அறிதற்குக் கருவியாயிருப்பது தொல்காப்பியம். அதில், 'வெற்றியடைந்த வேந்தன் படைஞர், அவ்வவ் வேந்தனுக் குரிய அடையாளப் பூவைச் சூடுவர்' என்று பொதுப்படச் சொல்ல வந்த இடத்தில், 'பனை ஆத்தி வேம்பு என்பவற்றின் மலரைச் சூடுவர்' என்று விதந்து கூறப்பட்டுள்ளது. அவை, தமிழ்நாட்டு மூவேந்தராகிய சேர சோழ பாண்டியர்க்குரியவை யாகும். ஏனைய மலர்களைக் கூறாமல், இம்மூவரது அடை யாளப் பூக்களை மட்டும் கூறியிருத்தலின், தொல்காப்பியனார் நூல் செய்கின்ற காலத்தில் தமிழ் நாட்டில் முடியுடை மன்ன ராக இருந்தவர் சேர சோழ பாண்டியர்களை யன்றிப் பிறரில்லை என்று உய்த்துணரலாம்.

இன்னும், வியாசர் வேதங்களை நான்கு கூறாகப் பாகுபாடு செய்வதன் முன், தொல்காப்பியம் இயற்றப்பட்டது எனத் தொல்காப்பியம் எழுத்ததிகாரப் பாயிர உரைக்கண் நச்சினார்க் கினியர் சுட்டுகின்றனர். நச்சினார்க்கினியர் பாரத்துவாச கோத் திரத்துப் பிறந்த அந்தணர். வேதகாலம் கி. மு. 2400 முதல் 1400 வரையிலென R. C. தத்தர் தாம் எழுதிய புராதன இந்திய நாகரீகம் என்ற நூலில் வரையறுத்துள்ளார். இதனால், வேத காலத்திற்கு முற்பட்ட காலத்திற் செய்யப்பெற்றது தொல்காப்பியம் என்று ஏற்படுதலால், அதற்கு நெடுங்காலத் திற்கு முன்னரே நாகரீக முற்றிருந்த தமிழ் மன்னருள் ஒரு வராகிய சோழரின் தொன்மையை எவ்வாறு கணக்கிடுவது?

ஆகவே, இங்குக் கூறியவைகளை எல்லாம் ஒருங்கு வைத்து ஆராயுமிடத்துச், சோழர்கள் இத்துணை நெடுங்காலத்

திற்கு முற்பட்டவர் என நம்மால் வரையறுக்கலாகாத அத்துணைத் தொன்மை வாய்ந்தவர் என விளங்கி நிற்றல் காண்க.

சோழர்க்கு இலச்சினையும் கொடியும புலி; ஆத்திப்பூ அடையாள மாலை என்பர்.

---

## 2. இராசராசன் முன்னோர்கள்

இராசராசன் அரும்பெருஞ் செய்கை பல செய்த பெருஞ் சோழனெனினும், இவனைப்பற்றி ஆராய்வதன்முன், இன்னவனது முன்னோரைப்பற்றிச் சிறிது சொல்லாதொழியின், இவனது பெருந் தகைமையும் பிறவும் இனிது விளங்காவாகலின், அவர்களைப்பற்றிச் சுருங்கக் கூறுவேன்.

### சரிதகால முன்னோன்—கரிகாற் பெருவளத்தான்.

சோழர்கள், சரிதகாலத்தினர் அதற்கு முற்பட்டிருந்தவர் என்று இருவகைப்படுவர். சரித காலத்திற்கு முற்பட்ட காலத்தினை பாரதப் போர்க்கு முற்பட்ட காலம் எனவும், பாரதப் போர் நடந்தது முதல் இதுவரையினும் சென்ற காலத்தினைச் சரித காலம் எனவும், பாரதப் போரோ என்றால், கிறிஸ்து பிறப்பதற்கு 1400 ஆண்டுகட்கு முன் நடந்ததாகும் எனவும் சரித ஆராய்ச்சியாளர் கூறுவர். சோழருள், இராசராசன் முன்னோரில் ஒருவனைச் சரிதகாலத்துச் சிறந்திருந்தவன் கரிகாற் பெருவளத்தான் என்பவன்.

கரிகாலன் தந்தையின் பெயர் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி; தாய் அழுந்தூர் வேள் மகள். அவ் அழுந்தூர் வேள் மகள், கருப்ப முற்றுப் பத்துத் திங்களும் நிரம்பிக் கருவுயிர்க்க வருந்துகையில், அரசவைக்கு அடிகள் ஒருவர் எழுந்தருளினர்

அவர் இராசமாதேவியின் நிலைமையைக் கேட்டுணர்ந்து, 'நம் பெருந்தேவியாரது திருவயிற்றிலுள்ள குழவி இன்னும் சிறிது பொறுத்துப் பிறக்குமெனின், உலக முழுவதும் ஒரு குடைக் கீழ் வைத்தாளும் மன்னவர் மன்னனாகும்' என்றருளினர். அதைக் கேட்டு, நல்ல நேரம் வருமளவும் தாங்கியிருந்து, பின்னர் இவனை பெருந்தேவி பெற்றனள். அதனால் இவனைக் கருவிலே திருவுடையன் என்பர்.

இவனது இயற்பெயர் தெரிந்திலது. பெருவளத்தான் என்பது இவன் நாட்டைப் பெரு வளம்படுத்த காரணத்தால் இவனுக்கு உண்டான பெயர். கரிகாலன் என்பது காரணப் பெயர். அது, கரியாற்றீட்டப்பட்ட காலன், யானைகட்குக் காலன், (நமன்) தீயாற் கரிகின காலையுடையோன் எனப் பல பொருள்படும். அவற்றுள், முதற் கரிகாலனான இவனுக்கு நெருப்பில் கால் கரிகின காரணத்தால், இப்பெயர் உண்டாயிற்று. எதனால் இவன் கரிகின காலுடையோன் ஆயினன் எனிற் கூறுவேன்.

இவன் இளம்பருவத்தனாக இருக்கையில், தந்தையாகிய உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி இறந்து போயினன். அப்பொழுது அரசுரிமையைக் குறித்துத் தாயத்தார்க்குள் உறையூரிற் குழப்பம் நிகழ்ந்தது. அதனால், தன்னுயிர்க்குக் கேடு வரும் என்றெண்ணி, இவன் உறையூரை விட்டுக் கருவூர்க்குச் சென்று, அங்குக் கரந்து திரிவானாயினன். அவ்வாறிருக்கையில் அக்காலத்து வழக்கிற் கிணங்க அரசியற் குரியாரைத் தேர்தற் பொருட்டுக் கழுமலத்து நின்ற களிற்றினைக் கட்டவிழ்த்து விட்டனர். அக் களிறும் கருவூர்க்குச் சென்று, அங்கிருந்த இவனைத் தன்மிசை எடுத்து வந்து அரிசியற் குரிமை செய்தது. இவ்வுண்மையை, "கழுமல மென்னும் ஊரின் கண்ணே பிணித்து நின்ற களிறும் கருவூரின்

கண்ணே இருந்த கரிகால் வளவன் கடிது இளையனாயினும், அவன் சிறப்புடையனாதலால், அவன்மேற் சென்று தன்மிசை எடுத்துக்கொண்டு அரசியற் குரிமை செய்தது" என்னும் பழமொழிச் செய்யுளுரையான் உணர்க. கழுமலம் என்னும் ஊர் சோழ நாட்டிலொன்றும் சேரநாட்டிலொன்றும் இருத்தலின், ஆராயத்தக்கது.

இவ்வாறு களிற்றாற் கொண்டுவரப்பட்ட இவன் அரசியற்கு உரிமையுடையனெனினும், தாயத்தார் மனம் பொறாது புலிக்குட்டியைக் கூட்டில் அடைப்பதுபோல இவனைச் சிறைக்கோட்டத்திட்டுக் காவல் செய்தனர். அதற்குச் சிறிதும் அஞ்சாத இவன், ஆங்காலத்தினை நோக்கி இருப்ப, அவர்கள் இவனிருந்த சிறைக்களத்தைத் தீக்கொளுவினர். அதனைப் பொருட்படுத்தாது இவன் வாள் உறைகழித்துக் காவலரை வெட்டி வெளிவர முயன்றனன். அப்பொழுது இவனது கால்கள் தீயாற் கரிந்து போயின. அதுவே இவன் கரிகாலன் எனப்பெயர் பெறுதற்குக் காரணமாயிற்று.

இதனை "இளமைப் பருவத்துப் பிறராற் சுடப்பட்டு உயிர் உய்ந்து போகிய கரிகாலன்" என்னும் பழமொழி 105-ஆம் செய்யுளுரையும்.

"அரிகான்மேற் றேன்றொடுக்கும் ஆய்புனனீர் நாடன் கரிகாலன் கானெருப் புற்று" என்னும் பெரும்பாணாற்றுப் படை ஈற்றுச் செய்யுளடிகளும் விளக்கி நிற்றல் காண்க.

இவன், தன்னைச் செறித்திருந்த சிறைக்கள மதிலைக் கடந்து வெளிப்போந்த காலத்தில் இவனுக்கு அருந்துணை புரிந்தவர் இவனது மாமன் இரும்பிடர்த்தலையார் என்னும் பெரும்புலவர்.

முற்காலத்தில் உழுவித்துண்ணும் வேளாளர்க்கு வேள் என்னும் உரிமைப்பெயர் உண்டு. அவர்களிடத்து மன்னர்கள் மகட்கொள்ளும் வழக்கிருந்தது. அம்மரபுபற்றிக் கரிகாலன் நாங்கூர் வேள் மகளை மணஞ் செய்துகொண்டனன். நாங்கூர் சீகாழி தாலூகாவில் உள்ளது. இவனுக்கு நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, மாவளத்தான் என்ற ஆண்மக்கள் மூவரும், ஆதிமந்தியார் என்னும் நல்லிசைப்புலமை வாய்ந்த மகளும் இருந்தனர்.

இவன் புல்வர் பாடும் புகழுடையோன். பத்துப்பாட்டில் இரண்டு பாட்டுகள் இவனைப்பற்றிக் காணப்படுகின்றன. அவை பொருநராற்றுப்படையும் பட்டினப்பாலையும் ஆகும். அவற்றுள், தன்னையும், தன் இராசதானியாகிய காவிரிப்பூம் பட்டினத்தையும் சிறப்பித்துப் பாடப்பெற்ற பட்டினப்பாலையைக் கேட்டு மகிழ்ந்து அதனை யியற்றிய உருத்திரங் கண்ணனார்க்குப் பதினாறுநூறாயிரம் பொன் பரிசளித்தனன். அதனைக் கலிங்கத்துப்பரணி, இராசபாரம்பரியம் 22-ம் செய்யுளால் அறியலாம். இதனால், தமிழ்மொழிக்கண் இவனுக்குள்ள ஆர்வமும், புலவர்களை நன்கு மதித்து இவன் ஆதரிக்குமாறும் இனிது விளங்கும். இவனைப் பாடிய வேறு புலவர்கள் பரணர், நக்கீரர், மாமூலர், முடத்தாமக் கண்ணியார், கருங்குழலாதனார், வெண்ணிக் குயத்தியார் ஆவார்.

இவனது வென்றி மேம்பாட்டினை ஆராயின், "இரும் பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை, அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும், ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த, இருபெரு வேந்தரு மொருகளத் தவிய, வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட், கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்" என்னும் பொருநராற்றுப்படை அடிகளானும் 'காய்சின மொய்ம்பிற் பெரும்பெயர்க் கரிகால்—ஆர்கலி நறவின்

வெண்ணிவாயில் பதினொரு வேளிரோடு வேந்தர்சாய' எனவும், 'கரிகால் வேந்தனொடு வெண்ணிப்பறந்தலை—பொருது புண் ணாணிய சேரலாதன்' எனவும், வரும் அகநானூற்றடிகளானும், இவன் சேரமான் பெருஞ்சேரலாதனையும் பாண்டியனொருவனையும் பதினொரு வேளிரையும் வெண்ணிப்பறந்தலையில் நடந்த பெரும் போரில் வென்றமை விளங்குகின்றது. வெண்ணி என்றது சோழநாட்டகத்தோர் ஊராகும். இஃதன்றி வாகைப்பறந்தலையில் இவன் ஒன்பது மன்னரைப் புறங்கண்டமை, "பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார், சூடாவாகைப் பறந்தலை யாடுபெற, ஒன்பது குடையு நன்பகலொழித்த, பீடின் மன்னர்" என்னும் அகநானூற்று அடிகளால் அறியலாம். வாகைப்பறந்தலை சேரநாட்டதென்பர். இவர்களையன்றி ஒளியர், அருவாளர், வடவர், குடவர், தென்னவர், பொதுவர், இருங்கோவேள் முதலிய ஏனை மன்னரையும் இவன் வென்றடிப் படுத்தமை பட்டினப்பாலையிலும், வடநாட்டு ஆரிய மன்னர்களாகிய வச்சிரநாட் டரசன்பால் முத்துப்பந்தரையும், மகதநாட்டரசன்பால் பட்டி மண்டபத்தையும், அவந்திநாட் டரசன்பால் வாயிற்றோரணத்தையும் திறை கொண்டு, இமயத்தில் புலி பொறித்து மீண்டமை சிலப்பதிகாரத்திலும் அறியக்கிடக்கின்றன. இவற்றால் கரிகாலனது வென்றி மேம்பாட்டினையும், இமயமுதற் குமரியின் காறும் ஆணை செல்ல இவன் அரசுவீற்றிருந்த பெருமையினையும் நன்குணரலாம். இவன் நாட்டை வளம் படுத்ததன்றிச் செல்வம் பெருக்கினமையின் திருமாவளவன் என்னும் பெயரும் இவனுக் குண்டாயிற்று.

இக்கரிகாலன், அறிவு நிரம்பாத இளம்பருவத்தினன் என்று தன்னை இகழ்ந்த நரைமுதுமக்கள் உவப்ப நரை முடித்து வந்து முறை செய்ததும், காவிரிப்பெருக்கால் நகர்

பாழ்படாது அதன் இருமருங்கினும் கரைகண்டு நாட்டை வளம்படுத்ததும், செல்வம் பெருக்கமுறுதற்குக் காரணமா யிருப்பது வாணிகம் என்றுணர்ந்து, அதற்கு இன்றியமை யாத ஏற்றுமதி இறக்குமதிகள் தடையின்றி நடைபெற வேண்டிக் கடலை யடுத்துள்ள காவிரிப்பூம்பட்டினத்தைத் தன் தலைமை நகரமாகக் கொண்டதும், மருவூர்ப்பாக்கம், பட்டினப் பாக்கம் என்று இரு கூறாகப் பகுக்கப்பட்டிருந்த அக் காவிரிப் பூம்பட்டினத்தில், கடற்றுறைப் பக்கத்திருந்த மருவூர்ப் பாக்கத்திற் கடலிற் செல்லும் கலங்களைத் திசைக்குறி காட்டி யழைக்கும் கலங்கரை விளக்கமும், பண்டப் பொதிகளைக் கொண்டு தொகுக்கும் பண்டகசாலைகளும், பண்டங்கட்குத் தீர்வை கொள்ளும் ஆயத்துறைகளும், விற்கும் பண்டங்களை வாயாற் கூறிடாது அடையாளக் கொடிகளால் இன்னவை யென்றுணர்த்தும் கோடியெடுத்து நுவலும் கூலமறுகும், பட்டினப்பாக்கத்தில், அரண்மனை, அரசவீதி, ஆவணவீதி, கொடித்தேர்வீதி, அம்பலம், மன்றம், கலைக்கழகம், கோட்டம், எந்திரவாவி முதலியவைகளும் அமைத்திருந்ததும் சிலப்பதி காரத்தும் மணிமேகலையினும் பரக்கக் காணலாம்.

இதுகாறும் கூறியவாற்றால், கரிகால் பெருவளத்தானாகிய திருமாவளவன், நாட்டை வளம்படுத்து நகரிற் செல்வம் பெருக்கி நாகரீகமுற ஆட்சிபுரியும் சூட்சிமுறையிற் கை தேர்ந்தவன் என்றறியலாம்.

இவனது ஆட்சிக்காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு எனவும், ஐந்தாம் நூற்றாண்டு எனவும் கூறுவர்.

இவனையடுத்துச் செங்கண்ணன், பெருங்கிள்ளி என்னும் இருவர் பெயரும் ஆனைமங்கலத்துச் சாசனத்திற் கூறப்பட் டுள்ளன.

## இராசராசன் முன்னோர்கள்—தஞ்சையில் ஆட்சி புரிந்தோர்.

### பல்லவர் சளுக்கர்களின் குழப்பம்.

இனி, கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் பல்லவர்கள் வட மேற்கு நாடுகளின் வழியாக இடை இந்தியாவிற் புகுந்து, மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆந்திரர்களை வென்று காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு மேலான நிலைமையில் இருந்தபோது, பம்பாய், இராசதானியிலுள்ள பாதாமியைத் தனக்கு அரசிருக்கையாகக் கொண்டு மிக்க உயரிய நிலையில் இருந்தனன் சளுக்கமன்னன், இரண்டாம் புலிகேசி என்பவன். அவன் தன் நாட்டை நெடுந்தூரமளவும் பெருக்கிப் பல்லவரைக் காஞ்சியினின்றும் வெளிவராவண்ணம் அடக்கினன். பாண்டியரும் படையெடுத்து வந்து பல்லவரை நெருக்கத் தலைப் பட்டனர். அதனால், இருவருக்கும் அடிக்கடி சண்டையும் சச்சரவும் மிகுந்திட, நாடு இரண்டுபட, நகரமுழுவதும் குழப்பம் உண்டாயிற்று. அப்பொழுது பல்லவரின் ஆணையைக் கடந்தொழுகக் காலம் பார்த்திருந்த சோழன் விசயாலயன் என்பவன் ஒரு சிறு படையுடன் திடீரென வந்து முத்தரைய மன்னனிடமிருந்து தஞ்சை நகரை எளிதிற் கைப்பற்றி, அதனைத் தன் தலைநகராகக் கொண்டு செங்கோலோச்சினன்.

விசயாலயன்
கி. பி. 846–880

செந்தலையிலுள்ள தூண் ஒன்றிற்கண்ட சாசனத்தில் எட்டாவது நூற்றாண்டிலிருந்த பெரும்பிடுகு முத்தரையன் தன்னைத் தஞ்சைக் கரசன் என்று சொல்லிக் கொள்வதும், விசயாலயன் முத்தரையரிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றியதற்குச் சான்றாகும்.

சோழர் தலைநகர் உறையூர் என்பதொழிந்து, இவன் காலந்தொட்டுத் தஞ்சைநகரமாயிற்று. தஞ்சையைத் தலை

நகராகக் கொண்ட சோழர்களில் இவனே முதலவனுவான். *
இவனைப் பரகேசரிவர்மன் விசயாலய சோழ தேவன் என்பர். †

இவன் தஞ்சையின்கண் நிசும்பசூதனி என்னும் துர்க்கைக்கு ஒரு கோயில் எடுத்தனன். அது இன்ன இடத்தில் உள்ளதென அறிந்துகொள்ள முடியவில்லை. இஃதன்றிப் புதுக்கோட்டையைச் சார்ந்த நாரத்தாமலை மீதுள்ள விசயாலய சோளீச்வரம் என்ற கற்கோயில் இவன் எடுத்ததென்பர்.

திருநெல்வேலியைச் சார்ந்த திருக்குற்றலம் குற்றலநாதர் ஆலய விமானத்து வெட்டப்பட்டுள்ள இவனது 35-ஆம் ஆண்டு (B. 447 of 1917) சாசனத்தைக் கொண்டு இவன் குறைந்தது முப்பத்தைந்து யாண்டுகள் செங்கோலோச்சினவன் எனக்கூறலாம்.

விசயாலயனுக்குப்பின் அவன் மகன் இராசகேசரிவர்மன் ஆதித்தன் I அரியணை ஏறினன். அந்நாளையில், தொண்டநாட்டின் தலைநகராகிய காஞ்சியில், பல்லவர் மிக்க சீர்குலைந்த நிலையில் ஆட்சி செய்திருந்தனர். அதனை அறிந்த ஆதித்தன், சேரமான் தாணுரவி என்னும் சேரமன்னனேடு நட்புக் கொண்டு தொண்டநாட்டின் மீது படையெடுத்துச் சென்றனன். அங்கிருந்த பல்லவர் தலைவன் அபாரசிதவர்மன் என்னும் நிருபதுங்கன், கங்கர் குலத்தரசன் முதற்பிருதிவிபதியைத் துணைகொண்டு எதிர்த்தும் தோல்வியுற்றனன். பின்னர் பல்லவரும் கங்கரும் சோழர் ஆட்சிக் கடங்கியவராயினர். கி. பி. மூன்றும் நூற்றுண்டுதொட்டுப் பல்லவர்களின்

ஆதித்தன் I
880–907

* *Tiruvalangadu plates.*

† *Ep. Annual Report No 665. Public 28th July 1910.*

ஆட்சியின் கீழிருந்த தொண்டநாடு இதுமுதல் சோழரது ஆணைக்கடங்கியதாயிற்று. இப்போர்முனையில் வீரத்துடன் போர்புரிந்தவன் படைத்தலைவன் விக்கியண்ணன் என்பவன். அவனது வீரச்செய்கையை மெச்சிய ஆதித்தனும், சேரமானும், சிம்மாசனம், ஈச்சோப்பி, பல்லக்கு, முரசு, களிற்றுப் படை முதலியவற்றை அவனுக்குப் பரிசளித்ததன்றிச் செம்பியன் தமிழவேள் என்னும் பட்டமும் அளித்தனர். ‡ தொண்டநாடேயன்றிக் கொங்குநாடும் சின்னாளில் ஆதித்தன் கைவசமாயிற்று. அதன்பின் ஆதித்தன் தன் நாட்டின்மீது படையெடுத்து வந்த வரகுணபாண்டியனைப் பல்லவரும் கங்கரும் புடைசூழச் சென்று திருப்புறம்பியத்துப் போர்க்களத்து வென்று புறங்காட்டி நாட்டினின்றும் துரத்தினன். இப்போரில் அபாரசிதவர்மன் இறந்துபோயினன். ஆதித்தன் வடாற்காட்டில் (ஷடாரணியம் என்பதற்கு ஆறுகாடுகள் என்பது பொருள் அதுவே ஆற்காடென மருவிற்றென்பர்.) காளத்திக்கருகிலுள்ள தொண்டமாநற்றூரில் இறந்தமையின், இவனைத் தோண்டமானூற்றூர்த் துஞ்சினதேவன் என்பர்.

ஆதித்தன் இறந்த பின்னர் அவன் மகன் பராந்தகன் I பரகேசரி என்னும் பட்டத்துடன் அரியணை ஏறினன். அவன் வாணர்களை வெல்லக்கருதி அன்னவர் நாடாகிய வாணகப்பாடியை நோக்கிச் செல்வானாயினன். வாணகப்பாடி என்பது பாலாற்றுக்கு வடக்கே வடவாற்காட்டினைத் தன்னுள்ளடக்கிய இடம் என்பர். இதனை வடுகவழிமேற்கு எனவும் கூறுப. இங்கு வாணர்க்கரசன் வித்தியாதரன் அரசுசெய்திருந்தனன். இவன் தன் மகன் விசயாதித்தனோடு வந்து போர் புரியவும், பராந்தகன் வீரருட் சிறந்த வீரனாதலின், அவ்விரு

பராந்தகன் I
907–953

‡ *S. I. I. vol. III Part III page 221.*

வரையும் வென்று அவர்கள் நாட்டினைக் கைக்கொண்டு, இப் போரில் தனக்குத் துணையாக இருந்த கங்கர்குலத் தரசன் இரண்டாம் பிருதிவி பதிக்கு அதனையளித்துச் செம்பியன் மாவலிவாணராயன் எனப் பட்டஞ்சூட்டி, அவனைத் தன்கீழ்ச் சிற்றரசனாக்கினான்.

பாண்டியனோடு முதற்போர் 909-910

இவ்வாறு வாணர்களை வென்றடக்கியபின் பராந்தகன், பாண்டிநாட்டின்மீது படையெடுத்துச்சென்றனன். பாண்டிநாட்டிற்குத் தலைநகராகிய மதுரையில் இராசசிம்ம பாண்டியன் செங்கோல் செலுத்தியிருந்தனன். அவன் எதிர்த்து நிற்க வாற்றாது புறந்தந்தோடிட, மதுரை பராந்தகன் கைவசமாயிற்று. இதனால் மதுரைகோண்ட பரகேசரியாயினன் பராந்தகன்.

பாண்டியனோடு இரண்டாம் போர் 918-919

புறந்தந்தோடிய இராசசிம்மன், இலங்கைமன்னனை, ஐந்தாம் காசிபனைத் துணைவேண்டினான். அதற்கிணங்கி அவன் யானைப்படை குதிரைப்படைகளுடன் சிறந்த வீரர்களடங்கிய பெரிய தானையைத் தன் சாமந்தன் வசமனுப்ப, அதுபாண்டிய நாட்டினை அடைந்தது. அதைக்கண்டு பெருமகிழ்வுற்ற பாண்டியன், ' இனி இவ்வுலக முழுவதையும் என் குடைக்கீழ் ஆக்குவேன், எனக் கூறித் தன் படையுடன் சிங்களவர் தானையும் ஒருங்குகூடிப் பராந்தகன் மீது செல்லுமாறு அனுப்பினன். வேளூர் என்னும் இடத்தில் கடும்போர் நடந்தது. இப் போர்க்களத்தில் பாண்டிப்படையும் சிங்களப் படையும் முற்றிலும் முறியடிக்கப்பட்டன. பாண்டியனும் அச்சுற்று மதுரையை விடுத்து இலங்கையைப் புகலிடமாக அடைந்தனன்.

சிங்கள அரசனது துணைவலியே, பாண்டியர்கள் பன்முறையும் உண்டுபண்ணும் இடர்ப்பாட்டிற்குக் காரணமாகும் என்றறிந்த பராந்தகன், இத்தகைய துன்பங்கட்கு ஏதுவாயிருப்பதை அடியோடு ஒழிப்பதே தக்கதெனக் கருதி, மிக்க சீற்றத்துடன் கடலைக் கடந்துபோய் இலங்கையை முற்றுகை செய்தனன்; எதிர்த்து வந்த சிங்களவரை எல்லாம் தன் வாட்படைக்கு இரையாக்கி, அன்னவர் மனைவியர் அழுத கண்ணீரால் தனது சினத்தீ சிறிது தணியப்பெற்றுத் தன் நகர்க்குத் திரும்பினன். கடலைக்கடந்து இலங்கையில் இராமனைப்போல் போர்புரிந்தமையின், இவனுக்குச் சங்கிராம ராகவன் என்னும் பெயர் உளதாயிற்று.

**மூன்றும் போர் ஈழம் கொண்டது**

இவ்வாறு இவன் மதுரையையும், இலங்கையாகிய ஈழத்தையும் வென்றுகொண்டமையின், 'மதுரையும் ஈழமுங்கொண்ட பரகேசரிவர்மன்' என இவனை வழங்கத்தொடங்கினர்.

இவன் பாண்டியனை வென்று மதுரையைச் சுட்டுப் பாழாக்கினமையின், மதுராந்தகன் எனவும், சிங்களத்தரசனைக் கொன்றமையால் சிங்களாந்தகன் எனவும் பெயர்பெற்றமை கன்னியாகுமரிக் கல்வெட்டிற் காணலாம்.

இவனுக்குச் 'சோழகுலப்பெருமானார், வீரசோழன், வீரநாராயணன்' என்னும் பெயர்களும் இருந்தன.

இவற்றுள், வீரசோழன் என்ற பெயர், தன் வீரச் செய்கையால், இவன் இராட்டிரகூடத் தரசன் மூன்றுங் கிருட்டினனை வென்ற காரணத்தால் உண்டாயிற்றெனக் கன்னியாகுமரிச் சாசனம் கூறும். இதனாற் பராந்தகன் கன்னரதேவனைச் சோணாட்டிற் புகாமல் வென்றமை விளங்கும்.

சமரகேசரி, விக்கிரமசிங்கன், குஞ்சரமல்லன், சோழசிகாமணி, சூரசிகாமணி என்ற விருதுப்பெயர்களும் இவற்

குண்டு. இவன் படைத்தலைவன் சிறுகுளத்தூர் செம்பியன் சோழியவரையன் என்பவன். அவன் நல்லூரில் நடந்தபோரில் சீட்புலி என்பவனைக் கொன்று ஊரையும் பாழ்படுத்தினான்.

இவன் வீரநாராயணபுரம் போன்ற பல அக்கிரகாரங் களை உண்டாக்கி அவற்றை முற்றூட்டாக அந்தணர்க்கு அளித்தனன். வீரநாராயணன் என்பதும் இவன் பெயர்களுள் ஒன்று.

உடையபிராட்டியார் கோக்கிழானடிகளும், வில்லவன் மாதேவடிகளும் இவன் மனைவியராவர். இவனுக்கு, இராசா தித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன் என மக்கள் மூவர் இருந்தனர்.

இம்மூவருள், அரிஞ்சயன் என்பவன் பராந்தக னுக்குக் கேரளவரசன் பழுவேட்டரையன் மகள் வயிற்றுப் பிறந்தவனாவான்.

பராந்தகனது இருபத்தொன்பதாவது ஆண்டினதாய கோலார் சாசனத்தும் பிறவற்றினும், கொங்குநாட்டுப் பராந் தகபுரம், கொங்குப்பெருவழி பராந்தகபுரம் எனக் காணப் படுதலின், கொங்குநாடும் இவன் ஆட்சிக்கு அடங்கி இருந்தமை விளங்கும்.

இவ்வண்ணம் பற்பல நாடுகளையும் கைக்கொண்டு, எங்கும் புகழ்பரப்பிக் கொங்கிற் பொன்கொண்டு புலியூர்ச் சிற்றம்பலத் தைப் பொன்வேய்ந்து நாட்டை நலமுற நாற்பத்தாறு யாண்டளவும் ஆட்சி புரிந்தனன்.

தெற்கே, கன்னியாகுமரிக்கு அருகிலுள்ள சுசீந்திரத் தும், வடக்கே காளத்தியிலும், மேற்கே கருவூருக்கு அடுத்த

சோழரிலும் இவனது சாசனங்கள் காணப்படுதலின், இவன் காலத்தில் சோழரது ஆட்சி நெடுந்தூரமளவும் பரவியிருந்தமை காண்க.

இப் பராந்தகனது ஆட்சியின் கடைக்காலமாகிய 947-ம் யாண்டில், துங்கபத்திரைக்கரையில் அரசுசெய் திருந்த இராட்டிரகூடத்தரசன் மூன்றாங் கிருட்டினனை கன்னரதேவன் என்பவன் படையெடுத்து வந்து சோழநாட்டின் வடவெல்லையிற் குழப்பத்தை உண்டாக்கினான். அப் பொழுது வடவாற்காட்டிலிருந்த இவன் மகன்

**இராசாதித்தன் 950**

இராசாதித்தன், ஒரு பெருந் தானையோடு சென்று எதிர்த்திட, ஆர்க்கோணத்திற்கு ஆறு மையிலுக் கப்பாலுள்ள தக்கோலம் என்னும் இடத்தில், இரு பெரும்படையும் கைகலந்து போர் புரிந்தன. கடும்போர் நடக்கையில் கன்னர தேவனது சேனை முறியுண்டது. இனிச் சோழர்க்கே வெற்றியென எவரும் கருதியிருக்கையில், கன்னரதேவன் தங்கை கணவன் இரண்டாம் புதூகன், இராசாதித்தன் ஏறியிருந்த யானையின்மீது விரைவிற் பாய்ந்து, தன் உடைவாளை உருவிக்குத்திட, அவனும் வீழ்ந்திறந்தனன். யானைமேல் வீழ்ந்து துஞ்சினமையின், இராசாதித்தனுக்கு 'யானைமேற்றுஞ்சினான்' என்னும் பெயர் வழங்குவதாயிற்று. G. O. No. 919 Pub. 29 July 1912, Para 14.

இவனுக்குக் கோதண்டராமன் எனவும் பெயருண்டு. இவன் தாயார் உடையபிராட்டியார் கோக்கிழானடிகள்; பட்டத்தரசி ஈராயிரவன் தேவி அம்மனார்.

காளத்திக்கருகிலுள்ள கோதண்டராமேச்சரமும், ஆர்க்கோணத்திற்கு அருகில் கீழைப்பாக்கத்திலுள்ள ஆதித்தேச்சரமும் இவன் எடுப்பித்த ஆலயங்கள் என்பர்.

இவ்வாறு இராசாதித்தன் இறந்துபோக, தொண்டநாடு
கன்னரதேவன் கைவசமாயிற்று. இராசாதித்தனது தம்பி
கண்டராதித்தன், இராசகேசரிவர்மன் பராந்த
கண்ட கன் கண்டராதித்தன் என்னும் பெயருடன்
ராதித்தன் சோழநாட்டை ஆளத்தொடங்கினன். இவன்
954 மழவரையன் மகள் செம்பியன் மாதேவி
யாரை மணந்து மதுராந்தகன் என்னும் மைந்தனைப் பெற்றுவைத்துக், கண்டராதித்த சதுர்வேதி மங்கலம் எனக் காவிரியின் வடகரையில் தன்பெயரால் ஊர் உண்டாக்கி விண்ணுலகடைந்தனன். இவனது படிமத்தைக் கோனேரி ராசபுரத்துக் கோயிலுட் காணலாம். இவனுக்கு வீரநாராயணி என்றொரு மனைவியும் இருந்தனள். செம்பியன் மாதேவியார் கடவுளிடத்து மிக்க அன்புடையவர். அவர் எடுப்பித்த ஆலயங்களும் அவற்றிற்கு அமைத்த நிபந்தங்களும் மிகப்பலவாகும்.

இவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்தவன் அரிஞ்சயன் என்பவன். இவனை அரிந்தமன் எனவும் கூறுவர்.
அரிஞ்சயன் இவனது மனைவி வைதும்பராயன் மகளார்
கலியாணி என்பார். இவன் பகைவராகிய காட்டுக்குத் தீயை ஒத்தவன் எனத் திருவாலங்காட்டுச் சாசனம் கூறுமாற்றால் இவன் பகைவரை வென்றவன் என்று ஊகிக்கலாம். ஆனால் விவரம் தெரிந்திலது. இவன் மகன் பராந்தகன் II.

தன் தந்தைக்குப்பிறகு பராந்தகன் II இராசகேசரி என்னும் பட்டத்துடன் சோழநாட்டின் ஆட்சி பெற்றான். 'கலியுகத்தில் வழக்குவீழ்ந்த நீதிகளை மீட்டும் நிலைநிறுத்துதல் காரணமாகப் பண்டைக்காலத்திருந்த மனுவே இன்று வந்

தவதரித்தனன் எனக் குடிகள் கொண்டாடவும், இவன் காலத்தில், பூமாலையைக் குறிக்கும் ஆரம் என்னும் மொழிக்கண்ணுள்ள, 'ஆ' என்ற எழுத்தொலியைக் கேட்பதல்லது, குடிகள் தன் புற்று ஆ என்றலரி ஓலமிட்டு அரற்றிய ஒலியை எங்கும் கேட்டதில்லை எனப் புகழ்ந்துரைக்கவும் செங்கோலோச்சினன்' எனத் திருவாலங்காட்டுச் சாசனம் கூறு நிற்கும். 'இவன் சேவூர்ப்பறந்தலையில் வீரபாண்டியனோடு கடும்போர் புரிந்து அவனைப் புறந்தங்தோடிக் காட்டில் ஒளித்திடச் செய்தனன்' என லீடன் சாசனம் கூறுகின்றது. அதனால் இவற்குப் பாண்டியனைச் சுரம் இறக்கின சுந்தர சோழன் என்னும் பெயர் உண்டாயிற்று. சுந்தரசோழன் என்பது இவன் பெயர்களுள் ஒன்றாகும். அதனை, "பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள் ஸ்ரீ சுந்தரசோழ தேவர்க்கு யாண்டு 7-வது வடகரை வேம்பற்றூர் ஸ்ரீ கழித்திட்டை உடையார்க்கு" என்னும் திருக்கழித்திட்டை சாசனப்பகுதியாலறிக. இவன் கடவுண்மாட்டுப் பேரன்புடையன் என்பது 'ஆழ்வார் பராந்தகன்' என்னும் சாசனப்பகுதியால் விளங்குகின்றது. இவன் தனது கடைசி காலத்தில் பொன்மாளிகையில் (சிதம்பரத்தில்) தன் மனையாளோடிருந்து காலங்கழித்திருக்கையில், புறந்தங்தோடிச் சுரத்தில் ஒளித்திருந்த வீர பாண்டியன், அற்றநோக்கிவந்து, இவனைக் கொன்றிருத்தலமையுமென்பது 'சோழன் முடித்தலைகொண்ட வீரபாண்டியன்' என்னும் சாசனப் பகுதிகொண்டு ஊகிக்கின்றனர். இவன் பொன்மாளிகையில் இறந்தமையால், இவற்குப் 'பொன்மாளிகைத் துஞ்சினதேவன்' என்னும் பெயருளதாயிற்று. *G. O. No. 920, Pub. 4th August 1914, Para 15.*

பராந்தகன் II
954–970

இவனுக்கு அநிருத்தன் என்ற ஒரு அமைச்சன் இருந்தனன். அதனை அன்பிற் செப்பேட்டிற் காணலாம்.

இவன் இறந்தபோது இவனது மனைவியார், வானவன் மாதேவியார் உடன்கட்டை ஏறினார். இதனைத் திருவாலங்காட்டுச் சாசனத்துக்காண்க. அக்காலத்திய வழக்கிற்கிணங்க, இவ்விருவர் படிமங்களையும் இன்னவர் மகள் குந்தவையார் தஞ்சை இராசராசேச்சரத்தில் எழுந்தருளுவித்து நிபந்தங்கள் கொடுத்துள்ளதைச் சாசனங்களில் பரக்கக்காணலாம். *S. I. I. Vol II, Part I, Page* 69-70.

இவனுக்குத் தஞ்சைநகர்க்கணன்றிப் பழையாறை என்னும் ஊரினும் மாளிகை இருந்தமை, "பழையாறை நகர்ச் சுந்தரச் சோழரை யாவ ரொப்பார்களித் தொன்னிலத்தே" என்ற பழந்தமிழ்ச் செய்யுள் கொண்டுகிக்கலாம்.

இவனுக்குக் குந்தவை, ஆதித்திய கரிகாலன் II, அருண்மொழித்தேவன் என மக்கள் மூவர் இருந்தனர்.

**ஆதித்திய கரிகாலன் II**
**970–980**

பராந்தகன் II பொன்மாளிகையிற் றுஞ்சினபின், அவன் மூத்தமகனாகிய ஆதித்திய கரிகாலன் அரியணை ஏறினான். இவன் தன் தந்தையைக் கொன்றவனைப் பழிக்குப்பழி வாங்கக் கருதியிருந்தவன் ஆதலால், தான் பட்டத்துக்கு வந்த இரண்டாம் ஆண்டிலேயே, வீரபாண்டியனோடு போர் புரிந்து அவன் தலையைக் கொய்து பந்தாக உருட்டி விளையாடியதன்றி, அதனைத் தன்னாட்டில் வெற்றித் தூணாகவும் நாட்டிவைத்தனன். இதனை லீடன் சாசனத்தாலறிக. முதற் பராந்தகனுக்குப்பின் கன்னரதேவன் கைவசப்பட்டிருந்த கச்சி, இவன் காலமுதல் சோழரது ஆணையின் கீழதாயிற்று. இவனை வீரபாண்டியன் தலைகொண்ட

பரகேசரி வர்மன் எனக் கூறுவர். பார்த்திவேந்திரவர்மன் என்ற பெயரும் இவற்குண்டென்பர். இவனுக்குப்பின் அரசு புரிந்த மதுராந்தகன் இராசகேசரி எனப் பட்டந்தாங்க வேண்டியிருக்க, அவ்வாறின்றிப் பரகேசரி எனத் தாங்கியிருந்தமையால், இம்மதுராந்தகன் ஆதித்தனோடு பிரதிநிதியாக உடனிருந்து ஆட்சி செய்தவனாதல் வேண்டுமென்பர்.

இவ்வாறாக இராசாதித்தன் முதல், ஆதித்தன் II உள்ளிட்ட சோழர்கள் இருபது யாண்டுகளுக்குள் அரசாண்டொழியவே, அருண்மொழித்தேவனே அரசாளுதற்குப் பெரிதும் உரிமையுடையவனாக இருந்தனன். குடிகள் இவனையே அரசுரிமையைக் கொள்ள வேண்டினர். ஆனால் இவன், தன் சிற்றப்பன் மதுராந்தகனுக்கு நாடாட்சி செய்வதில் விருப்பமிருப்பதை அறிந்து, அவனுக்கு அவ்விருப்பம் ஒழியுமளவும் தனக்கு அரசாட்சி வேண்டியதில்லை என்று மறுத்திட, மதுராந்தகன் முடிசூட்டப்பெற்றான். இம்மதுராந்தகனைப் பரகேசரிவர்மன் மதுராந்தக உத்தமசோழன் எனவும், பரகேசரி வர்மன் கண்டராதித்தன் மதுராந்தக உத்தமசோழன் எனவும் சாசனங்கள் கூறுகின்றன. விழுப்பரையன் மகள் கோக்கிழானடிகள் இவன் மனைவியாவாள்.

மதுராந்தகன் 969–985

---

## 3. இராசராசன் இளம்பருவமும் முடிசூட்டும்.

### இரரசராசன் பிறந்தநாள்.

சுந்தர சோழனாகிய இரண்டாம் பராந்தகனுக்கு இளைய மகனாகிய இராசராசன் இன்ன யாண்டிற் பிறந்தவன் என்று தெரிதற்கிடமில்லை எனினும், தஞ்சை இராசராசேச்சரத்தும்,

திருவையாற்று ஒலோகமாதேவீச்சரத்தும், முறையே 'உடையார் இராசராசதேவர் திருச்சதயத் திருவிழா' எனவும், 'உடையார் திங்கள் சதயவிழா' எனவும், திங்கடோறும் கொண்டாடப்பட்டமையானும், செங்கற்பட்டிலுள்ள திருவடந்தை வராகப்பெருமாள் கோயிலில், யாண்டுதோறும் ஆவணித் திங்கள் சதயநாள்தொட்டு, 'இராசராசன் திருவிழா' என ஏழுநாள் விழா எடுத்தமை G. O. No. 822. Public, 28 July 1911 பக்கம் 70 இல் அறியக்கிடத்தலானும், இவன் பிறந்த நாள் சதய நாள் என்பது தேற்றம். இன்னும், இவன் சேரநாட்டுத் திருநந்திக்கரை என்னும் இடத்திலுள்ள சிவாலயத்திற்குத் தன் பிறந்த நாளாகிய ஐப்பசி மாதச் சதயநாளில் திருவிழா நடத்துதற்காக 'மூட்டம்' என்னும் ஊரை அளித்தனன் என அக் கோயிற்கணுள்ள கல்வெட்டொன்று கூறுகின்றது. அதனால், ஐப்பசித் திங்கட் சதய நாளே இவன் பிறந்த நாளென்பது வெளிப்படை. கலிங்கத்துப்பரணி சோழமரபின் தொடர்புரைக்கும் பகுதியில், "சதய நாள் விழா வுதியர் மண்டலந் தன்னில் வைத்தவன்" என இவனைச் சுட்டியதற்கேற்ப, இவன் பிறந்த நாள் விழாவைத் தான் முதன் முதலில் வென்றுகொண்ட சேர நாட்டில் ஏற்படுத்தினமை அறியத்தக்கது.

## பிறந்தநாள் விழாவும் அதன் தொன்மையும்.

பிறந்த நாள் விழாவைப் 'பெருமங்கலம்' எனத் தொல்காப்பியமும், 'புண்ணிய நன்னாள்' என மணிமேகலையும் கூறும். அந்நாளில், அரசன், சிறைவிடுதலும், செருவொழிதலும், கொலையொழிதலும், இறை தவிர்த்தலும், வேண்டியன கொடுத்தலுமாகிய சிறந்த தொழில்களை மேற்கொண்டு, வெள்ளணி அணிந்து எவ்வுயிர்க்கண்ணும் அருள் நிகழ இருப்பன். ஆதலின், அதனை 'வெள்ளணி நாள்' எனவும்

விளம்புப. அன்று, "கண்ணார் கதவந் திறமின் களிறொடு தேர்—பண்ணார் நடைப்புரவி பண்விடுமின்—நண்ணாதீர்—போர் வேந்தன் பூசலிலன்" எனவும், "ஏமாரு மன்னீர் எயில் திறமின் காமநுகர்மின் கண்படுமின்" எனவும் ஏமமுரசம் எடுத்தியம்பும். இவற்றால், மன்னர் பிறந்த நாள்விழா தண்டமிழ் நாட்டில் தொன்றுதொட்டு நடைபெற்று வந்தவாறறிக.

## இராசராசன் குழந்தைப்பருவம்.

இனி, இவன் பிறந்தபோது, 'தம் கணவற்கு இனி நிலச்சுமை குறைந்ததென்னும் மனமகிழ்ச்சியால் ஆதிசேடன் மனைவியர் நடித்தனர்' எனத் திருவாலங்காட்டுச் செப்பேடு (சுலோகம் 63) கூறுகின்றது. அதனால், நிலந்தாங்கும் நீண்முடி வேந்தர்க் குரியவாகிய அகன்ற நெற்றியும், உயர்ந்த தோளும், பரந்த மார்பும், முழந்தாளளவும் நீண்ட கையும் என்றின்னோரன்ன அரச அடையாளங்கள் பலவும் இவன் மேனியில் விளங்கிக் கிடந்தன போலும் என்று ஊகிக்கலாம்.

## இராசராசன் இளம்பருவம்.

ஆகவே பாராளும் பெருவேந்தர்க் குரிய தன்னமில் அடையாளங்கள் பலவும் தன்பால் வயங்க, நல்வாழ்வுறுங் காலம் நண்ணியதென நிலமகளும் வென்றிமகளும் நடித்திட, பகையிருளொடுங்க, இள ஞாயிறு போல ஐப்பசித் திங்களிற் சதய நாளிற் பிறந்த இவன், அருண்மொழித்தேவன் எனப் பெயரிடப் பெற்று வளர்ந்து, உரிய காலத்தில் நூல்கள் பலவும் நிரம்பக்கற்று, யானையேற்றம், குதிரையேற்றம், தேரேறுதல், வில்வாட் பயிறல் என்றின்னவைகளை நன்கு தேர்ந்து, 'சைவம் வளர்க்குந் தண்முகில், திருமுறை போற்றும் செவிலி, கற்றவர் தமக்கொரு நற்றுணை, இயலிசை படரும் கொழுகொம்பு' என எவரும் எடுத்தியம்பிட, இளமையிலேயே மூதறிவிற் சிறந்திருந்தனன்.

## இராசராசன் மூதறிவு.

இனி, இவனுக்கு மூத்தோனாகிய ஆதித்த கரிகாலன் இறந்த பின், இவனே அரியணை ஏறுதற்குப் பெரிதும் உரிமையுடையவனாக இருந்தனன். குடிகள் இவனையே அரசுரிமையைக் கைக்கொள்ளுமாறு வேண்டினர். அவ்வாறிருந்தும், தன் சிற்றப்பன் மதுராந்தகனுக்கு அரசாள் விருப்பம் ஒழியுமளவும் தனக்கு நாடாட்சி வேண்டியதில்லை என்று மறுத்து அவன்கீழ் இளவரசாக இருந்த இவனது தன்மையை நோக்குமிடத்து, இவன் தாயத்தார்க்குட் பகைமை கூடாதென்னும் பரந்தநோக்கும், பெரியோர் கருத்திற்கு மாறுபடாது அடங்கியொழுகும் பெற்றியும், இவன் எடுப்பித்த இராசராசேச்சரத்திற்குத் தானும் பிறரும் தந்தனயாவையும் கல்லிற் பீட்டுதற்கு ஆணை தருபவன், "நாம் கொடுத்தனவும், நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும், மற்றும் கொடுத்தார் கொடுத்தனவும் கல்லில் வெட்டுக" என்று திருவாய் மொழிந்தருள வெட்டியவற்றுள், தமக்கையாரைக் கூறுமிடத்தெல்லாம் "இராசராச தேவர் திருத் தமக்கையார்" என மேம்படுத்துக் கூறியதோடமையாமல், அவர் தந்தன மட்டும் தன்னோடுடுத்து நடுவிமானத்து வரைந்திடச் செய்து, பெண்டிரும் பிறரும் தந்தவற்றைத் திருச்சுற்று மாளிகையில் இடந்தொறும் இடந்தொறும் வெட்டுவித்திருப்பதையும் ஆராயின், இவன் மூதறிவின் மாண்பினை இனிதுணரலாம்.

## இயற்பெயர், பட்டப்பெயர், முடிசூட்டுக்காலம்.

இனி, இவனை அருண்மொழித் தேவன் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடு கூறுவதால், அது இவனது இயற்பெயர் போலும். இவனுக்குரிய பட்டப்பெயர் இராசகேசரி வர்மன் என்பது. நெடுநாளாக உத்தமசோழன் கீழ் இளவர

சாக இருந்து அரச காரியங்களை நன்குணர்ந்த இவன், அவன் இறந்தபின்னர், ஆராய்ச்சியாளர் நுண்ணிதிற்கண்ட கி. பி. 985-ஆம் யாண்டில் இராசகேசரி என முடிசூட்டப்பட்டு அரசு கட்டிலி லேறினன்.

## இராசகேசரி வரலாறு.

முற்காலத்தில் சோழர் மரபில் இராசகேசரி எனவும் பரகேசரி எனவும் அரசர் இருவர் இருந்தனர் என்பதை ஆனைமங்கலம், திருவாலங்காடு செப்பேடுகளிலும் கன்னியாகுமரி கல்வெட்டினும் காணலாம். பிற்காலத்துச் சோழரெல்லோரும் பெருமையிற் சிறந்த அன்னவர் பெயரைத் தம் பெயர்க்கு முன்னர்ப் பட்டப் பெயராகச் சேர்த்து வழங்கிவந்தனர். அவ்வாறு வழங்குமிடத்துத் தந்தை இராசகேசரியாயின் மகன் பரகேசரியாக இருப்பன். இவ்விரு பெயரும் தம்மில் அடுத்தடுத்து வழங்குவதே, இன்னவனுக்குப் பின்னர்ப் பட்டம் எய்தியவன் இன்னவன் என்பதை இனிதுணர்த்தும். இம்முறையில் இராசராசன் இராசகேசரியாயினன்.

## முடிசூட்டுவிழா எடுக்கு முறை.

முடிசூட்டு விழா எடுக்குமிடத்து அவ்விழாவிற் கென்று குறித்த நன்னாளில் முடிசூடும் அரசனை யானைமீ தேற்றி மன்னரும் அமைச்சரும் பிறரும் புடையிற் சூழ்வரப் பல்லியங் கறங்க வாழ்த்தொலி பெருக நகர்வலம் செய்விப்பர். பின்னர்க் களிற்றினின்றும் இறக்கி, முடிசூட்டு சாலையிற் கொடுபோய், நாற்புறமும் மாலைகள் நாலக், கொற்றக்குடை நிழற்ற, நடுவண் இட்ட அரியணைக்கண் அவனை ஏற்றி, முரசுமுழங்க முடிசூட்டி, மங்கலத்தீயை வளர்த்து, நுண்ணூல் புறம்சூழ்ந்த பொன்னின் குடங்களில் நிரப்பிய நன்னீரை மரபுளியாட்டி விழாவயர்வர். இவ்வாறு விழாவயர்தல் மரபெனலை மூர்த்தி நாயனார் புராணத்துட் சேக்கிழார் சுட்டியிருத்தல் காண்க.

## 4. இராசராசன் மனைவியரும் மக்களும்.

### இராசராசன் மனைவியர்.

இனி, இராசராசனுக்கு, ஒலோகமாதேவியார், சோழ மாதேவியார், அபிமானவல்லியார், திரைலோக்கியமாதேவி யார், பஞ்சவன்மாதேவியார், பிருதிவிமாதேவியார், இலாட மாதேவியார், மீனவன்மாதேவியார் என்கிற வேம்பன் சிருடை யார் என மனைவியர் பலர் இருந்தமை அறியலாம். இன்ன வரை மனைவியரெனத் தெரிந்து கோடற்கு அன்னவர் பெயர்க்குமுன்னர், "உடையார் ஸ்ரீ ரசராசதேவர் நம்பிராட்டி யார்" என்னும் அடைமொழி புணர்க்கப்பட்டிருக்கும். அதுவே இவன் மனைவியர் இவர் என்பதற்கு அறிகுறியாகும்.

### இராசராசன் முதற் பெருந்தேவியார்.

இனி, இம்மனைவியர் பலருள் பட்டத்தரசி இன்னரென் றறிவதும் இன்றியமையா தாகலின், அவரை ஆராயின், ஒலோகமாதேவியாரே முதன்மனைவியாதல் அமையும். எவ்வா றெனிற் கூறுவேன்.

### மனைவியர் கல்வேட்டுக்களில் இவரதே முன்னருள்ளது.

இராசராசன் ஆணையிட்டவாறு பொறிக்கப்பெற்றுள்ள மனைவியர் கல்வெட்டுக்களில் "உடையார் ஸ்ரீராசராசதேவர் நம் பிராட்டியாா ஒலோகமாதேவியார் ஸ்ரீராசராசீச்வரம் உடை யார் கோயிலில் யாண்டு இருபத்தொன்பதாவதுவரை எழுந் தருளுவித்த செப்புத் திருமேனிகள்" என ஒலோகமாதேவி தந்தன கூறும் கல்வெட்டே முன்னர் வெட்டப்பெற்றுள்ளது.

### இவர் அரசனோடு இரணிய கருப்பம் புக்கனர்.

அரசர்கள், தம் பட்டத்தரசியுட னிருந்தே நற்காரியங்களை இயற்றுவது இயற்கை. இவன், திருவிசலூர்க் கோயிலில்

துலாபாரம் புக்கபோது தந்தி சத்தி விடங்கியார் இரணிய கருப்பம் புக்கனரென்பதை, "ஸ்ரீ கோவிராச கேசரி வன்ம ரான ஸ்ரீ ராசராசதேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவது இராசேந்திர சிங்கவளநாட்டு மண்ணிநாட்டு பிரம்மதேயம் வேம் பற்றூராகிய சோழ மார்த்தாண்ட சதுர்வேதிமங்கலத்து மகா சபையோம் கையெழுத்து. நம்மையுடைய சக்கிரவர்த்தி உடையார் ஸ்ரீ ராசராசதேவர் இவ்வூர் திருவிசலூர் மகாதேவர் ஸ்ரீகோயிலிலே துலாபாரம் புக்கருளின அன்று நம்பிராட்டியார் தந்தி சத்தி விடங்கியார் இரணியகருப்பம் புக்கருளி, இத் திருவிசலூர் மகாதேவர்க்கு அக்காரவடிசில் அமுதுக்கு வேண்டும் நிபந்தங்களுக்காக வைச்ச காசு ௬௱௫௰௪" என்னும் கல்வெட்டாலறிக. (அக்காரவடிசில்—சர்க்கரைப்பொங்கல்).

### தந்திசத்தி விடங்கியார் என்பதும் இவர் பெயரே.

தந்தி சத்தி விடங்கியார் என்பது ஒலோகமாதேவி யார்க்கே பெயரென்பதை, "உடையார் ஸ்ரீ ராசராசதேவர் நம்பிராட்டியார் தந்தி சத்தி விடங்கியரான ஸ்ரீ ஒலோகமாதேவி யார் வடகரை ராசேந்திர சிம்ம வளநாட்டுப் பொய்கை நாட்டுத் திருவையாற்றுப்பால் நாம் எடுப்பித்த திருக்கற்றளி ஒலோக மாதேவி ஈச்வரம்" என்னும் ஒலோகமாதேவிச்சர சாசனப் பகுதி நன்குணர்த்தும். இன்னும் இதனைத் திருவலஞ்சுழிச் சாசனத்தும் காணலாம் (No. 633 of 1902).

### அரசன் படிமத்துடன் இவரது படிமமே எழுந்தருளப் பெற்றுளது.

இன்னும், ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் என்பவர், தஞ்சை இராசராசேச்சரத்தில், இராச ராசன் படிமத்தோடு ஏனைய மனைவியர் படிமங்களை எழுந் தருளச் செய்யாது, ஒலோகமாதேவியார் படிமத்தையே எழுந் தருளுவித்தமை, " உடையார் ஸ்ரீராசராசீச்சரம் உடையார்க்கு

ஸ்ரீ காரியஞ் செய்கின்ற பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் ஸ்ரீராசராசீச்வரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத்தொன்பதாவதுவரை எழுந்தருளுவித்த செப்புப் பிரதிமங்கள்..............பாதாதி கேசாந்தம் ஒரு முழமே நால் விரலரை உசரத்து இரண்டு திருக்கையுடையராகக் கனமாக எழுந்தருளுவித்த பெரிய பெருமாள் (இராசராசன்) பிரதிமம் ஒன்று, இருபத்து இரு விரலே இரண்டு தோரை உசரத்து இரண்டு திருக்கையுடைய ராகக் கனமாக எழுந்தருளிவித்த இவர் நம்பிராட்டியார் ஒலோகமாதேவியார் பிரதிமம் ஒன்று" என S. I. I. Vol. II, Part II பக்கம் 155-இல் அறியக்கிடக்கின்றது.

ஆகவே, தந்தி சத்தி விடங்கியார் என்னும் ஒலோகமா தேவியாரே, இதுகாறும் கூறியவாற்றால், இராசராசன் முதற் பெருந்தேவி என விளங்கி நிற்றல் காண்க.

### இராசராசன் மக்கள்.

இவனுக்கு, இராசேந்திரன் என்ற மகனும், குந்தவை II என்ற மகளும் இருந்தனர். இவர்களையன்றி மாதேவடிகள் எனப் பெயரிய மகளும் உண்டென்பது, ஸ்ரீராசராசதேவர் திருமகளார் மாதேவடிகளார் திருவையாற்று ஒலோகமா தேவீச்வர முடையார்க்கு..............சாத்தியருளக் குடுத்த பட்டம் ஒன்று" என்னும் திருவையாற்று உத்தர கைலாயம் என வழங்கும் ஒலோகமாதேவீச்சர சாசனப்பகுதியால் விளங்கும். இம் மாதேவடிகளை நடுவிற் பெண்ணெனத் திருவலஞ்சுழிக் கல்வெட்டுச்கூறும். Ep. An. Rep. for 1902-3, No. 633 of 1902. ஆகவே, இராசராசனுக்கு இராசேந்திரன், மாதேவடிகள், குந்தவை என மக்கள் மூவர் இருந்தனரென்பத றியக்கிடத்தல் காண்க.

## 5. இராசராசன் வென்றிமேம்பாடும் விருதுப்பெயரும்.

### இராசராசன் வென்றி மேம்பாடு.

இனி, இராசராசன் வென்றிமேம்பாட்டிற்கு இன்றியமையாதது படையெழுச்சியாதலால் அதனை, நன்கறிவதற்கு ஏற்றவைகள் கிடைத்திலவேனும், அவற்றினை ஒருவாறு நாம் துணிவதற்குத் தக்க கருவியாயிருப்பன இன்னவன் சாசனத் தொடக்கத்திற் காணப்படும் மெய்க்கீர்த்திகளேயாம்.

இனி, மெய்க்கீர்த்தி இலக்கணமாவது :—

"சீர்நான் காகி யிரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புக ழெல்லாஞ் சொல்லியு
மந்தத் தவன்வர லாறு சொல்லியு
மவளுடன் வாழ்கெனச் சொல்லியு மற்றவ
னியற்பெயர்ப் பின்னர்ச் சிறக்கயாண் டெனத்
திறப்பட வுரைப்பது சீர்மெய்க் கீர்த்தி"

என்னும் பன்னிருபாட்டியல் விதிக்கிணங்க, நாற்சீர்கொண்ட இரண்டடித் தொடையில், வேந்தன் வென்றிமேம்பாட்டால் விளைந்த மெய்ப்புகழெல்லாம் விளங்க, இன்னவளுடன் இன்னவன் சிறக்க யாண்டெனத் திறப்பட உரைப்பதாகும்.

### இராசராசன் மெய்க்கீர்த்தி.

"திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வெங்கை நாடுங் கங்க பாடியுந்
தடிகை பாடியும் நுளம்பபாடியுங்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்

முரட்டொழிற் சிங்களர் ஈழமண்டலமும்
இரட்ட பாடி யேழரை யிலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
னெழில்வள ரூழியு ளெல்லா யாண்டுந்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் கோராச கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீ ராச ராச தேவர்க்கு யாண்டு" என்பது.

## மெய்க்கீர்த்தி ஏற்பட்ட காலம்.

இம் மெய்க்கீர்த்திகள் இல்லாவிடில், வரலாற் றுராய்ச்சிக்குச் சாசனங்கள் பயன்படாதொழியும். இராசராசனுக்கு முன்னிருந்தவர் சாசனங்களில் மெய்க்கீர்த்தி வரைந்து பின்னர்ச் சாசனந் தொடங்கும் வழக்குக் காணப்படாமையின், அதனை ஏற்படுத்தினவன் இவனேயாவன். அஃதும் இவன் ஆட்சியின் எட்டாம் யாண்டுமுதற் காணப்படுதலின், மெய்க்கீர்த்தி எழுதும் வழக்கம் இவனது எட்டாவதுயாண்டுதொட்டு ஏற்பட்டதெனக் கோடல் சால்புடைத்து.

## படையெழுச்சிக்குமுன் இராசராசன் மேற்கொண்டவை.

இனி இவன் சாசனங்களை ஆண்டுவாரியாக முறைப்படுத்து, அவற்றிலுள்ள மெய்க்கீர்த்திகளில் சொல்லிப் போதரும் வென்றுகொண்ட நாடுகளின் முறையே முறையாக வைத்து ஆராயுமிடத்து, இவன் அரியணை ஏறியபிறகு ஏற்பட்ட சாசனங்களில், எட்டாவது ஆண்டு அதாவது 994-ஆம் யாண்டு வரையிலும் எத்தகைய வெற்றியும் கூறப்படவில்லை. அதனால், ஊக்கம் பெரிதும் உடையவனாகிய இவன் மடிந்திருந்தனன் என்பதமையாது; பிறநாட்டின்மீது படையெடுத்தற்குப் போதிய அளவு படைக்கூட்டல், நாட்டிற்கு அரணமைத்தல், உள் நாட்டுக் குழப்பங்களை ஒழித்தல் என்றின்னவைகளில் காலங்கழித்திருந்தனன் எனக்கொள்வதே தக்கது.

## படையெழுச்சி.

இனி, தான் கருதிய கருவிகள் யாவும் கைவந்தவுடனே, மலைநாட்டின்மீது படைகள் செல்லுமாறு கட்டளையிட்டனன். போர் எப்பொழுது கிடைக்குமென் றெதிர்பார்த்திருந்த தானையும் மலைநாடு நோக்கிச் சென்றது. இப்படைக்குத் தலைமைபூண்டவன் பஞ்சவன் மாராயன் என்பவன். இம்மலைநாடு, பிறர் கிட்டுதற் கரியதாய், மலையும் கடலும் சூழ்தரப் பரசுராமனால் அமைக்கப்பட்டதாகும் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடு கூறும். இதனைச் சாந்திமத்தீவு எனக்கூறுவர். இம்மலைநாட்டுக் கடற்றுறைப்பட்டினமாகிய காந்தளூர்ச்சாலையில் போர் நடந்தது. "பாண்டியர்களையும் சேரமானையும் மலைநாட்டு எறிந்துகொண்ட பண்டாரம்" எனத் தஞ்சை ராசராசேச்சரத்துச் சாசனங்களில் பன்முறையும் கூறப்பட்டிருத்தலின், மலைநாட்டுப் போர்க்களத்தில் இவனை எதித்தவர்கள் பாண்டியரும் சேரமானும் என்பது விளங்கிக் கிடப்பினும், அவர்கள் இன்னவரெனத் தெரியவில்லை. அவ்விருவரும் எதிர்த்துநின் றுவதென்னை, 'எலிப்பகை நாகமுயிர்ப்பக்கெடுவது' போலத் தோல்வியுற்றனர். இக் கன்னிப் போரில் காந்தளூர்ச்சாலைக்கண் நின்ற மரக்கலங்கள் அழிதலுற்றன. அவற்றினை அழித்து மலைநாட்டுப் பண்டாரங்கள் பலவுங் கைக்கொண்டு, தான் பிறந்த நாளாகிய சதயநாள் விழாவை அம்மண்டலத்து நடைபெறச்செய்து மீண்டு பாண்டிநாட்டினை அடைந்தனன். அப்பொழுது அங்கிருந்தவன் பாண்டியன் அமரபுசங்கன் என்பவன். அவனை முறியடித்து அவனுக்குரிய அரணமைந்த நகராகிய உதகையைக் கொளுத்திப் பாழாக்கினன் இராசராசன். பஞ்சவன்மாராயன், விழிஞம் என்னும் துறைமுகத்தைக் கைக்கொண்டனன்.

காந்தளூரிற் கலம் அழித்தது 994

இவ்விழிஞமும் காந்தளூரை யடுத்து மேற்கடற் கோடியில் இருந்தமையின் மெய்க்கீர்த்திகள் இதனை வேருக எடுத்தியம்பில போலும். இவன், 'மலைநாட்டைக் கைக் கொண்டு பதினெண் அரசர் சிரங்களைந்தா' னென விக்கிரம சோழனுலாவும், 'பதினெண் அரசரைக்கொன்று உதகையைக் கொளுத்தினன்' எனக் குலோத்துங்கசோழனுலாவும் கூறு மாற்றல், மலைநாட்டு வென்றியும் உதகை கொண்டமையும் விளங்கிக்கிடப்பினும், அப்போர்க்களத்திற் கொலையுண்ட பதி னெண்மர் இன்னவரென்பது சிறிதும் விளங்கவில்லை. உதகை வெற்றியும் சதயநாள் நடைபெறும் கலிங்கத்துப்பரணியால் வலியுறும். "யாண்டும் செழியரைத் தேசுகொள் கோராச கேசரிவர்மன்" என்னும் இவனது சாசனப்பகுதியால், இவன் பாண்டியர்களை முற்றும் வென்றடக்கியமை விளங்குகின்றது. அது இவனுக்குத் தென்னபராக்கிரமன் என்னும் விருதுப் பெயருண்மையாலும், பாண்டிநாட்டிற் பற்பல விடத்தும் இவன் சாசனம் காணப்படுவதாலும், பாண்டிமண்டலம் இராச ராச மண்டலமென வழங்கப்பெற்றமையாலும், வலியுற்று நிற்றல் காண்க. இவ்வாறு இவன் சேர சோழ பாண்டியர் என்கிற மூவர் நாடாட்சிக் குரிமைபெற்ற பின் இவனுக்கு மும்முடி சோழன் என்னும் பெயருண்டாயிற்று.

இனி, 'காந்தளூர்ச்சாலைக் கலமறுத்து' என்னும் பாடமே தகுதியானது. அதற்கு, கடற்றுறைக் கண்ண தாகிய காந்தளூரில் உண்ணும் சாலைக்கண் நாடோறும் உண்பார் இத்துணையரென உண் கலங்களை வரையறுத்து எனப்பொருள் கோடலே தக்கது எனக் கூறுவர் ஆராய்ச்சியாளர்.

அதன் பின்னர் வெங்கை நாட்டின் நிலைமை இவன் செவிக்கெட்டிற்று. அந்நாடு கீழைச் சாளுக்கிய நாட்டிற்குத் தலைநகராகும். கோதாவரி, கிருட்டிண என்னும் பெயருடன்

இப்பொழுது வழங்குவது. அது அரசனில்லாமையால் குழப்ப முற்றிருந்தது. அதனை அறிந்த இராசராசன், தன் பதினான்காம் யாண்டாகிய 998—99-ல், அதன் மீது படையெடுத்துச்சென்று அமைதியை உண்டாக்கிச் சத்தியவர்மன் என்பவனை அதற்கு அரசனாக்கினன்.

**வேங்கை நாடு 998-99**

வெங்கை நாட்டினைக் கொண்டபின்னர், அப்பிரமேயன் என்னும் படைத்தலைவன் படைகளை நடத்திவர, இராசராசன் கங்கபாடியின் மீது படையெடுத்துச் சென்றனன். கங்கர், பல்லவருள் ஒரு வகுப்பினராவர். அவர்க்கு இடமாதல்பற்றி, இது கங்கபாடியெனப் பெயர் பெற்றது. மைசூர் நாட்டின் கீழ்ப்பகுதியும் அதனை அடுத்துள்ள நாடுகளும் இதனைச் சார்ந்தவைகளாகும். இதற்குத் தலை நகரம் காவிரிக் கரையிலுள்ள தாலக்காடு. இங்கிருந்த கங்கரை வென்றடக்கிக் கங்கபாடியை கைக்கொண்டு, இராசராசபுரம் என அதனைத் தன் பெயரினதாக்கி, அங்கு நின்றும் புறப்பட்டு நுளம்பபாடியைத் தாக்கினன்.

**கங்கபாடி 998-99**

கங்கபாடிக் கருகிப்பது நுளம்பபாடி என்பது. இங்குள்ளவரும் பல்லவ வகுப்பினைச் சார்ந்தவரே. இதனை எளிதிற் கைப்பற்றியதன்றி இவ்விரண்டிற்கும் இடையிலிருந்த தடிகைபாடியையும் தன்ன தாக்கினன். இதற்குத் தடிகைவழி எனவும் பெயருண்டு.

**நுளம்பபாடி தடிகைபாடி 998-99**

இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக நாடுகளைக் கைக்கொண்டு குடமலை நாடு நோக்கி நடந்தது தானை. அங்குக் கோங்காள்வார் என்னும் ஒரு மரபினர் வாழ்ந்திருந்தனர்.

குடமலைநாடு என்றது குடகு. அதனை ஆண்டிருந்தவன் மீனிசா என்பவன். பனசோகே என்னும் இடத்தில் போர் நடந்தது. அப்போர்க்களத்தில் மீனிசா பெருவன்மையுடன் போர் புரிந்தானெனினும், தோல்வியடைந்தான். அதனைக் கேள்வியுற்ற இராசராசன், அவனது வீரச் செய்கையை மெச்சி, அவனுக்கு சத்திரியசிகாமணி கொங்காள்வான் என்ற பட்டஞ்சூட்டி மாளவி என்னும் ஊரை நன்கொடை கொடுக்குமாறு தன் படைத்தலைவன் பஞ்சவன் மாராயனுக்குக் கட்டளையிட, அவனும் அதனை நிறைவேற்றினன். G. O. No. 961, Public, 2nd August 1913, Para 20. Epigraphist Collection No. 623 of appendix B of 1912. இதனால் வீரரை நன்குமதித்து மேம்படுத்துந் தன்மை இராசராசனிடத்தில் விளங்கி நின்றமை காண்க.

குடமலை நாடு 998–99.

அதன்பின் கொல்லத்தின் மீது சென்று, கொல்லம் கொல்லதேசம் கொடுங்கோளூரையும் கைக்கொண்டு, அங்கு இறுமாப்புற்றிருந்த அரசர்களையும், அவர் ஏவலை மேற்கொண்டொழுகிய கடலரசரையும் வென்று கீர்த்திபராக்கிரமசோழன் எனப் பெயர் பூண்டனன். Para 22, G. O. No. 919 Public, 29th July 1912.

கொல்லம்

மேலைச்சமுத்திரக்கரை வெற்றி.

இவன் செய்கை இவ்வாறாக, பஞ்சவன்மாராயன் மேலைச் சமுத்திரக்கரை முழுவதும் படையெடுத்துச் சென்று துளுவர், கொங்கணர், மலையர்களைச் சிறைகொண்டு, சேரர், தெலுங்கர், இரதிகர்களைப் புறங்கண்டு தன் அரசர்க்குப் பெரும்புகழ் நாட்டினன். Para 20, G. O. No. 961, Public, 2nd August 1913.

## மயேந்திர மலையில் வெற்றித்தூண்.

கொல்லத்தினின்று மீண்டு தன்னுடைந்த இராசராசன், ஒரு பெரும்படையுடன் செல்லுமாறு தன் மகன் இராசேந்திரனைக் கலிங்கநாட்டின்மீது அனுப்பினன். கலிங்கமென்பது, கோதாவரியாற்றுக்கும் மகாநதிக்கும் இடையிலுள்ள நாடு. இப்பொழுது வடசர்க்காரிலிருப்பது. கீழைச்சளுக்கருக்கு வாழ்விடம். அங்கு மும்மடிபீமன் என்னும் விமலாதித்தன் அரசாண்டிருந்தனன். இராசேந்திரன் அவனை கலிங்கம் வென்று சிறைகொண்டு வரும்போது கஞ்சத்திலுள்ள மயேந்திரமலையில் வெற்றித் தூண் நாட்டித் தஞ்சையை அடைந்தனன்.

## குந்தவை திருமணம்.

சிறைப்பட்ட விமலாதித்தனை, இராசராசன் பகைவனெனக் கருதி எத்தகைய தீமையும் புரியாது, மிக்க அன்புடன் நடத்தியதன்றித் தன் மகள் குந்தவையை அவற்கு மணஞ் செய்வித்து வெங்கை நாட்டிற்குத் தலைவனுக்கினன். எண்ணித் துணிந்த இவ் வரச சூழ்ச்சியால் கீழைச் சளுக்கருக்கும் சோழருக்கும் நெடுநாளாக இருந்த பகைமை நீங்கிச் சோழ நாட்டு வடவெல்லையிற் குழப்பமும் ஒழிந்தது. அதுமுதற் சளுக்கியர்கள் சோழர்பால் பெண்கொள்ளும் வழக்குடையருமாயினர். அது, விமலாதித்தன் மகன் இராசராசன், கங்கைகொண்டசோழன் மகள் அம்மங்கதேவியையும், அவன் மகன் முதலாங் குலோத்துங்கன், இராசேந்திரதேவன் மகள் மதுராந்தகியையும் மணந்தமையால் விளங்கும்.

இனி, சோழ நாட்டின் வடவெல்லையில் நெடுநாளாக இருந்த குழப்பம் நீங்கவே, இராசராசன் தம்மவர்பால் பகைமை பாராட்டிவந்த இலங்கையர்மீது படையெடுத்துச்

சென்று அங்கிருந்த சிங்களரை வென்றடக்கி ஈழநாட்டினைத் தன்கீழாக்கினன். ஈழமண்டலம், மும்முடி
ஈழம் 1001. சோழமண்டலம் எனவும், அதனைச்சார்ந்த மாதோட்டம் என்னும் ஊர் இராசராசபுரம் எனவும், அதன்கணுள்ள கோயில் இராசராசேச்சரத்து மாதேவம் எனவும், வழங்கி வந்தமையாலும், தஞ்சை இராசராசேச்சரத்துக்கு, ஈழத்தினின்று பணமும் இலுப்பைப்பாலும் அனுப்ப ஏற்பாடு செய்திருந்தமையாலும், ஈழம் இவனது ஆட்சிக்குட்பட்டதென்றறியக்கிடத்தல் காண்க. கொழும்பு பொருட்காட்சிசாலையில் சேர்த்துவைத்துள்ள (Epigraphist Nos. 616 and 618 of appendix B of 1912) சாசனப் பகுதியாலறிக.

இனி, தம் ஆணைக்குட்பட்டவராகிய கருநடதேசத்தார்க்குரிய கங்கபாடி, நுளம்பபாடிகளை உள்ளிட்ட நாடுகளை இராசராசன் கைக்கொண்டது இராட்டிர கூடத்
இரட்டபாடி 1007-8. தாரை உறுத்திற்று. இராட்டிர கூடத்தார்க்கு மன்னவனாக இருந்த கன்னரதேவன், தம் மரபினனாகிய இராசாதித்தனை வஞ்சத்தாற் கொன்றது சோழர்கள் நெஞ்சத்தில் வேரூன்றிக்கிடந்தது. சோழரும் மேலைச்சளுக்கராகிய இரட்டரும், படைவன்மையும் தோளாற்றலும் மிகவும் வாய்ந்தவர். இவ்விருவரும் தம் வன்மையை அளந்தறிதற் கேற்ற காலத்தினை எதிர்பார்த்திருந்தவராதலின், இக் காரணங்களுள் ஒன்றை முன்னிட்டு இராசராசனுக்கும் இராட்டிரகூடத் தரசனான சத்யாசிரயனுக்கும் போர் நிகழ்ந்திருத்தல் வேண்டும். இராட்டிர கூடர் என்பவர் தெக்கணத்திருந்த மகாராட்டிரராவர். மேலைச் சளுக்கிய குலத்தை வேரறுக்க நோக்கமுற்றிருந்த இராசராசன், ஒன்பது நூறாயிரம் பேர்களடங்கிய பெருந்தானை ஒன்றனைத் தன் மகன் இராசேந்திரன்பால் அனுப்பினன்.

அரச கோளரியாகிய அவனும் படைகளை அணிவகுத்துநின்று, விடாமழைபோல அம்புபொழிந்து, செந்நீர் வெள்ளம் பெருக்கெடுத்தோடப், பிணமலை குவியக், கவந்தமாட, மிக்க வீரத்தோடு பொருது, நாட்டைச் சூரையாடி, நகரைக் கொளுத்திப் பாழ்படுத்தி, மகளிர், இளங்குழவி, மறையவர் என்றும் பாராமற் கொன்று, கன்னியரை மனைவியராக்கொண்டு, அன்னவர் குலத்தையும் பாழாக்கி, அளவிலாத பொருளும் பெற்றுச் சினஞ் சிறிது தணிந்து தன்னாட்டை யடைந்தனன். Page 97, G. O. No. 961 Public, 2nd August 1913. இப்போர் நிகழ்ந்தது கி. பி. 1007-8 என ஹோட்டூர் சாசனத்தால் விளங்குகின்றது. இப்போரில், இராசராசனுக்கு வென்றி யென்பதற்கு, "சத்தியாசிரயனை எறிந்து எழுந்தருளிவந்து" எனவும், "சத்தியாசிரய குலகாலன்" எனவும் இராசராசேச்சரத்துச் சாசனங்களில் காணப்படுதலும், இவ்வெற்றிக்காக தட்சிணமேரு விடங்கர்க்கு அருச்சனைக்காகப் பொற்பூக்கள் பல இவன் கொடுத்தது, "ஸ்ரீ பாத புட்பமாக அட்டித் திருவடி தொழுதன பொற்பூ" என S. I. Ins. Vol II. Part IV. Page 7 ஆல் அறியக்கிடத்தலும் சான்றாகும். "இரட்டபாடி ஏழரை யிலக்கமும்" என்னும் இவனது சாசனப்பகுதியும், இவ் வென்றியைக் குறித்ததேயாம். ஏழரை யிலக்கம் என்றது அந்நாட்டின் வருடத்திய வருவாய்; நாட்டின் வருவாயையும் உடன் சேர்த்துச் சொல்லுதல் பண்டை நாளைய வழக்கு. திருவாலங்காட்டுச் செப்பேடுகளும், லீடன் சாசனமும் இவ் வெற்றியை வலியுறுத்தும்.

இராசராசன் இறக்குமளவும் வென்றியில் நோக்கமுற்ற வீரனாதலால், அலைகடல் நடுவிற் பலகலஞ் செலுத்தி, முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும் கைப்பற்றினன். இவ்வாறு இவன் சென்ற சென்ற இடமெல்லாம் வென்று மேம்பட்டு விளங்கின.

மையால், இவனுக்கு "சயங்கொண்ட சோழன்" என்னும் பெயர் உளதாயிற்று. அதுமுதல், தொண்ட மண்டலம் சயங்கொண்ட சோழ மண்டலம் எனும் பெயர்கொடு வழங்கிற்று. இவன், உய்யக்கொண்டான்மலை நாயனார்க்கு, 'ஜயங்கொண்ட சோழன்' என்னும் பொற்பட்டத்தினைத் தன் இருபத்தொன்பதாவது யாண்டிற் கொடுத்துளனாதலின், இவனுக்கு இப்பெயர் ஏற்பட்டது இவ்வருடத்தென்பது வெளிப்படை. S. I. I. Vol II. Page 312.

முந்நீர்ப்பழந் தீவு பன்னீராயிரம் 1013.

வென்றுகொண்ட நாடுகளைப் பெயர்க்கு வென்றதாக விடாமல் அவற்றில் பிரதிநிதிகளை அமைக்கும் வழக்கம் இவன்பால் இருந்தது. அது, இவன் 14-ம் வருடத்தில் கைக்கொண்ட கங்கபாடியைச் சார்ந்த தகடூரைப் பெருந்தரம் பிரம்மாதிராசனுக்குக் கொடுத்து அதற்கு அவனைப் பிரதிநிதியாக்கியமையால் விளங்கும். Para, 19, G. O. No. 665 Public, 28 July 1920.

### தானைகள்.

இனி, இவனுக்கு யானைப்படை, குதிரைப்படை காலாட்படைகளும் இருந்தன. அவை, "மும்மடி சோழத் தெரிந்த ஆனையாட்கள்", "பெருந்தனத்து ஆனையாட்கள்" "சிங்களாந்தகத் தெரிந்த குதிரைச் சேவகர்" "கேரளாந்தகத் தெரிந்த பரிவாரத்தார்" என்றின்னோரன்ன வழக்கால் நன்குணரப்படும்.

### தோல்காப்பியத்துத் தேர்ப்படை கூறுமைக்குக் காரணம்.

இனி, படைகள் நான்காகவும், சாசனங்களில் தேர்ப்படை காணப்படாமையின், இவன் காலத்து அஃது இல்லைபோலும்;

எனின்! அற்றன்று. தமிழ்நில வழக்குப்பற்றி நூல் இயற்றிய ஆசிரியர் தொல்காப்பியனார், "தானை யானை குதிரை யென்ற—நோனா ருட்கு மூவகை நிலையும்" எனத் தொல்காப்பியம் புறத்திணையியல் பதினேழாம் சூத்திரத்துத் தானையுள்ளிட்ட மூன்றையுமே எடுத்துக்கூறிக், குதிரையா னன்றித் தேர் தானே செல்லாமையின், தேர்க்கு மறம் இன் றென்று அது கூறாராயினர். அது பற்றியே, தமிழ வேந்தனாகிய இராசராசன் சாசனங்களும் தேர்ப்படையென வேறே எடுத்துரைத்தில போலும் என் றுணர்ந்து கொள்க.

## படைவகையும் அவற்றின் பெயரும்.

இனி இவன் தற்காப்பின் பொருட்டு, மெய்க்காப்பாளரை யும், குதிரைப்படை ஒன்றினையும் தன்னோடு வைத்திருந்தனன் என்பதை, "பரிவார மெய்க்காப்பாளர்", "உடனிலை குதிரைச் சேவகர்" என்பன கொண்டு உய்த்துணரலாம். இன்னும் ஒவ்வொரு படைக்கலத்து நன்கு பயின்ற தனித்தனி படையும் இருந்தமை, "பண்டித சோழத் தெரிந்த வில்லிகள்" "மூலப் பரிவார விட்டேறு" (விட்டேறு—வேற்படை) என்பவற்றால் துணியலாம். இவன்பால், மெய்யுறைபூண்ட வீரர்படையும் இருந்தது. அது, "உத்தம சோழத் தெரிந்த அந்தளகத் தாளர்" என்பதால் விளங்கும். அந்தளகம்—மெய்யுறை; (coat of mail). படைகளைக் கூறுமிடத்து வாளா கூறாது, இன்னவிடத்து வென்ற தானை இது என்பது புலப்பட, "அழகிய சோழத் தெரிந்த" "அரி துர்க்க லங்கணத் தெரிந்த" "சண்டபராக்கிரமத் தெரிந்த" "விக்ரமாபரணத் தெரிந்த" என்பன போன்ற அடைகொடுத்தே வழங்கப் பட்டமை ஆராயின், தானை வகையும், ஒவ்வொரு தானைக்கும் பெயரும், அவற்றினிடத்து இவன் வைத்திருந்த நன்கு மதிப்பும் அறியலாம்.

### படைஞர்க்கு இராசராசனிடத்திருந்த அச்சம்.

இனி, "வில்லவன் மூவேந்த வேளான் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்குத் தந்த ஆடு" "நித்த விநோத விழுப்பரையன் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப் போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ" "சேனாபதி குரவன் உலகளந்தானன ராஜராஜ மாராயன் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ" என் றின்னோரன்ன பதினான்கு அதிகாரிகள் கோழி (உறையூர்)ப் போரில் தம் செய்கை அரசனது வெறுப் புக்கிடமின்றி முடியுமாறு கடவுளைவேண்டி இராசராசேச்சரத் தில் திருவிளக்கேற்றுதற்கு ஏற்பாடு செய்தமை, தென்னிந்திய சாசனத்தொகுதி இரண்டின் நான்காம் பகுதியிலுள்ள 95ஆம் சாசனத்துக்காணக்கிடத்தலின், இராசராசன், படைகளிடத்துப் பெரிதும் நன்கு மதிப்புடைய னெனினும், தவறு காணின் வெறுத் தொறுக்கும் இயல்பினன் போலும் என்றுய்த் துணர்ந்து கொள்க.

### கடற்படை.

இனி இவன், "முரட்டொழிற் சிங்களர் ஈழ மண்டல மும், முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும்" கொண்டமை மெய்க்கீர்த்தியால் அறியக்கிடத்தலின், இவன்பால், அலைகடல் நடுவிற் பலகலம் நடத்திப் போர்செயவல்ல கடற்படையும் இருந்தவா றுணரப்படும்.

### வேளைக்காரப்படை.

இனி இவைகளையன்றி இவனிடத்து உற்றிடத் துயிர் வழங்கும் வலங்கை வேளைக்காரப்படைகள் பதினான் கிருந்தன. அப்படைஞரது பெற்றி தேறமாட்டாதார் அவரை வேலைக்காரர் எனவே மதித்தனர். அவரோ என்றால், அன்ன ரல்லர்;

'இன்னவாறு செய்வேன், செய்யாதொழியின் இன்ன கேடுறுவேன்', என வஞ்சின மொழிந்து, சொன்னவாறு நடப்பர். கண்ணினைக் காக்கின்ற இமைபோல அரசர்க்குத் தீங்கு நேராமற் காப்பவர். தம் சோர்வால் அரசர்க்கு ஏதாவது கேடு நேருமாயின் தாமும் உடனே தம்முயிரை மாய்ப்பவர். தம் அடியார்க்குக் கேடு நேராமல் முன்னின்று காத்தலின் முருகப் பெருமானை வேளைக்காரன் என்பர் திருவகுப்பு நூலுடையார் எனின், வேளைக்காரர் எத்துணை மேம்பாடுடையர் என்பதாராய்ந்து கொள்க.

## நிலைப்படை.

இனி, சோழர்களிற் பெரியோனாகிய இன்னவன்பால், இப்படைகளை யல்லாமல், வென்றுகொண்ட நாடுகளில் குழப்ப முண்டாகாமற் காத்தற்பொருட்டு 'நிலைப்படையும்' இருந்திருத்தல் வேண்டும் என்றுய்த்துணரத்தக்கது..

## தானைத்தலைவர்கள்.

இனி, இவன் காலத்தில் எல்லாப்படைக்கும் தலைமை பூண்பாரை மகாதண்ட நாயகன் எனவும், ஒவ்வொரு படைக்கே தலைவராயிருப்பாரைத் தண்டநாயகன் எனவும், சேனாபதி எனவும், சாமந்தன் எனவும் வழங்கினர். இவனது பெரும் படைத்தலைவர், மகாதண்டநாயகன் பஞ்சவன்மாராயன் என்பவர். சேனாபதியான ஸ்ரீ கிருட்டினன் ராமனான மும்முடி சோழப் பிரமமாராயனும், சேனாபதி குரவன் உலகளந்தான் என்கிற இராசராச மாராயனும் படைத்தலைவராவர். இவர் களையன்றி அப்பிரமேயன் எனப் படைத்தலைவன் ஒருவன் உண்டு. மாராயம் என்பது அரசனாற் செய்யப்படும் சிறப்பு.

## இராசராசன் விருதுப்பெயர்களும் பிறவும்.

இனி, இராசராசன் அரியணை ஏறியது தொட்டுப் பதினேழாவது யாண்டு வரையினும், சாசனங்கள், பெரும்

பான்மையும் இவனை 'இராசகேசரிவர்மன்' எனவும் சிறு பான்மை 'மும்மடி சோழன்' எனவும் கூறிச்சென்றன. இவற்றுள், மும்மடி என்றது மூன்று மண்டலத்திற்கும் தலைவன் என்பதற்கு அறிகுறியான மும்முடி எனக் கொள்வாராயினர் ஒரு சிலர். அது பொருந்தாது. என்னை? மும்மடி, மும்மடங்கு எனப் பொருள்படுமே யல்லது மும்முடி எனப் பொருள்படுமா றில்லை யாதலால். அன்றியும், மும்மண்டலங்களையும் பின்னரே கொண்டான். ஆதலால், அவற்றைக் கைக்கொள்வதன் முன் மும்முடிக் குரியனாதல் யாங்ஙனம் பொருந்தும்? ஆகவே, மும்மடி என்பதற்கு ஏனையோரைவிட மும்மடங்கு வன்மையுற்றவன் எனக்கோடல் பொருத்தமுடைத்தாதல் காண்க.

இனி, மதுரையைச் சார்ந்த தென்கரைக் கோயின் மண்டபத் தூணொன்றில் காணப்படும் இவனது பதினேழாம் யாண்டுச் சாசனத்தில் (Ep. collection No. 132 of 1910) இவனுக்கு 'இராசாச்ரயன்' என்ற பெயர் காணப்படுகின்றது.

இனி, இவன் சிற்றம்பலத்திற்குச் சகம் 926 அதாவது கி. பி. 1004-ஆம் யாண்டில் நன்கொடையளித்தனன் எனக் 'கோங்குதேச ராசாக்கள்' என்னும் உரைநூல் கூறுகின்றது. அதனால், இவனுக்கு 'இராசராசன்' 'சிவபாதசேகரன்' என்னும் பெயர்கள் அங்கு வழங்கப்பட்டன என்ப. அதற்கேற்ப இவனது பத்தொன்பதாம் யாண்டுச் சாசன மொன்றில் இவனுக்கு இராசராசன் என்னும் பெயர் முதன் முதலிற் காணப்படுகின்றது. இவனது கடைசி வருடமாகிய இருபத்தொன்பதாம் யாண்டில் இவனைச் 'சயங்கொண்டசோழன்' எனச் சாசனங்கள் வழங்கத் தொடங்கின.

இவனது ஆட்சிக்காலம் கி. பி. **985** முதல் **1013** வரையினும் ஆகும்.

இனி, இவைகளையன்றிச் சோழமண்டலத்துப் பெரும் பகுதியாகிய வளநாடுகட்கும் பிறவற்றிற்கும் முன்மொழியாகத் தொடர்புற்று வழங்கிய சத்திரிய சிகாமணி, இராசேந்திர சிங்கன், பாண்டிய குலாசனி, கேரளாந்தகன், இரட்டகுல காலன், சத்தியாசிரயகுலகாலன் என்பன இவனது விருதுப் பெயர்களாகும்.

இன்னும் இவனுக்கு நித்தவிநோதன், இராசவித்தியாதரன், நிகரிலி சோழன், உய்யக்கொண்டான், சநநாதன், பெரிய பெருமாள் என்ற பெயர்களும் வழங்கின.

---

## 6. இராசராசன் அரசியன் முறை. இராச்சியப்பரப்பும், அதன் பாகுபாடும் அளவும்.

இனி, இராசராசன் வீரமும் வென்றி மேம்பாடும் உடையனாய்ப் புகழொடு வாழ்ந்தவனாதலால், இவனது அரசியன் முறையும் ஆராய்ந்து மகிழத்தக்க தொன்றேயாம். அது இவன், இராச்சியப் பரப்பும் அதன் பாகுபாடும், ஊர்ச்சபைகள் அமைப்பும் அவற்றின் கடமையும், முத்தமிழ் வளர்த்த முறையும், இவனது ஆட்சித் துணையும் அரசியல் அங்கமும், இன்னவன் நாட்டில் நீதி மன்றமும், ஆவணக்களரியும், நாணயங்களும் நால்வகை அளவு கருவிகளும் என்னும் இவற்றின் வழக்கியலும், ஊர் முழுமையும் அளந்து, கட்டின காணிக்கடனும் ஏனைய வரிகளும் இறுத்த விதமும் என்னும் பகுதிகளைத் தன்பாற் கொண்டது. இவற்றை ஆராயவே அரசியன் முறை தானே விளங்கும்; ஆதலால் இவைகளை ஆராய்வாம்.

## சோழராச்சியப் பரப்பு.

இனி, இராசராசன் காலத்துச் சாசனங்களில், அருண் மொழி தேவ வளநாட்டு இங்கணாட்டுப் பாலையூர், சத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருநாறையூர் நாட்டு அரக்கன்குடி, உய்யக்கொண்டான் வளநாட்டுத் திரைமூர் நாட்டு நெற்குப்பை, இராசேந்திர சிங்கவளநாட்டு இன்னம்பர் நாட்டு மருத்துவக் குடி, இராசாச்ரய வளநாட்டுப் பாச்சிற்கூற்றத்து ஆன்பனூர், நித்த விநோத வளநாட்டு வெண்ணிக் கூற்றத்து நகரம், பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்து தஞ்சாவூர், கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்துக் கருப்பூர், இராசராச வளநாட்டுப் பொய்கை நாட்டுத் திருநெய்த் தானம் எனவும், தொண்ட மண்டலமான சயங்கொண்ட சோழமண்டலத்து ஆமூர்க்கோட்டத்து ஆமூர் நாடு எனவும், பாண்டி நாடான இராசராச மண்டலத்துப் பெரும்பூர் நாட்டு அண்டக்குடி எனவும், ஈழமான மும்மடிசோழ மண்டலத்து மாப்பிசும்பு கொட்டியாரமான இராசராச வளநாடு எனவும், மலைநாட்டுவெள்ளப்ப நாட்டுப் புதுக்கோடு எனவும், கங்கபாடிப் பதி நாட்டு ஆலூர் எனவும், நுளம்பப்பாடியான நிகரிலி சோழப்பாடிப் பறிவைநாடு எனவும் வந்துள்ள இவைகளைக் கொண்டு ஆராயுமிடத்து, சோழராச்சியம், சோழமண்டலம், இராசராசமண்டலம், சயங்கொண்ட சோழமண்டலம், மும் மடி சோழமண்டலம், மலைநாடு, கங்கபாடி, நுளம்பபாடி, தடிகைபாடி, குடமலை நாடுகளையும் தன்பாற்கொண்டு பரந்து கிடந்த நிலப்பரப்பாகும் என்றுணரலாம்.

## இராச்சியத்தின் பாகுபாடு.

இனி, இராச்சியம், பல மண்டலங்களாகவும்; மண்டலங் கள், வளநாடு, கோட்டம், கூற்றங்களாகவும்; வளநாடுகள் நாடுகளாகவும்; நாடுகள், ஊர்களாகவும் பகுக்கப்பட்டன.

## சோழமண்டலமும் அதன் உட்பிரிவுகளும்.

இனி, சோழமண்டலம், அருண்மொழி தேவ வளநாடு, சத்திரிய சிகாமணி வளநாடு, கேரளாந்தக வளநாடு, இராசேந்திர சிங்க வளநாடு, இராசாச்ரய வளநாடு, நித்தவிநோத வளநாடு, உய்யக்கொண்டான் வளநாடு, இராசராச வளநாடு என்னும் ஒன்பது பிரிவுகளைத் தன்பாற் கொண்டிருந்த தென்று அறியலாம்.

## சோழராச்சியத்தில் அடங்கிய நாடுகள்.

இனி, அருண்மொழிதேவ வளநாட்டினை உள்ளிட்ட ஒன்பது வளநாட்டினும் காணப்படும் ஊர்கள், தஞ்சாவூர், கும்பகோணம், மாயூரம், நாகபட்டினம், நன்னிலம், மன்னார் குடி, திருத்துறைப்பூண்டி, திருசிராப்பள்ளி, பிரம்பூர், முசிரி, குளித்தலை, உடையார்பாளையம் தாலூக்காக்களில் உள்ளன வாக இருத்தலின், சோழ மண்டலம் என்றது தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி சில்லாக்களைத் தன்பாற்கொண்டது எனவும்; இராசராச மண்டலமாகிய பாண்டிய மண்டலம், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி சில்லாக்களைத் தன்பாற் கொண்டது எனவும்; தொண்ட நாடான சயங்கொண்ட சோழ மண்டலம் வடவாற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு, சித்தூர் சில்லாக்களைத் தன்பாற்கொண்டது எனவும்; ஈழமான மும்மடி சோழ மண்டலம் இலங்கை எனவும்; கங்கபாடி, நுளம்பபாடி, தடிகை பாடி, குடமலை நாடுகள் என்பன, மைசூரின் முழுப்பகுதியும், குடகும், அனந்தப்பூர் சில்லாவின் ஒரு பகுதியும் அடங்கிய இடப்பரப்பு எனவும்; மலைநாடு என்றது சேரநாடாகலின், மலையாளமும் திருவாங்கூரும் தன்கண் அடங்கப்பெற்றது எனவும் அறிந்துகொள்க.

## இராச்சியத்தினை அளந்தவருள் இருவர்.

இனி, தன் இராச்சியத் தடங்கிய நிலப்பரப்பினை அளந்து இறைகட்டினாலன்றி, விளைநிலங்கள் இத்துணை என்பதும், அவற்றால் வருதற்குரிய காணிக்கடன் இவ்வளவு என்பதும் அறிதற்கருமை நோக்கி, இராசராசன் தன் பதினேழாம் யாண்டில் நிலமுழுமையும் அளப்பதற்கு ஏற்பாடு செய்தனன். (Ep. An. Rep. for 1913, p. 96). இராசராசேச்சரத்து வெட்டப்பட்டுள்ள சாசனங்களில் 'அளந்தபடி நிலம்' எனப் பலவிடத்துக் காணப்படுவதும் இதற்குச் சான்றாகும். இவ் வேலையை மேற்கொண்டவருள் சேனாபதி குரவன் உலகளந் தான் ராசராச மாராயன் என்பவரும் ஒருவர். படைத்தலைவ ராகிய இவர்க்கு நிலமுழுவதும் அளவிட்டமைபற்றி 'உலகளந் தான்' என்னும் பெயர் அளிக்கப்பட்டது போலும்.

இன்னும், கேரளாந்தக வளநாட்டுத் தட்டைக்களநாட்டுத் தேவனாம்பள்ளித் திருநோம்பளூர் மாதேவர் ஆலயத்துப் பணி மக்கள், கோயிற் காரியங்களுக்காக ஏற்பட்ட பொருளைக் கவர்ந்துகொண்டதைக் கண்டறிந்து உலகளவித்த திருவடிகள் சாத்தன் என்பவர் தண்டம் இறுத்தனர் என்று (Ep. Coll. No. 199 of appendix B of 1917) அறியக்கிடக் கின்றது. அதிலுள்ள உலகளவித்த என்னும் சொற்றொடர், திருவடிகள் சாத்தன் என்பாரும் உலகளத்தலை மேற்கொண்டி ருந்தாருள் ஒருவர் என்பதை உணர்த்தி நிற்றல் காண்க.

## நிலம் அளந்த கோலின் பெயர்.

இனி, நிலம் அளந்த கோலினை உலகளந்த கோல் என்பர், (திருவையாற்று ஒலோகமாதேவீச்வரக் கல்வெட்டு), சிற்றம்பலக்கோல், பங்கிட்டகோல் எனவும் வழங்கினர். (S. I. I. Vol. III Part I). அக்கோல் பதினாறுசாண் அளவுடையது (S. I. I. Vol. III part I. p. 16).

## நிலவகையும், அளவும், தரமும்.

நிலம்—நீர்நிலம், கொல்லை, காடு என்று மூவகைப்படும். (S. I I. Vol. III Part I p. 25). அவை, நூறுகுழி கொண்டது ஒருமா ஆகவும், இரண்டாயிரங் குழி கொண்டது ஒரு வேலியாகவும் அளக்கப்பட்டன. "வேலி நூற்றுக் கலமாக வந்தநிலம் பதினாலே எட்டுமா" "வேலி நூற்றுக்கல வரிசைக்கீழ் வந்தநிலம் ஏழரையே முக்காணி" எனக் காணப் படுதலின், நூற்றுக்கல விளைவுள்ளதும் அதற்குக் கீழ்ப்பட்டது மென வேலி இருதரமாகப் பிரிக்கப்பட்டிருந்தது. (ஓலோகமா தேவீச்வரக் கல்வெட்டு.)

## மிக நுட்பமான நில அளவு.

"இறையிலி நீங்கு நிலம் முக்காலே இரண்டுமாக்காணி அரைக்காணிக் கீழ் அரையே மூன்றுமாவின் கீழ் மூன்றுமா அரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்காணிக் கீழ்முக்காலே ஒருமா" (Vol. II part I p. 56) என்ற இத்துணைச் சிறுபகுதி அளவுள்ள நிலத்தையும் அளந்து காணிக்கடன் ஏற்படுத்தப்பட்டதெனில், நிலம் எத்துணை நுட்பமாக அளக்கப் பட்டுளதென்று தெரிந்துகொள்க.

## நிலத்திற்கு எல்லை தெரித்துக் கல் நடுதல்.

இனி, "நாற்கோலாசறுதியில் நாட்டின புள்ளடிக்கல்லே யுற்று" எனவும், "இப்பரிசு கல்லுநாட்டி எல்லைதெரித்து" எனவும், "எல்லைதெரித்துக் கல்லும் கள்ளியும் நட்டு" எனவும் வருதலின், நிலத்தை அளந்து எல்லை தெரித்துப் புள்ளடிக்கல் நடும் வழக்குண்மை தெரியலாம். (ஓலோகமா தேவீச்வரம்.)

## நிலம் குடிகட்கே உரியது.

இனி, "ஸ்ரீ ராஜராஜதேவர் எங்கள் நகரத்தில் எடுப்பித் தருளின அரிஞ்சிகை ஈச்வரத்து மஹாதேவர்க்கு இங் நாற்பே

றெல்லையுள்ளு நடுவுப்பட்ட............உண்ணில மொழிவின்றி இப்புலிக் குன்றத்து நிலம் எப்பேர்ப்பட்டதும் இத்தேவர்க்கு வேண்டு நிவந்தங்களுக்குத் தேவதான இறையிலியாகச் சிலா லேகை செய்து கொடுத்தோம் மேற்பாடியான ராஜாஸ்ரயபுர நகரத்தோம்." (Vol. III. Part I. p. 25) என்றதனால், நிலம் குடிகட்கே உரித்து; தனக்கு வேண்டுமாயில், குடிகள் தம்மில் ஒருப்பட்டுச் சாசனம் செய்துதர அரசன் கொள்வானே யல்லது, வலிதிற்கொண்டிடான் என்பது புலனாகும்.

## கண்ணாறுகளும் அவை பாயும் நிலச் சதுரங்களும்.

இனி, கருந்திட்டைக்குடி வசிட்டேச்வரர் ஆலயத்தின் தென்புற மேல்புறச் சுவர்களில் வெட்டப்பெற்றுள்ள இராச ராசன் பதினேழாம் யாண்டுச் சாசனத்து, "ஏழாங் கண்ணாற்று இராஜகேஸரி வாய்க்காலுக்கு தெற்கு 3-ம் சதிரத்து வடக் கடைய நிலம் மூன்று மாவும்...........4-ஆம் கண்ணாற்று இராஜகேஸரி வாய்க்காலுக்கு தெற்கு 2-ஆம் சதுரத்து தெற் கடைந்த காவிலே" (S. I. I. Vol. V. p. 508) எனக் காணப்படுதலால் கண்ணாறுகள் பலவெட்டுவித்து, இன்னின்ன கண்ணாறு இவ்வளவிவ்வளவு சதுரத்துக்குப் பாய்வது என்று ஏற்பாடு செய்திருந்தமை பாராட்டத்தக்கது.

## இறையிலி நிலங்கள்.

இனி, அளக்குமிடத்துப் பலர்க்கும் பொதுவாகப் பயன் படக்கூடிய ஊர்நத்தம், ஊர்க்களம், குடியிருக்கை, திருமஞ் சனக்குளம், ஊருணிகுளம், புலத்திற் குளங்கள், ஓடைகள், நீரோடுகால், கன்றுமேய்பாழ்நலம், கொட்டாரம், பெருவழி, தளிச்சேரி, ஈழச்சேரி, வண்ணாரச்சேரி, கம்மாண்சேரி, பறைச் சேரி, பறைக்குளக்குழி, சுடுகாடு, கற்கிடை (Vol. II Part I) என்றவைகள் இறையிலியாக நீக்கப்படும்.

## 7. ஊர்ச்சபைகள் அமைப்பும் அவற்றின் கடமையும்.

### ஊர்ச் சபைகள்.

இனி, இராசராசன் காலத்தில் அவன் ஆணைப்படி ஊர் தோறும் சபை அமைக்கப் பெற்றிருந்தது. அச்சபையினர் தத்தம் ஊரிலுள்ள நிலங்கட்கு அரசிறை ஏற்படுத்தமையும், அதனைத்திரட்டி அரசனுக்குச் செலுத்தினமையும், ஈராண்டு நிரம்பி மூன்றாம்யாண்டு தொடங்கவும் இறை கொடாதவர் நிலத்தைப் பறிமுதல் செய்து ஊர்ப்பொதுவாக்கி விற்றமையும், நாட்டைச் சுற்றிப்பார்த்து நன்மை தீமைகளை ஆராய்ந்து தக்கவாறு தண்டம் விதித்தமையும், இராசராசேச்சரத்திற்கு மெய்க்காவலாளர், கணக்கர், பரிச்சாரகம் செய்வோர்களை அனுப்பிவந்தமையும், சாசனங்களால் அறியக்கிடப்பினும் அவற்றுள் காரிய நிறைவேற்று கழகத்தினரை (நிர்வாகசபையினரை)த் தேர்ந்தெடுக்குமாறு காணப்படவில்லை. எனினும் சம்வத்சரவாரியர், தோட்டவாரியர், ஏரிவாரியர், பொன்வாரியர், பஞ்சவாரியர் என்ற உறுப்பினராய பெருமக்கள் இருந்தனராதல் முன்னோர் சாசனங்களிற் போலவே இன்னவன் சாசனங்களிலும் காணப்படுகின்றது. ஆகவே அன்னவரைத் தேர்ந்தெடுக்குமாறும் முன்னோர் முறையினை ஒட்டியே இன்னோன் காலத்தும் இருந்திருத்தல் அமையும் எனக்கருதி உணர்தற்கிடமிருத்தலின், அம்முறையினை ஈண்டுச் சுருங்க உரைப்பதும் இன்றியமையாததாயிற்று.

### உறுப்பினராகத் தேர்தற்குரியார்.

இனி, காரிய நிறைவேற்றுகழக உறுப்பினரை (நிர்வாக சபை அங்கத்தினரை)த் தேர்ந்தெடுக்குமிடத்து, காணிக்

கடன் செலுத்தற்கேற்ற கால்வேலி நிலமும் சொந்த மனையும் உடையராய், மறைகளையும் ஆகமங்களையும் நன்கு தேர்ந்து அவற்றைப் பிறர்க் குணர்த்தவும் வல்லராய், காரியம் நிறை வேற்றுவதிற் றிறமைவாய்ந்தவராய், முப்பத்தைந்துக்கு மேற் பட்டு எழுபத்தைந்துக் குட்பட்ட வயதினராய், நல்ல வழி யில் ஈட்டிய பொருளும் தூய வாழ்க்கையும் பெற்றவராய், மூன்று யாண்டுக்குட்பட்டு எந்தக் காரிய நிறைவேற்றுக் கழகத்தினும் உறுப்பினராக இருந்திராதவராய் இருப்பவரே தேர்ந்தெடுக்கத் தக்கவராவர். இன்னும், அரைக்கால் வேலி நிலமே உடையராய், ஒரு மறையைக் கற்றவராய், நான்கு பாடியங்களுள் ஒரு பாடியத்தைப் பிறர்க்கு உணர்த்தவும் வல்ல ராய் இருப்பவரும் உறுப்பினராகத் தேர்ந்திடற்கு உரியவராவர். சுருங்கச் சொல்லுமிடத்துக், காணிக்கடன் இறுத்தற்கேற்ற நிலமும், சொந்த மனையும், அறத்தாற்றில் ஈட்டியபொருளும் உடையராய்க், கல்வி நிரம்பி ஒழுக்கத்தில் இழுக்கின்றிக் காரியம் நிறைவேற்றுதலில் வல்லுநரே உறுப்பினராகத் தேர்ந்துகோடற் கேற்றவர் என்று அறிந்துகொள்க.

### உறுப்பினராகத் தேர்ந்திடத் தகாதவர்.

இனி, எந்தக் காரிய நிறைவேற்று கழகத்திலாவது உறுப்பினராக இருந்து கணக்குக் காட்டாதிருந்தவரும், அவர்க்குச் சிற்றவ்வை, பேரவ்வை, அத்தை, மாமன் என் றின்னவர் மக்களும், அவர்தம் மக்களும், தந்தையும், தாயுடன் பிறந்தவன், தந்தையொடு பிறந்தவன், தம்முடன் பிறந்தவன், மனைவியொடு பிறந்தவன், பெண்கொடுத்த மாமன், உடன் பிறந்தாள் கணவன், மகளை மணந்தவன் என்றிவர்களும், இன்னவர் சுற்றத்தினரும் தேர்ந்தெடுக்கத் தகாதவராவர். இவர்களையன்றி, நெருங்கிய சுற்றத்தினளாகிய ஒரு பெண்ணைத் தகாப்புணர்ச்சி செய்தா ரென்றுவது, பார்ப்பனக்

கொலை, கள்ளுண்டல், களவாடல், ஆசான்மனைவியைக் கூடல் என்ற இவைகளில் எதையேனும் செய்தவரென்றுவது கிராம குற்றப்பதிவு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டவரும், அவர்க்கு உறவினரும், ஆராய்வின்றிக் காரியத்திற் றுணியும் இயல் பினரும், பிறர் பொருளை வவ்விஞேரும், கள்ளக் கையெழுத் திடலாகிய கூடலேகை (Forgery) செய்தவரும், தீமையான காரியங்களைச் செய்ததன் பொருட்டுக் கழுதைமீ தேற்றப் பட்டவரும், இழிகுலத்தவரின் கூட்டுறவு காரணமாகச் சாதி யினின்றும் விலக்குண்டு கழுவாய் (பிராயச்சித்தம்) செய்யப் பெருதவரும் தேர்ந்திடத் தக்கவரல்லர்.

## இறக்குமளவும் உறுப்பினராகத் தேரத்தகாதவர்.

இன்னும், எத்தகைய கையூட்டுக் (Bribe) கொண் டாரும், கிராமத்துரோகியெனக் கருதப்பட்டவரும், பொது மகளிரோடு கூடிஞேரும், கழுவாயால் தூயவரானபோதினும் வாணளின் முடிவுவரையும் உறுப்பினராகத் தேர்ந்திடத் தகாத வராவர்.

## உறுப்பினரைத் தேர்ந்திடுமாறு.

இனி, மேற்கண்ட விதிக் கிணங்கிக் காரிய நிறைவேற்று கழக உறுப்பினரைக் குடவோலை வாயிலாக ஆண்டுதோறும் தேர்ந்தெடுப்பார்கள். தேர்ந்தெடுக்குமிடத்து, தர்மகிருத்தி யம் கடைகாணும் வாரியர், அரசன் ஆணைப்படி, நாட்டில் சபை கூடுதற்கென்று அமைத்த பெருமாளிகையில், இளைஞர் முதல் முதியோர் வரையுமுள்ள எல்லோரையும் குறைவறக் கூட்டி, அன்று அவ்வூர் நம்பிமார் அனைவரையும் அழைத்து வந்து அம் மாளிகையினுள் இருக்கச் செய்து, அவர்க்கு நடுவிற் குடத்தினை வைப்பார்கள். அவருள் வயது முதிர்ந் தார் ஒருவர் அக்குடத்தினை மேலே உயர்த்து, அதனுள் ஒன்று

மில்லை என்பதை எல்லோரும் அறியக்காட்டிக் கீழே வைத்த பின்னர், ஒவ்வொரு ஊரையும் முப்பது பகுதியாக (Ward)ப் பகுத்து, ஒவ்வொரு பகுதியிலுள்ள ஒவ்வொருவரும் தகுதியுடையரெனத் தமக்குத் தோன்றும் ஒருவர் பெயரைத் தனித்தனி ஓலையில் எழுதி, எழுதிய ஓலைகளை ஒருங்கு சேர்த்து, இன்ன பகுதியைச் சார்ந்த ஓலை என்பது விளங்க, அப்பகுதியின் பெயர் எழுதிய வாயோலை பூட்டிக் கட்டிக் குடத்தில் இடுவர். இவ்வாறு முப்பது பகுதியினரும் இட்டபின்னர், அம் முதியார், அங்கு நடைபெறுவது இன்னதென் றறியாத ஒரு சிறுவனைக் கொண்டு, அக் குடத்தினின்றும் ஒரு ஓலைக் கட்டினை எடுப்பித்து, அதனை அவிழ்த்துப் பிறிதொரு குடத்திலிட்டுக் குலுக்கி, அவற்றுள் ஒரு ஓலையை அவனைக்கொண்டெடுக்கச்செய்து, அதனைத் தாம் வாங்கி, அங்கிருக்கும் கரணத்தான் கையிற் கொடுப்பர். அவன், தன் ஐந்து விரல்களையும் அகலவிரித்து அகங்கையில் அதனை ஏற்று, அதன்கண் எழுதப்பெற்றுள்ள பெயரை யாவரும் அறிய வாசிப்பன். அங்கிருந்த நம்பிமார் அனைவரும் அவ்வோலையைப்படித்திடுவர். அதன் பின்னர் அப்பெயர் ஒரு ஓலையின்கண் எழுதிக்கொள்ளப்படும். இவ்வாறு மற்றைய கட்டுகளையும் ஒன்றன்பின் ஒன்றாக முன் போல் எடுப்பித்துப் பிரித்துக் குடத்திட்டுக் குலுக்கி, முன்னையிற் போல ஒவ்வொரு ஓலையாக எடுக்கச் செய்து எழுதிக்கொள்வார்கள்.

## தேர்ந்தெடுத்தாரை வகைப்படுத்தல்.

6582

இவ்வண்ணம் எழுதிய முப்பதின்மருள் கல்வியின் முதிர்ந்து வயதின் மூத்தார் பன்னிருவரைச் சம்வத்சரவாரியர் எனத் தேர்ந்திடுவர். மற்றைய பதினெண்மருள் பன்னிருவர் தோட்டவாரிய ராகவும், அறுவர் ஏரிவாரிய ராகவும் தேர்ந்திடப்படுவர். பின்னரும், இம்முறையே முப்பது ஓலைகளைத்

தேர்ந்து குடத்திலிட்டுக் குலுக்கி, அவற்றுள் பன்னிரண்டினை எடுப்பித்து, அறுவரைப் பொன்வாரிய ராகவும், அறுவரைப் பஞ்சவாரிய ராகவும் ஏற்படுத்துவார்கள். ஆகவே, இக் காரிய நிறைவேற்று கழகம், சம்வத்சரவாரியர், தோட்டவாரியர், ஏரிவாரியர், பொன்வாரியர், பஞ்சவாரியர் என்ற ஐவகைப் பட்ட வாரியரைத் தன்பாற் கொண்டதாகும்.

## உறுப்பினர் கடமையும் காலவரையறையும்.

இனி, இக் கழக உறுப்பினர், ஏதேனும் தவறுதல் காரணமாக இடையில் விலக்குண்டா லல்லது, தம்மைத் தேர்ந்தெடுத்த அன்றுதொட்டு முந்நூற்றறுபது நாள் வரையினும் தம் வேலையை நடத்துதற்கு எத்தகைய தடையும் உடையரல்லர். அவருள், நியாய விசாரணை செய்து கொலைக்குக் கொலை, ஏனையவற்றிற்குச் சிறை தளை சங்கிலிபுகுதல் முதலிய தண்டம் விதித்தலும், கோயிற் காரியங்கள் ஒழுங்குற நடக்கின்றனவா என்றாராய்தலும், ஊரைச் சுற்றிப்பார்த்து நன்மை தீமைகளை நாடி வேண்டுவ செய்தலுமாகிய பொதுக் காரியங்களை மேற்கொள்வது சம்வத்சரவாரியர் கடமையாகும். ஏரி முதலிய நீர் நிலைகளைப் பழுதுறுமற் பாதுகாத்தலும், விளைச்சலுக்கு வேண்டும் நீரைச் சரிவரப் பாய்ச்சுவித்தலும் ஆகியவற்றை ஏரிவாரியக்காரரும், நிலத்தைப் பொறுத்தனவற்றைத் தோட்டவாரியக்காரரும் மேற்கொண்டிருந்தனர். பலவகையானும் திரட்டப்படும் காசுகளை ஆராய்வு செய்வது பொன்வாரியக்காரர் பொறுப்பாக இருந்தது. பஞ்சவாரியக்காரர் கடமை இன்னதெனத் தெரியவில்லை.

## உறுப்பினர் கூடும் பொது மாளிகை.

இனி, இங்குக் கூறிய கழக உறுப்பினரைப் பெருமக்கள் என்ப. இவர்கள் கூடுதற்கு ஊர்தோறும் மாளிகை அமைக்கப்

பெற்றிருந்தது. அது, நாலூர் என்னும் சிற்றூரார் இராசராசன் எனப் பெபரிய தொரு பெருமாளிகையிற் சபை கூடியமை 322 of 1910-இநில் காணப்படுதலின் அறியப்படும். இஃதன்றி மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்தில் பெருமக்கள் குறைவறக் கூடுதற்கென இராசராசன் எடுப்பித்த சேம்பியன் மாதேவிப் பெருமண்டபமும் அதனை வலியுறுத்தும். No. 178 of appendix B of 1915.

## அவைக்களம் கூடு நாளை அறிவிக்குமாறு.

இனி, ஊர்ச் சபையார் தாம் அவைகூடுதற்குரிய நாளைக் காளம் ஊதுவித்து உறுப்பினர்க்கு உணர்த்திவந்தனர் என்பதும், இன்றியமையாதாயின் பகற்காலத்தன்றி இராக்காலத்தும் சபை கூடிக் காரியங்களை நடத்தினர் என்பதும் இராசராசனது பதினாறும் யாண்டுச் சாசனத்துக் காணலாம்.

## அரசன் திருமுகத்தை ஊர்ச்சபை ஏற்குமுறை.

இனி, அரசன் திருவாய்மலர்ந்திடத் திருவாய்க் கேள்வி மாராயன் கற்றுச் சொல்லத் திருமந்திர ஓலை, திருமந்திர ஓலை நாயகன் என்பார் இருவரும் கையெழுத்திட்ட பின்னர், உறுதி பெற்ற ஆணைத் திருமுகத்தை விடையிலதிகாரி ஊர்ச்சபைக்குத் தூதுவர் வாயிலாக அனுப்புவர். அதனைக் காணுமுன் அவைக்களத்தார் எழுந்து எதிர்சென்று தொழுது வாங்கித் தலைமேற்கொண்டு மேம்படுத்துவர். இதனை, "ஸ்ரீகோவிராஜராஜகேசரி வர்மரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு இருபத்தொன்றாவது நாட்டொழுக்குத் திருமுகம்வர நாந்தொழுந் திருமுகங்கண்டு எதிரெழுந்து சென்று தொழுது வாங்கித் தலைமேல் வைத்துப் பிடிசூழ்ந்து பிடாகை நடந்து எல்லை தெரித்துக் கல்லும் கள்ளியும் நட்டு அறவோலை செய்த நிலத்துக்கு" என்ற ஆனைமங்கலச் சாசனத்தா லறிக.

### கழகத்துக் கரணத்தான்.

இனி, மேற்கூறிய கழகத்தார் பணித்தவற்றைச் செய்ப வன் கரணத்தான் அல்லது 'மத்தியஸ்தன்' எனப்படுவான். நல்ல வழியில் ஈட்டிய பொருளும் நல்லொழுக்கமும் உடைய வனையே கணக்கனாக ஏற்படுத்துவர். அவன் எழுதிய கணக் கைப் பெருமக்கள் வேண்டும் போது, பிறனைக்கொண்டு காட்டாது, தானே காண்பித்து அவர்களால் நன்கு மதிக்கப் பட்டாலொழிய அடுத்த ஆண்டில் கணக்கெழுதும் உரிமை அவனுக்கு உண்டாகமாட்டாது. கணக்கனுக்கு ஒரு நாளைக்கு நாழி நெல்லும் வருடத்திற்கு ஏழு கழஞ்சு பொன்னும் ஓரிணைக் கூறையும் சம்பளம் கொடுக்கப்படும். கணக்கன், ஆராய்வு செய்வதற்குக் கணக்கைப் பெருமக்களிடம் கொடுக்கும்போது, மழுவைக் (Red-hot iron) கையில் ஏந்தி உறுதிமொழி கூறிக்கொடுத்திடக் கையில் ஊறுபாடு இல்லையாயின், அவனுக் கேற்பட்ட ஏழு கழஞ்சு பொன்னின் மேலும் காற்பங்கு பொன் கூட்டிக்கொடுப்பதும், ஊறுபாடு நேருமாயின் பத்துக் கழஞ்சு பொன் தண்டமும் ஆக்கினையும் ஏற்படுத்துவதும் வழக்கென் பர். G. O. No. 99 Home (Mis) 29th August 1916, p. 116.

## 8. இராசராசன் காலத்தில் உழவு, வாணிபம், கைத்தொழில்களின் நிலையும், அவன் முத்தமிழ் வளர்த்த முறையும்.

இனி, "புளிங்கறி யமுதுக்கு வாழைப்பழ மூன்றும் அமுதுசெய்ய வாழைப்பழம் பதினைஞ்சும் ஆக வாழைப்பழம் பதினெட்டுக்கு நெல்லு ஐஞ்ஞாழியும், கறியமுதுக்கு நெல்லு அறுநாழியும், கறியமுதுக்கும் தயிரமுதுக்கும் உப்பு உழக் காழாக்குக்கு நெல்லு உழக்காழாக்கும், போனகக் குருத்து

பன்னிரண்டுக்கு நெல்லு இருநாழியும், அடைக்காயமுது பாக்கு முப்பதும், வெள்ளிலையமுது அறுபதுக்கும் நெல்லு நாழி (S. I. I. Vol. II Part II p. 127-128) என்ற சாசனப்பகுதியால், இராசராசன் காலத்தில் பண்டமாற்றுகள் நெல்லால் நடைபெற்றமை கொண்டு, நெல்லின் விளைவு மிகுதி அறியக்கிடத்தலின், உழவின் மேம்பாடு உணரலாம்.

இன்னும், நெல் முதலிய பல்வகைப் பண்டங்கள் விற்கப் படும் பேரங்காடிகளும், ஆடைகளும், நவமணியும் பொன்னும், அவற்றாலாகிய நாகரீக அணிகலங்களும், வெள்ளி செம்பு முதலியவற்றாற் செய்யப்பட்ட கலங்களும் பகரும் மறுகுகளும் கூறப்பட்டிருத்தலின் வாணிக வளனும் உய்த்துணரலாம்.

இவைகளையன்றித், தஞ்சை இராசராசேச்சர விமானத் திற் காணப்படும் சிற்பமும், அதன் உட்பிரகாரத்தில் இன்று எழுதியது போலத் தோன்றும் ஓவியமும் என்னும் தொழில் நலங்களும் இன்றும் காணலாம்.

உழவு, வாணிபம், கைத்தொழில் என்ற மூன்றும் நிலை பெற்றிருக்கும் நாட்டில், செல்வமும் நாகரீகமும் செழித் திருப்பது பெருவழக்கு. செல்வமும் நாகரீகமும் மிக்குள்ள நாட்டில், கல்வி உன்னத நிலையில் இருப்பது உண்மையன்றோ?

இனி, இவன் கல்வியின் அருமை பெருமைகளை நன்கு தேர்ந்தவன். கற்ற அறிஞரைப் பாதுகாத்து அவர் இயற்றும் நூல்களை நன்குமதிப்பவன். இவன் காலத்தில், திருநாரை யூரிலிருந்த நம்பியாண்டார் நம்பி என்னும் புலவர் பெருமானைத் துணைகொண்டு நெடுங்காலமாக மறைந்து கிடந்த சைவத் திருமுறைகளை வெளிப்படுத்தினவன். திருவிசைப்பா இயற்றிய கருவூர்த்தேவர், கண்டராதித்தனுரை உள்ளிட்ட புலவர் பெரு மக்கள் இருந்தனர். தண்டமிழ்ப் புலமை வாய்ந்த இவன்

மகன் பண்டித சோழனும் இருந்தனன். இவர்களை யன்றி, கல்லூரிகள் பல இருந்தன. தமிழின் சீரிய நிலையைக் காட்டும், "தஞ்சை விடங்கர் நம்பிராட்டியார் திருவிழா எழுந்தருளும் போது ஏறியருளும் திருவரங் கணியக் குடுத்த பொன் தண்டவாணிக்கு கால் மாற்று நல்ல பொன் மூவாயிரத்து ஐஞ்ஞூற்றுக் கழஞ்சும் தண்டவாணிக்கு ஒரு மாற்றுத் தண்ணிய பொன் ஆயிரத்து ஐஞ்ஞூற்றுக் கழஞ்சும் ஆகப் பொன் ஐயாயிரக் கழஞ்சு" எனவும்,

"உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் ஆட்டைப் பெரிய திருவிழாவுக்குத் திருக்கொடி யேற்று நான்று திருப் பறை யறைவு கேட்பிக்குங் கடிகையார் ஐவர்க்கு பேரால் காசு அரையாகக் காசு இரண்டரையும், ஆடவல்லார் எழுந்தருளு நாள் இன்றுள்ளிட்டு மூன்று நாளென்று திருப்பறை யறைவு கேட்பிக்குங் கடிகையார் ஐவர்க்கு பெயரால் காசு அரையாகக் காசு இரண்டரையும்" எனவும்,

"திருவிழா எழுந்தருளிப் புகுந்தவாறே திருவிழா எழுந் தருளின தேவர்க்குத் திருவமுது செய்ய" எனவும்,

"இத் திருவிழா நாட்களில் ஒரு திருவிழாவில் உடையாரை பதின்மர் சிவயோகிகள் சேவித்து வந்தால் சேவித்து வந்த சிவயோகிகள் பதின்மரும் உடையார் சாலையிலே உண்ணக்கடவர்" எனவும்,

"குளம்பினின்றும் கொம்பளவுஞ் செல்ல ஒரு முழமே அறுவிரலே ஐஞ்சு தோரை உசரம் உடைய கனபொள்ளலாகச் செய்த ருஷபம் ஒன்று" எனவும்,


"உடையார் பெரிய பண்டாரம் தஞ்சை விடங்கனிலேய் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லா னென்னும் மரக்காலால் அளக்கக்கடவ நெல்லு ஐம்பதின் கலம்" எனவும் காணப்படும். இவைபோல்வன செந்தமிழ்ப் பொலிவுமிக்க சாசனப்பகுதிகள்.

மிகப் பல உண்டு. இவற்றால் இயற்றமிழ் நிலைமையை இனிதுணரலாம்.

இனி, இராசராசனுக்கு, இராசவித்தியாதரன் எனவும் பெயர் உண்டு. அது, அரசகந்தர்வன் எனப் பொருள்படும். கந்தர்வர் இசை நாடகங்களை நன்குபயின்றவர். இவனும் இராசவித்தியாதரன் என்னும் தன் பெயர்க்கு ஏற்ப, பாடலினும் ஆடலினும் தனக்குள்ள ஆர்வ மிகுதியால், பல்வேறு தளிகளினின்றும் ஆடலினும் பாடலினும் வல்லநானூறு பதியிலார்களைக் கொணர்ந்து வீடமைத்துக் குடியேற்றி, அவர்கட்கு ஆண்டிற்கு நூறுகலநெல் கொடுத்து ஆதரித்தனன். அதுவுமன்றி, அவர்களைக் காந்தர்விகள் என்றும், அவர்கட்கு ஆடல் பாடல்களைப் பயிற்றவல்ல ஆடவர்களைக் காந்தர்வர் என்றும் மேம்படுத்தினன். காந்தர்விகள் பலரும் காந்தர்வர் எழுபத்தைவரும் இருந்தனர். நகரில் ஆடரங்கும் நாடகசாலையும் எங்கும் ஏற்படுத்தினன். ஆண்டுதோறும் வைகாசிப்பெருவிழாவில், இராசராசேச்சர நாடகம் நடிப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தனன். இசை நாடகங்களில் வல்ல நாடகமய்யன், சாக்கை, கானபாடி, காமரப்பேரரையன், வாத்தியமாராயன், ஆரியம் பாடுவார், தமிழிசை பாடுவார் முதலியோரும் இருந்தனர். இராசராசேச்சரத்தில் நாடோறும் திருப்பதியம் விண்ணப்பம் செய்வதற்காக இசைத்தமிழ் வல்லவர் நாற்பத்தெண்மரை அமைத்திருந்தனன். வீணை, மொரலியம், வங்கியம், கொட்டிமத்தளம், முத்திரைச்சங்கு முதலிய இசைக்கருவிகளில் வல்லார் பலர் இருந்தனர். இவைகளால், இவன் இசை நாடகங்களை எவ்வாறு வளர்த்தனன் என்பதை நன்குணரலாம்.

ஆகவே, இதுகாறும் கூறியவற்றால், இராசராசன் காலத்தில், இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ்களும் மிக்குயர்ந்த நிலையில் இருந்தன என்று ஐயம் சிறிதுமின்றிக் கூறலாம்.

இராசராசன் காலத்து வழங்கிய உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் அடியிற் காண்க.



இவ்வெழுத்துக்கள் சாசனங்களைப் படித்தறிய விரும்புவார்க்குப் பயன்படுமாறு இங்குக் காட்டப்பட்டன.

---

## 9. ஆட்சித்துணையும் அரசியல் அங்கமும் பிறவும்.

இனி, இராசராசன் பரந்த நோக்கமும் சிறந்த கொள்கையும் உடையனாய் நாகரீகமுற ஆட்சி புரிந்தவன் என்பதை அடியில் வருவன கொண் டறியலாம்.

### அமைச்சர்கள்.

இனி, மந்திர ஓலை நாயகர் கிருஷ்ணன் இராமனான மும்மடி சோழ பிரம்மமாராயன், அரசூருடையான் இராயிரவன்.

பல்லவராயனை மும்மடி சோழ போசன், பருத்திக்குடையான் வேளான் உத்தமசோழன், மதுராந்தக மூவேந்த வேளான் என ஆனைமங்கலச் செப்பேட்டிற் காணப்படுதலின், அமைச்சர் கள் பலருண்மை அறியலாம்.

## உடன் கூட்டத்ததிகாரிகள்.

இனி, இராசராசன் அக்கால வழக்கிற்கிணங்க, வேண்டிய வாறு எதனையும் தானே நடத்துதற்குரிமை பூண்டவனெனி னும், "உடன் கூட்டத் ததிகாரிகள்" என்றும், "அதிகாரிகள் ராஜேந்திரசிங்க மூவேந்த வேளார்" என்றும், அதிகாரிகள் காஞ்சிவாயிலுடையார் உதய திவாகரன் தில்லையாளியாரான இராசராச மூவேந்த வேளார் என்றும் காணப்படுதலால், மந்திராலோசனை சபையார் பலருடனிருந்து ஆராய்ந்து காரியம் நடத்தினமை புலனாகின்றது.

## அரசகாரியம் பார்ப்போர்.

இனி, "நம் கருமமாராயம் ஆரூரன் அரவணையனை பராக்கிரமசோழ மூவேந்த வேளானும், தத்தன் சேந்தனை செம்பியன் மூவேந்த வேளானும், அருங்குன்ற முடையான் பொற்காரியும், க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருநாரையூர் நாட்டுக் கர்க்குடையான் பிசங்கன் பாலூரான மீனவன் மூவேந்த வேளானும்" என்றற் றொடக்கத்துப்பெயர்கள் ஆனை மங்கலத்துச் சேப்பேட்டிற் காணப்படுதலின், அரசகாரியத்தை முட்டின்றி நடத்தும் கருமமாராயம் பலர் இருந்தமை வெளிப் படை.

## அரசியல் அங்கத்தினர்.

இனி, இவர்களையன்றி, "திருவாய் மொழிந்தருளின படிக்கு வரியிலார் வரியிலே இட்டு" எனவும், "இப்படிகணக் கிலும் இட்டுக்கொள்ளக் கடவர்களாகவரிக்குக் கூறுசெய்வார்க்

கும் சொன்னோம்" எனவும், "புரவுவரி ஆலங்குடியான்" எனவும், "வரிப்பொத்தகம் பரித்தியூர்க்கிழவன் சிங்களவெண்காடன்" எனவும், "பட்டோலைப் பெருமான் அம்பலத்தாடி" எனவும், "விடையதிகாரி உய்யக்கொண்டான் எழுத்து" எனவும் சாசனங்களிற் காணப்படுதலின், வரியால் வந்த தொகையைக் கணக்கிற் பதிவு செய்யும் வரியிலாரும், அதனை இன்னின்னதற்குச் செலவிட வேண்டுமெனப் பாகுபாடு செய்யும் வரிக்குக் கூறுசெய்வாரும், அரசிறை நீங்கிய ஊர்களினின்றும் வருதற்குரிய வரிகளுக்குக் கணக்கு வைக்கும் புரவுவரியும், குத்தகைக்கு விட்ட நிலங்கட்கு அட்டவணை வைக்கும் வரிப்பொத்தகமும், காரியக் குறிப்பெழுதும் பட்டோலைப்பெருமானும், வந்த வோலைகளைப் பார்வையிட்டு விடையெழுதும் விடையதிகாரியும் இருந்தனராதல் தெரிந்துகொள்க.

### நாட்டை வகைசெய்வோர் அதனைக் கண்காணிப்போர்.

இனி, "ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு யாண்டு இருபத்தைஞ்சாவது ஆமூர்க்கோட்டம் வகை செய்கின்ற புதுக்குடையான் ஏகதீரன் ஐம்பதின்மன்" எனவும், திருவடந்தை வராகப்பெருமாள் ஆலயத்தின் மேலைச்சுவரில் வெட்டப்பட்டுள்ள இராசராசன் பதினேழாம் ஆண்டுச் சாசனத்தில் "நாடுவகை கற்றன் ஆதித்தனான தான மூவேந்த வேளான் மாராயன்" எனவும் வந்திருத்தலின், ஒவ்வொரு நாட்டையும் கூறுபட அளவிடுவோரும் (Surveyor) "நாடு கண்காட்சி இராமன் குமரனான சோழ மூவேந்தவேளான் மாராயன்" எனக் காணப்படுதலின் நாட்டைக் கண்காணிப்பாரும் இருந்தனராதல் அறியலாம்.

### நாட்டைச் சுற்றிப்பார்த்து நன்மை தீமைகளை ஆராய்வோர்.

இனி, "கோராஜராஜகேசரிவர்ம்மற்கு யாண்டு எ-வது படுவூர் கோட்டத்து மீயாறு நாட்டுத் தீக்காலிவல்லத்துத் திருத்-

தீக்காலி ஆழ்வாரை இவ்வாட்டை அய்ப்பசித்திங்கள் பௌர்ந்ந மாசியும் இரேவதியும் பெற்ற விஷுவில் சோம கிரகணத்தி னன்று மதுராந்தகன் கண்டராதித்தனார் ஆழ்வாரை சகச்ர கலச மாட்டுவிக்கவந்து திருவடி தொழுது நிற்க, ஆழ்வார்க்குக் காட்டுகின்ற திருவமுதும் இருநாழியரிசித் திருவமுதாய் கறிய முதும் நெய்யமுதும் தயிரமுதும் இன்றியே நொந்தாவிளக்கும் ஆலசியமாயிருக்கக் கண்டு, திருக்கோயில் சிவபிராமணரையும் தீக்காலி வல்லத்துச் சபையாரையும் அழைத்து, இத்தேவ ருடைய ஆயமும் வியயமும் திருவாணைக்கும் திருவோலைக்கும் உரியவண்ணஞ் சொல்லுக வென்று வினவ, சிவபிராமணரும் தீக்காலி வல்லத்துச் சபையாரும் சொல்ல (S. I. I. Vol. III p. 102), எனவும் இராசராசனது நான்காம் யாண்டில் மது ராந்தகன் கண்டராதித்தனார், ஐவரடங்கிய கூட்டத்துடன் போந்து திருமாற்பேறு அக்னீச்வரர் கோயில் அதிகாரிகளை ஆராய்ந்து தண்டம் இறுத்தினர் (Ep. An. Rep. for 1911 p. 69) எனவும் அறியக்கிடத்தலின், அதிகாரிகள் அடிக்கடி நாட்டைச் சுற்றிப்பார்த்து நன்றும் தீதும் ஆராய்ந்து தக்க தண்டஞ்செய்தற்கு உரிமை பூண்டிருந்தமை விளங்கும்.

இன்னும், " ஒய்மாநாட்டைச் சார்ந்த பட்டின நாட்டுப் பட்டினத்தில், பூமீச்சுரர் ஆலயத்திற்குச் செலவு திட்டம் ஏற் படவில்லை என அக்கோயில் தேவகன்மிகள் அறிவித்துக் கொண்டதின்மேல், தேவகன்மிகளையும் தேவதான நிலத்தை வேளாண்மை செய்வோரையும் வரவழைத்து, நிலத்தில் விளைவு இத்துணை என்று தெரிந்துணர்ந்து, அதற்கேற்ப அக்கோயி லுக்குச் செலவு திட்டம் அமைத்தனர், அரசூருடையான் ஆரூரன் உதயதிவாகரன் அருண்மொழி மூவேந்த வேளார்" என இராசராசனது பதினேழாம் யாண்டுச் சாசனத்தால் அறியக் கிடத்தலின், இராசராசன் காலத்தில் தேவதான நிலங்களும்

கோவிலுக் கமைத்த நிபந்தங்களும் எத்தகைய நிலையில் இருக்கின்றன என்று நாட்டைச் சுற்றிப் பார்த்து ஆராய்வதற்கு மதுராந்தகன் கண்டராதித்தனர், திருவடிகள் சாத்தனர், அருண்மொழி மூவேந்த வேளாரை யுள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அரசாங்க அதிகாரிகள் பலர் இருந்தமை நன்குணரலாம். G. O. No. 1003, Home (Education), 16th August 1919, para 15 and 16.

## நீதிமன்றம்.

இனி, " நடுவிருக்கும் புள்ளமங்கலத்து பரமேச்வரபட்ட சர்வக்ரதுயாஜியும், நடுவிருக்கும் வெண்ணை நல்லூர் தம்மடி பட்டனும்" என்பாரை உள்ளிட்டு நால்வர் பெயர் ஆனைமங்கலச் செப்பேட்டில் வருதலைக்கொண்டு, மன்றத்திருந்து வழக்காராய்வோர் உளராதல் தெரிதலின், நீதிமன்றம் இருந்ததென்று ஊகிக்கலாம்.

## ஆவணக்களரி.

இனி, " இந்நான் கெல்லைக்குட்பட்ட தரமிலி மிகுதிக் குறைவுபட்ட குழி சூா. இக்குழி அறுநூறுக்கு எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றாடு நற்காசு 20. இப்படி இருபதும் ஆவணக்களரியே காட்டி காப்பிட்டு கைசெலவறக் கொண்டு விற்று விலைப்பிரமாணஞ் செய்துகொண்டு மண்ணற விற்று பொருளறக்கொண்டோம்" என்னும் சாசனப் பகுதி கொண்டு, அக்காலத்து ஊர்தோறும் ஆவணக்களரி (Registration Office) இருந்ததென்பதையும், நிலத்தை விற்பவர் வாங்குவோர் ஆகிய இருவரும் ஆவணத்துடன் ஆவணக் களரிக்குச் சென்று நிலத்தின் விலையையும் நான்கெல்லையையும் தெரித்துத் தாம் இசைந்தமைக்கு உறுதிமொழி கூறிப் பின்னர் ஆவணம் காப்பிடப்பெற்றுத் திரும்பினரென்பதையும் அறியலாம்.

### எல்லா மதத்தினர்க்கும் சமவுரிமை.

இனி, "சோணாட்டும் சோணாட்டுப்படும் புறணி நாடுகளிலும் தொண்டை நாட்டிலும் பாண்டிநாடான ராஜராஜ வளநாட்டிலும் பார்ப்பன ஊர்களிலும் வைகானச ஊர்களிலும் சமணர் ஊர்களிலும் காணி உடையார்" என்ற இராசராசனது இருபத்து நான்காம் யாண்டுச் சாசனத்தையும், சத்திரிய சிகாமணி வளநாட்டுப் பட்டினக் கூற்றத்துள்ள நாகபட்டினத்தில் கடாரத்தரையன் பௌத்தப்பள்ளி எடுப்பிக்கவும், அதற்கு இராசராசப் பெரும்பள்ளி எனத் தன் பெயரிடவும் இவன் உடன்பட்டதன்றி ஆனைமங்கலம் என்னும் ஊரைப் பள்ளிச் சந்தமாகக் கொடுத்ததுங் கூறும் ஆனைமங்கலச் செப்பேட்டையும் நோக்குமிடத்துச், சைவத்திற் பெரிதும் ஈடுபட்டிருந்த இவன் காலத்தில், சைவர்க்கேயன்றி வைணவர், சமணர், பௌத்தர்கட்கும் சம உரிமை இருந்தமை பாராட்டற்பாலது.

### நாணயங்கள்.

இனி, இவன்காலத்தில் செம்பினாலும் பொன்னினாலும் செய்யப்பெற்ற காசுகள் இருந்தன. அவை, 'இராசராசன் காசு' (Epigraphist No. 141 of appendix B of 1902) எனப்படும். பொற்காசுகளில், வாசிபடாமற் செல்லும் ஈழக்காசு என ஒன்றிருந்தது. (S. I. I. Vol. V. p. 508) ஈழம்-பொன். இஃதன்றிக் காய்ச்சி உருக்கி வெட்டி நாணயமாக்கினும், மாற்றும் நிறையும் தூய்மையும் குன்றாதெனை அதிகாரிகளால் ஆராய்வு செய்ததற்கு அறிகுறியாகத் துளையிடப்பெற்ற துளைப்பொன்னும் உண்டு. G. O. No. 919 public, 29th July 1912.

### எடுத்தளவைக் கருவிகள், அவற்றால் நிறுத்தவை.

இனி, இவன்காலத்தில், எண்ணல், எடுத்தல், முகத்தல் நீட்டல் என்ன நான்குவகைப்பட்ட அளவைகளில், எடுத்த

லாகிய நிறுத்தல், மணிகளும் பொன்னும் வெள்ளியுமாகில், கழஞ்சு மஞ்சாடி குன்றி என்னும் அரச முத்திரையிட்ட குடிஞைக் கல்லாலும்; செம்பு பித்தளை வெண்கலம் தரா என்பனவும், சர்க்கரை, கடுகு, மிளகு, புளி என்பனவும், பலம் என்னும் நிறை கல்லாலும் நிறுக்கப்பட்டன. பொன்னின் மாற்றறியும் ஆணி இருந்தது. அதற்குத் தண்டவாணி என்று பெயர்.

## சேர் முதலிய நிறுத்தலளவைகளில்லை.

இனி, செம்பு பித்தளை முதலியன, "செப்புக் குடம் ஒன்று நிறை மூவாயிரத்து எண்பத்து முப்பலம்" என்றாற்போல எத்துணையாயினும் பலத்தால் நிறுக்கப்பட்டனவேயன்றி, இற்றை நாளையில் வழங்கும் சேர், வீசை, துலை முதலியவற்றால் நிறுக்கப் பெறாமையின், இந் நிறுத்தற் கருவிகள் அக்காலத்தில் வழக்கில் இல்லை என்று ஊகிக்கலாம்.

## முகத்தலளவைக் கருவிகள், அவற்றால் முகந்தன.

இனி, நெல், அரிசி, பயறு, பருப்பு, உப்பு, நெய், பால், தயிர் முதலியன செவிடு, ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி, குறுணி, பதக்கு, தூணி, கலம் என்ற முகக்குங் கருவிகளால் அளக்கப்பெற்றன. அரச முத்திரை யிட்ட ஊர் மரக்காலுக்கு இராசகேசரி என்று பெயர். அருண்மொழித்தேவன் எனவும் மரக்காலுக்குப் பெயர் வழங்கிற்று. கோயில் மரக்காலுக்கு ஆடவல்லான் என்று பெயர்.

## நீட்டலளவைக் கருவிகள்.

இனி, நீட்டலளவை தோரை, விரல் சாண், முழம் என்பவற்றால் நடைபெற்றது. அதனை, 'இருமுழமே ஒரு விரலே இரண்டுதோரை நீளமும்' என்ற சாசனப்பகுதியால் அறிக.

### இராசராசன் காலத்து அளவை வாய்ப்பாடு.

**நிறுத்தலளவை :—**

2 குன்றி = 1 மஞ்சாடி
20 மஞ்சாடி = 1 கழஞ்சு
(S. I. I. Vol. II Part I Page 8.)

**முகத்தலளவை :—**

5 செவிடு = 1 ஆழாக்கு
2 ஆழாக்கு = 1 உழக்கு
2 உழக்கு = 1 உரி
2 உரி = 1 நாழி
8 நாழி = 1 குறுணி
2 குறுணி = 1 பதக்கு
2 பதக்கு = 1 தூணி
3 தூணி = 1 கலம்
(S. I. I. Vol. II Part 1 Page 48.)

**நீட்டலளவை :—**

8 தோரை = 1 விரல்
12 விரல் = 1 சாண்
2 சாண் = 1 முழம்
(S. I. I. Vol. II Part I Page 10)

### நாகரீக அணிகலங்கள்.

கண்டநாண், புல்லிகைக்கண்ட நாண், பாசமாலை, மாணிக்கத்தின் தாலி, வாகுவலயம், பதக்கம், அரதனவளையல், அரதனக் கடகம், பவழக் கடகம், திருக்கைக்காறை திருப்பட்டிகை, அரதன மோதிரம், நவரத்தின மோதிரம், மாணிக்கத்தின் உழுத்து, வயிர உழுத்து, சோனகச்சிடுக்கின் கூடு, பிருஷ்ட கண்டிகை, ஸ்ரீ சந்தம் என்ற மணிபதித்த அணிகலங்களும்; திருமுடி, வீரபட்டம், உதரபந்தனம், இராசாவர்த்தம், வயிர சரயலம், மூன்றுக அடுத்துவிளக்கின கண்டத்துடர், புறத்துடர், ஏகாவல்லி, திரிசரம், பஞ்சசரி, சப்தசரி, திரள்மணி வடம், தாலிமணிவடம், பொன்னுணிற்கோத்த மாணிக்கத்தின் திரு, பொன்னின் பட்டைக்காறை, திருக்களாவம், திருமகரம்,

திருக்குதம்பை, தோடு, வடுகவாளி, கொட்பு, பட்டைமேற் குண்டுவைத்து விளக்கின வளையல், கைக்கடகம், திருக்கால் வடம், திருவடிக்காறை, திருக்கால் மோதிரம் என்றின்னோ ரன்ன பொன்னணிகலங்களும்; முத்தின் சூடகம், முத்தின் சிடுக்கு, முத்துமாத்திரை என்னும் முத்தணிகலங்களும் பலப் பல இருந்தமை இராசராசேச்சரத்துள்ள சாசனங்களில் பரக்கக் காணலாம். இக்காலத்தில் சுரை என வழங்குவதை 'நிலையாணி' எனவும், திருகாணி என்பதை 'ஓடாணி' எனவும் வழங்கினர்.

## சோனகச்சிடுக்கு உணர்த்தும் வரலாறு.

இனி, மேற்கூறிய அரதனக்கலங்களில், 'சோனகச் சிடுக்கின் கூடு' என்பது ஒன்றாகும். அதன் முற்பகுதியாகிய சோனகர் என்பது கிரேக்கர் அல்லது அரபியரைக் குறிக்கும் பெயராதலால், தென்னிந்தியாவில் பதினோராம் நூற்றாண்டில் சோனகர் செல்வாக்குற்றிருந்தமை அறியலாம்.

## காணிக்கடன்.

இனி, விளையும் நெல்லில் ஆறில் ஒரு பகுதியினைக் காணிக் கடனாகக் கொடுப்பதுண்டு. "இறைகட்டின நிலத்தால் காணிக் கடன் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக் காலால் அளக்கக்கடவநெல்லும் இடக்கடவ பொன்னுங் காசும் பேசிக் கல்லில் வெட்டின" (Vol. II Part I p. 54) என் னும் சாசனப்பகுதியால், நெல்லேயன்றிப் பொன்னுங் காசும் இறை கொடுத்தமை காண்க.

## காணிக்கடன் இறுதவர் நிலத்தைப் பறிமுதல் செய்து விற்றல்.

இனி, "ஈராண்டு நிரம்பி மூவாண்டு தத்தங் காணியான நிலங்களுக்கு அவ்வவ்வூர்களிலாரோடும் ஊரிடுவரிப்பாடு இறை இறுது போனார் காணி, உடையாரைத்தவிர ஊர்நிலமாய் அவ்

வவ்வூர்களிலாரே விற்றுக்கொள்ளப்பெறுவார்களாகவும்" என்னும் இராசராசன் இருபத்து நான்காம் யாண்டு கூ௬-ச ஆம் நாளில் திருவாய் மொழிந்தருளின ஆணைப்படி (Vol. III Part I p. 14.) ஈராண்டு கழிந்து மூன்றும் யாண்டு தொடங்கவும் இறை கொடாதவர் நிலங்கள் பறிமுதல் செய்து ஊர்ப் பொதுவாக்கொண்டு விற்கப்பட்டமை அறிக.

## தண்ணீர் வரி.

இனி, 'நிலைநீர்ப்பாட்டம்' 'ஒழுக்குநீர்ப்பாட்டம்' எனக் காணப்படுதலின், ஏரி, குளங்களிலுள்ள நிலை நீரையும் ஆறுகளினின்றும் ஒழுகு நீரையும் பாய்ச்சிக் கொள்வதற்கு வரி ஏற்பட்டிருந்தமை காண்க.

## ஏனைய வரிகள்.

இனி, தண்ணீர் வரியை யன்றிக் கண்ணாலக்காணம், குசக்காணம், இலைக்கூலம், தறிப்புடவை, செக்கிறை, இடைப்பாட்டம், நல்லா, நல்லெருது, நாட்டுக்காவல் உள்ளிட்ட பல்வகைத்தாய வரிகளும் இருந்தமை லீடன் சாசனத்தால் அறியலாம். இவற்றுள் நாட்டைக்காப்பது காரணமாக ஏற்பட்ட நாட்டுக்காவலைப் படிகாவல் எனவும் வழங்கினர்.

## பொருள்களைக் குறித்த இடத்து விற்றற்கு ஏற்பாடு.

இனி, "கோவிராஜராஜ ராஜகேஸரி வன்மர்க்கு யாண்டு கஎ ஆவது காலியூர்க்கோட்டத்து தன் கூற்று சிவ சூளாமணி மங்கலமாகிய ஸ்ரீ விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலத்து இவ்வாட்டை தன்மவாரியப் பெருமக்கள் உள்ளிட்ட மஹா சபையோம்.........பணித்த எழுத்து.........இவ்வூரில் வெற்றிலை விற்பார் பிடாரி கோவிலன்றி விற்றுரை ஏரிவாரியப் பெருமக்களே ஏரிக்கு முதலாக கழஞ்சுபொன் தண்டலு கொள்ளப் பெறுவாராகவும் இப்பரிசு பணித்தோம் மஹாஸபையோம்"

என்ற சாசனப் பகுதியால், எந்தப் பொருளையும் குறித்த இடத்தன்றி வேறிடத்து விற்பார்க்குத் தண்டம் விதிக்கும் வழக்குண்மை காண்க.

கடைத்தெருவிற் பிறவூரார் விற்பவற்றிற்கு அங்காடிக்கூலி.

இனி, "சேற்றூர்க் கூற்றத்து பிரமதேயம் நாலூர் பட்டப் பெருமக்க ளுள்ளிட்ட பெருங்குறிப் பெருமக்களேம் எங்களூர் திருமயானத்து ஸ்ரீ மூலஸ்தானத்து மஹாதேவர்க்கு நாங்கள் விற்றுக் குடுத்த எங்களூர்க் கடைத்தெருவில் அங்காடிக் கூலியாவது பிறவூர் நின்று நெல்லும் அரிசியும் மற்றும் கிடந்து விற்பன குவாலால் நாழிகொள்ளப் பெறுவதாகவும், நிறுப்பன நிறையால் ஒரு பலம் கொள்ளப் பெறுவதாகவும், வெற்றிலைக் கூடையால் ஓரோ பற்றும், பாக்குக் கூடையால் இரண்டு பாக்கும் கொள்ளப் பெறுவதாகவும்" என்பவற்றால், பிறவூரினின்றுங் கொடுபோந்து தம்மூர்க் கடைத்தெருவில் விற்ற பொருட்குப் பெருமக்கள் அங்காடிக் கூலி ஏற்படுத்தவாறறிக. பெருங்குறி—பேரவை.

அரசன் வழங்கும் நிலதானங்கள்.

இனி, தானஞ்செய்யப்படும் நிலங்களுள், சைவ வைணவ ஆலயங்கட்குக் கொடுக்கப்படும் நிலங்கள் தேவதானம் எனவும், சைன பௌத்த ஆலயங்கட்கு அளித்தவை பள்ளிச்சந்தம் எனவும், பார்ப்பனர்க்குத் தந்தவை பட்டவிருத்தி எனவும், அறச்சாலைக் கென்று விடப்பட்டவை சாலாபோகம் எனவும் பெயர் பெறும்.

அரச ஆணை பிறந்த காலமும் இடமும் குறித்தல்.

இனி, "உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் தஞ்சாவூர்க் கோயிலினுள்ளால் இருமடி சோழனின் கீழைத் திருமஞ்சன சாலை ஸ்தானஞ் செய்தருளாவிருந்து.........ஸ்ரீ விமானத்துக்

கல்லில் வெட்டுகவென்று திருவாய் மொழிஞ்சருள வெட்டின" "உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் தஞ்சாவூர்ப் பெரியசெண்டு வாயில் சித்திரக்கூடத்து தெற்கில் கல்லூரியில் எழுந்தருளி யிருந்து திருவாய் மொழிந்தருளினபடி வெட்டின" ஸ்ரீ ராஜ ராஜதேவர்க்கு யாண்டு இருபத்தொன்றாவது நாள் முந்நூற்று நாற்பதினால் சீக்காலி வல்லத்து தென்பக்கத்துக் கோயிலின் உள்ளால் மாளிகை மேலைக்கல்லூரியில் எழுந்தருளிப் பரி சட்டஞ் சாத்தியருளா நின்று" என்பவற்றால் அரசன் இன்ன இடத்தில் இன்ன காரியம் செய்யும்போது இவ்வாணை பிறந்தது என்று குறிக்கும் வழக்கிருந்தமை காண்க.

## அரசனும் நாடுகளைச் சுற்றிப்பார்த்து வருதல்.

இனி, அதிகாரிகளே யல்லாமல் அரசனும் நாடுகளைச் சுற்றிப்பார்த்து ஆராய்வு செய்வதுண்டு என்பதை, இராச ராசன் இருபத்தேழாம் யாண்டில் நாடுகளைச் சுற்றிக்கொண்டு திருவெறும்பூர்க்கு எழுந்தருளியபோது உடன் போந்த சிறு குடையான் காளி ஆதித்தன் என்பவர், திருவெறும்பூர் ஆலயத்து வரவு செலவு கணக்குகளை ஆராய்ந்தமையால் அறியலாம். Ep. Collection No. 109 of Appendix B of 1914.

## அரசன் சிறப்புப்பெயர்களை வழங்கல்.

இனி, சேனாதிபதி குரவன் உலகளந்தானான ராஜராஜ மாராயன், கண்டராச்சன் பட்டாலகனான நித்தவிநோத விழுப் பரையன், ஈராயிரவன் பல்லவரையனான மும்மடி சோழ போசன், பெருந்தரங்கோன் சூற்றியான அருமொழிப் பல்ல வரையன், அமுதன் தேவனான ராஜவித்தியாதர விழுப்பரையன் என்ற பெயர்களின் பிற்பகுதிகளில் வந்துள்ள நித்தவிநோதன் மும்மடி சோழன், அருமொழி, ராஜவித்தியாதரன் என்பன இராசராசனுக்குரிய பெயர்கள். இவைகளை அற்றைநாளையில்

அரசன் அளித்திட அதிகாரிகளும் பிறரும் தம் இயற்பெயரோடு இச்சிறப்புப் பெயர்களையும் சேர்த்து வழங்கியவாறு காண்க.

### பகைவர் நாட்டைச் சூறையாடலும் எரியூட்டலும்.

இனி, போர்மேற் செல்லின், காழ்த்த பகைவரெனின், அவரது நாட்டைச் சூறையாடலும், நகரை எரியூட்டிப் பாழ்படுத்தலும், இளங்குழவி முதல் எவரையும் கொலைபுரிதலும், திறைகொண்டு அரசனைச் சிறைகோடலும் வழக்கென்பதை இரட்டபாடி கலிங்கங்களின் மீது இவன் காலத்து நிகழ்ந்த படையெழுச்சிகளால் அறியலாம்.

### இறைகோடாதாரைத் தொழுவிலிடல்.

இனி, "தூதரோடும் காவலோடும் அதிகாரஞ் செய்வாரிடைக்கேய் செல்லக்காட்ட நாங்களும் அதிகாரஞ் செய்வார் மரத்தொழுவிலே இருக்கச்சொல்ல" எனவும், "இக்காணிவிற்றுக் காசுவைக்கவென்று இப்படையிலாரும் எங்களை நீரிலும் வெயிலிலும் இட்டுப் பலவேதினைக்கு மாற்றுது" எனவும் இராசராசனது பதினாறும் யாண்டுச் சாசனத்துக் காணப்படுதலின், இறை கொடாதாரை மரத்தொழுவிலிட்டும், நீரினும் வெயிலினும் நிறுத்தியும் வருத்தும் வழக்கம் அறிக.

### ஒருவனுக்காகப் பலர் பிணைபடல்.

இனி, "இடையன் நேறன் சாத்தனைக்கொண்டு திருநந்தா விளக்கொன்றினுக்கு ராஜகேசரியால் நிசதம் உழக்கு நெய்யட்டுவதாகவும் இவன் சாவினும் போகினும் சிறை தளை சங்கிலி புகிலும் இவ்வனையோ முன்பு நின்றோமே சந்திராதித்தவற் திருவிளக்கெரிக்க நெய்யட்டுவதாக பிணைபட்டோம் இவ்வனைவோம்" என்றதனால், ஒருவனுக்காகப் பலர் பிணைபடும் வழக்குண்மை தெரியப்படும்.

## குற்றப்பதிவு செய்தல், கழுதைமீதேற்றல், கழுவாய் செய்து சேர்த்தல்

இனி, நெருங்கிய சுற்றத்தினளாகிய ஒரு பெண்ணைத் தகாப்புணர்ச்சி செய்தாரையும், பார்ப்பனக்கொலை, கள்ளுண்டல், களவாடல், ஆசான் மனைவியைக் கூடல் என்ற இவைகளில் ஒன்றினைச் செய்தாரையும் கிராம குற்றப்பதிவு புத்தகத்தில் பதிவு செய்தலும், தீமையான காரியங்களைச் செய்தாரைக் கழுதைமீதேற்றுதல், இழிகுலத்தவரின் கூட்டுறவு காரணமாகச் சாதியினின்று விலக்குண்டாரைக் கழுவாய் (பிராயச்சித்தம்) செய்து சேர்த்துக்கோடலும் வழக்கு. இவ் வுண்மையை, 'நிர்வாக உறுப்பினராகத் தேர்ந்திடத் தகாதவர்' என்ற பகுதியுட் காண்க.

## கொலைக்குத் தண்டம் விதிக்குமுறை.

இனி, இராசராசனது 28-ஆம் யாண்டுச் சாசனமொன்றில், தென்னாற்காட்டில் ஜம்பை என்னும் ஊரில், தன் காதற்பரத்தையை விரும்பி நள்ளிரவில் வலிதிற் சேர முயன்ற காவலூரான் என்பானைக் கொலைபுரிந்த ஒரு வணிகனைக் கொலை செய்யாது, அவ்வூர்த் தான்றோன்றியாழ்வார் ஆலயத்தில் விளக்கொன்று வைப்பதற்குப் பொன் கொடுக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இன்னும் இவன் காலத்தன்றி ஏனைய சோழர் காலத்தும் இவ்வழக்கே யிருந்தமை பின் வருவனவற்றுட் காண்க. ஊரதிகாரி ஒருவன், வரி கொடுக்கக் கேட்டுத் தனக்கு உரிமையில்லை என மறுத்துரைத்த ஒரு பெண்ணை மிக வருத்த, அதற்கு ஆற்றாது அவள் நஞ்சுண்டு மாய்ந்ததற்கும், வேட்டைமேற் சென்றான் ஒருவன் எய்த அம்பு குறி தவறி ஒரு உழவன்மேற் பட்டதனால் அவன் இறந்ததற்கும், ஒருவன் தன் மனைவியைத் தள்ளியதனால் அவள் விழுந்து இறந்து பட்டதற்கும், ஒருத்தி தன் மகள்மீது

எடுத்தெரிந்த கோல் பட்டுப் பக்கத்திலிருந்த சிறுமி மாண்டதற்கும், வயலில் எருமையை விடுத்தமையால் பயிர் அழிவுற்றதன் காரணமாக மாட்டுக்குடையானை அடிக்க அதனால் அவன் இறந்தமைக்கும், கோயிலில் விளக்கு வைக்க ஏற்பாடு செய்தனரேயன்றி உயிர்போக்கிலர். இவற்றால், தற்செயலாக நேர்ந்த சாவுக்கெல்லாம் ஏற்றபெற்றி தண்டித்ததன்றி உயிர் போக்காமை அறியலாம்.

## பழங்கோயில் கல்வெட்டுகளைப் புதிப்பிக்குமாறு.

இனி, இவன் காலத்தில் பழைய கோயிலைப் புதுப்பிக்க விரும்புவோன், அக் கோயிற்குரிய நாட்டதிகாரியிடம் தன் எண்ணத்தைத் தெரிவிப்பன். அதனை உணர்ந்த அரசன் கட்டளை செய்யுமாறு அடியிற்காண்க.

"உடையார் ஸ்ரீ ராஜராஜதேவற்கு யாண்டு உ௰௨ ஆவது நாள் ௩௱௬௰-ஞல் வடகரை ராஜேந்திர சிம்மவளநாட்டு பொய்கை நாட்டு தேவதானம் திருமழுவாடி யுடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் அருளிச்செய திருக்கற்றளி எடுக்க ஸ்ரீ விமானம் வாங்கி இஸ்ரீ விமானத்துள்ள கல்வெட்டுப்படி பொத்தகத்தில் சேர்ப்பிக்கவென்று அதிகாரிகள் இருமுடி சோழ மூவேந்த வேளார் நியோகமும் மும்முடிச் சோழ பிரம்மாதிராயர் நியோகமும் ஸ்ரீ கண்டராதித்த சதுர்வேதி மங்கலத்து சபையார்க்கும் ஊராள்கின்ற சிறுதனத்துப் பணிமகன் ஆலங்குடையான் அமலன் னுத்தம சோழனுக்கும் ஓலைவர" எனவும், "ஆக இவ்வனைவர் கண்காணியாலும் இவ்வனைவர் கணக்கினாலும் கல் வெட்டுவித்தபடி முன்பு கல்வெட்டுச் சேர்த்த பொத்தகப் படி" எனவும் வந்துள்ள சாசனங்களால் (Vol. 5 p. 275) திருமந்திர ஓலைநாயகர் அரசன் அருளிப் பாட்டினைத் தம் கையெழுத்திட்டுத் திருமுகத்தினைத் தூதுவர் வாயிலாக ஊர்ச் சபைக்கும் ஊரதிகாரிக்கும் விடுப்ப, அவர்கள் திருப்பணி.

செய்வோர் விமானம் வாங்குமுன், அதன்கண் உள்ள சாசனங்களை அவர்களைக்கொண்டு ஓலையில் எடுத்தெழுதுவித்து விமானம் வாங்கிக் கட்டிமுடிந்த பின்னர், பலர் கண்காணிப்பின் பேரில், தாம் காட்டும் இடத்தில் அவற்றை மீளவும் வெட்டுவிக்கும் வழக்குண்மை தெரியலாம்.

## 10. இராசராசன் இராசராசேச்சரம் எடுப்பித்தது.

இனி, இராசராசன், தஞ்சையின்கண் பெரியகோவில் என வழங்கும் இராசராசேச்சரம் எடுத்ததை ஆராய்வாம். திருமகளைப்போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே யுரிமைபூண்டமைய, வென்றியும் புகழும் எங்கும் நிலவிட, நாடு முழுவதும் அமைதியாக இருந்தமையின், இவன், தன் எண்ணத்தைக் கடவுட் டிருப்பணியில் செலுத்துதற்கு ஏற்றகாலம் இதுவெனக் கருதினன். அற்றைநாளையிற் கலையினும் கைத்தொழிலினும் மேம்பட்டிருந்தாரது தொழில் நலம் காண்டற்கிடமாய்ப், பிற்காலத்திய சிற்பம் வல்லுநர் செய்தொழில்தேரும் படிச்சந்தமாய்த், தென்னாட்டில் முன்னிருந்தாரது அறிவாற்றல்களை நினைவுறுத்தும் அடையாளமாய், வென்றி குறித்துத் தன்னகர்க்கண் என்றும் நிலவுற இன்னவன் நாட்டிவைத்த வெற்றித்தூணமாய் இலங்கும் இராசராசேச்சரத்திருப்பணியை மேற்கொள்வானாயினன்.

### இராசராசேச்சரத் திருப்பணி தொடங்கிய காலம்.

இனி, இராசராசேச்சரம் என்பது இராசராசன் எடுத்த கோவில் என்று பொருள்படும். இராசராசன் எனும் பெயர் சிவ நண்பனும் செல்வத்திற் சிறந்தோனுமாகிய குபேரனைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்றாகும். இப்பெயரைக் கேட்பார்க்கு,

இவன் அரனடிக்கண் ஆராத காதலன், அளவில் செல்வத்தினன் என நினைத்தற்கு எண்ணம் பிறத்தலின், ஏனைய பெயர்களால் கோயில் எடுத்திடாது இப்பெயரால் எடுத்தனன்போலும். இப்பெயர், சகம் 926 அதாவது கி. பி. 1004-ஆம் யாண்டில், இவன், தன் பாட்டன் பராந்தகனைப் போலத், தில்லைச் சிற்றம் பலத்திற்கு நிபந்தங்கள் பல இயற்றி வழிபட்டதன் பயனாகத், தில்லைவாழந்தணரால் வழங்கப்பட்டதென்பர். இராசராசன் எனும் பெயர் இவனது பத்தொன்பதாம் யாண்டுச் சாசனத்திற்றான் முதன்முதலில் காணப்படுகின்றது. இத்தகைய பெயர் ஏற்பட்ட பின்னரே இப்பெயரால் கோவில் எடுக்கும் எண்ணம் உண்டாகுவதியற்கையாதலால், இவன் இராசராசேச்சரம் எடுக்கத்தலைப்பட்டது இவனது பத்தொன்பதாவது யாண்டில் அதாவது 1005-இல் என்று கொள்வது சால்புடைத்தாகும்.

## கும்பாபிடேகமும் விமானத்திற் கல்வெட்டும்.

இனி, " நாம் எடுப்பித்த திருக்கற்றளி ஸ்ரீ ராஜராஜீச்வரம் " என இவன் கூறுமாற்றால், இவனுக்கு முன்னர் இக்கற்கோயில் இருந்ததில்லை என்பது திண்ணம். பென்னம் பெரிய இக்கற்றளியை நோக்குவார், இஃதென்னை தென்றிசைக்கண் எழுந்திட்ட மேருவோ, அன்றி விண்ணவர் இழிவதற் கமைத்து வைத்த படிகளின் வரிசையோ என்று ஐயுறுவர். கற்களை நெடுந்தொலையினின்று விரைவிற் கொணர்தற்கும், எத்துணைப் பருத்த பொருளையும் மிக்குயர்ந்த இடத்திற்கு ஏற்றுதற்கும் ஏற்ற கருவிகள் அருகியமைந்த அக்காலத்தில் இத்துணைப் பெரிய கற்கோயிலை எடுப்பதற்கு இவ்வரசர் பெருமான் கொண்ட பெரு முயற்சியினையும் பேரன்பினையும் என்னென்றுரைப்பது! இவன், மேலைச்சளுக்கமன்னன் சத்தியாசிரயனை வெற்றிகொண்டதற்காக, இவ்வாலயத்துப் பரமசுவாமிக்குப்

பொற்பூக்கள் பல கொடுத்தமை சாசனத்தால் அறியக்கிடக்கின்றது. அவ்வெற்றி இவனது இருபத்திரண்டாம் யாண்டிணிலாதலின், அப்பொழுது இக்கோயில் விமானம் ஒருவாறு கட்டப்பட்டிருத்தல் வேண்டும். இன்னும் இக்கோயிலுக்கு வேண்டும் நிபந்தங்களும் பிறவும் 23-ஆம் யாண்டு தொட்டு 29-வரை கொடுத்திருப்பதாகச் சாசனங்கள் கூறுகின்றன. அதனால், இத்திருப்பணி பத்தொன்பதாம் யாண்டிற் றொடங்கி இருபத்துமூன்றில் பெரும்பான்மையும் முடிந்திருத்தலமையும் என்றாகிக்கலாம், "யாண்டு இருபத்தைஞ்சாவது நாள் இருநூற்றெழுபத்தைஞ்சினால் உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் ஸ்ரீராஜராஜீச்வரமுடையார் ஸ்ரீ விமானத்துச்செம்பின் ஸ்தூபித்தறியில் வைக்கக் குடுத்த செப்புக்குடம் ஒன்று. நிறை மூவாயிரத்து எண்பத்து முப்பலத்தில் சுருக்கின தகடுபல பொன் ஆடவல்லானென்னுங் கல்லால் நிறை இரண்டாயிரத்துத் தொளாயிரத்து இருபத்தறுகழஞ்சரை" என்ற சாசனப் பகுதியால் இவன் 25-ஆம் யாண்டு 275-ஆம் நாளில் தூபித்தறியில் வைப்பதற்குப் பொற்றகடு சுருக்கின செப்புக்குடம் கொடுத்தமை அறியக்கிடத்தலால், அக்காலத்திற்றான் திருப்பணி முடிவுற்றுக் கும்பாபிடேகம் நடந்தேறியது எனக் கூறலாம். இக்கோயில் விமானத்தில் 26-ம் யாண்டு 20-ம் நாளில் சாசனம் வெட்டுதற்கு இவன் கட்டளையிட்டிருப்பதும், இருபத்தைந்தாம் யாண்டில் அதாவது கி. பி. 1009-இல் இராசராசேச்சரத் திருப்பணி முடிவுற்றதை வலியுறுத்து நிற்ற லறிக.

### சிவலிங்கம் எழுந்தருளுவித்த வரலாறு.

இனி, இராசராசேச்சரத் திருப்பணி முடிந்த பின்னர், அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத்தினைத் திருக்கோயிலுள் எழுந்தருளச்செய்து, ஆதிசைவரைக்கொண்டு மருந்து சாத்திப் பந்தனம் செய்வித்தபொழுது, ஆவுடையார் வடிவம் பெரிதாயிருந்தமையின், மருந்திளகிப் பந்தனமாகாமற்

போயிற்று. அது கண்டு இராசராசன் வருந்தி நிற்கையில், "கருவூர்த் தேவர் ஈண்டு வரின் நீ எண்ணிய எண்ணம் கைவரும்" என, விண்ணிடை நின்றும் ஒரு நன்மொழி எழுந்தது. அதைக்கேட்ட அரசன் கவலை நீங்கி, 'அப்பெரியவர் யார்? அவரது வருகை எனக்கு எவ்வாறு கிடைக்கும்?' என அங்கிருந்தாரை உசாவிய போது, தம் உருமாறி அவ்விடத்திருந்த போகநாத ரென்னும் யோகியார், 'அரச! கவலற்க; கருவூர்த் தேவரை இங்கு வரவழைப்போம்' என்றுரைத்திரட்டு, ஓலை எழுதித், தம் தவ வன்மையால் அதனைக் காக்கையின் காலிற் கட்டிவிடுத்தனர். அவ் வோலையைக் கண்ணுற்ற கருவூர்த் தேவர், அக்கணமே பொதிகையினின்றும் புறப்பட்டுத் தஞ்சையை அடைந்து, போகநாதரது ஆணைபெற்றுக் கோயிலுட் புகுந்து, சிவலிங்கத்தை ஆவுடையாருடன் சேர்த்துச் செவ்வே நிறுத்தித், தம் வாயிற் றம்பலத்தை மருந்தாக உமிழ்ந்து இறுகப்பிடித்திடப், பொன்னை உருக்கி வார்த்தது போலப் பந்தனமாயிற்று. அப்பொழுது 'அன்பர் செய்கை யாரே அறிகுவர்' என அங்கிருந்தார் எல்லோரும் இறும்பூதெய்தி மகிழ்ந்தனர். இதனால், கருவூர்த்தேவர் கடின கல்லும் தொட்ட மாத்திரத்தில் இளகும் கடவுட்டன்மையரென விளங்கி நிற்றல் காண்க. இவ் வரலாறு கருவூர்ப்புராணத்திற் கருவூர்த்தேவர் கதிபெறு சருக்கத்துக் காணப்படுதலின் அதனை ஈண்டு வரைகின்றேன்.

இனி, கருவூராரைச் சித்தரென்பர் ஒரு சிலர். சித்தர்கள், ஆலயங்கட்குச் சென்று தரிசித்து திருமுன்னின்று திருப்பதியம் பாடும் இயல்பின ரல்லர்.

கருவூராரோ என்றால், சென்ற தலந்தொறும், திருமுன் நின்று திருவிசைப்பா இயற்றிய ஒன்பதின்மருள் ஒருவராவர். இவர், சிதம்பரம், திருக்களந்தையாதித்தேச்சரம், திருக்கீழ்க்

கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கைகண்ட சோளேச்சரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சையிராசராசேச்சரம், திருவிடைமருதூர் என்ற பத்து தலங்களையும் தரிசித்துப் பாடியருளிய பரமர்.

தேவர்பிரான்புனைகங்கை சிவணியதீம்புனனாட்டின்
மேவருதொல்சீர்வரவி விளங்குதஞ்சைமூதூரிற்
பூவலயம்பொறுத்தபுயப் புலிக்கொடிமேருவிற்பொறித்த
காவலனோர்குறிசிறுவக் கருதியுளந்தனில்வலித்தான்.

நேமிநெடுவரைநிவந்த நிரைமணிமாமதில்கோலிப்
பூமியினெண்டிசைநிலைத்த பொருப்பெனக்கோபுரநிறுத்திக்
கோமிளிர்பொற்கிரியெனப்பொற் கோயில்வகுத்தேமகிரி
யாம்தெனவேர்குவிந்தாங் கமைத்தொருமாமணிச்சிகரம்

ஆயசதுமாமறைதொல் லாகமநூலருளியவா
றேயவொளிர்சிவலிங்க மிழைத்துமற்றுருவுடையார்
மேயவிருநான்காக விளம்புமருந்தவையொருங்கத்
தோயமதித்தாதிசைவர்க் கொடுதொகுமாறியற்றுவித்தான்

பாகுவரவிளைத்தமருந் திளகியதுபற்றுமை
யேகுழிநேரியற்கிறைவன் யாதுகுறையெனக்கவலித்
தாகுதியாரழல்வேள்வி யாற்றுவித்துமந்தணர்க்கும்
யோகுருமாமுனிவருக்கு மூட்டியரும்பொருளளித்தும்

பந்தியாதிளகமனம் பருவரலுற்றுழையரைக்கூஉ
யுந்துமாரணியமுங்கன் முழையுமுறுவோர்க்குறுகி
மூந்தியாமழைத்துமென மொழிந்தவர்க்கொண்டணையுமெனச்
சந்தியாவருந்தவரைக் கொணர்ந்தார்கடணந்தோரே.

பொருந்தியசித்தரை நணியபோதகரைமாதவரைப்
பருந்திலைவேற்குரிசிலெதிர் பணிந்துகுறைதீருமெண்முன்
மருந்துமணிமந்திரங்கொண் டமைந்தனர்கைவாராமை
யருந்தவருஞ்சலித்திருந்தா ராசனுமஞ்சலித்துமின்முன்

யாவருந்துணிவுற்றெவன் கொலியற்றுமாறெனுமெல்லையிற்
றேவரும்புகழ்மாதவன் கருவூர்வரும்சிவயோகிவந்
தோவறப்பர்வோடுஞற்றினலாதுருதெனுமோசையான்
மேவருந்திருவாக்கெழுந்துவிசும்பின்மீளமறைந்ததே.

மாகநாதமெழத்தபோதனரஞ்சினர்வளவன்சிவ
யோகநாதனிருக்கையாண்டுளதோதுமாதவிரென்றலும்
போகநாதனுருக்கரந்தொருபுடையடும்படைகொண்டுநின்
றேகநாதனியம்புமன்பனையிக்கணத்திவனுய்க்குதும்.

எனநகைத்திடுமுனைவருந்திறலிறைவனுங்கவலுறமனங்
கனைகுரற்கருமேனிவீறியகாரியின்சிறுகாலிடைத்
துனைவினீர்வருகென்றுரோலைதுவக்கியேகவிடுப்பவே
யனையதச்சிறுவரைதனிற்பொதியாசலத்தையணைந்தரோ

முன்னரிற்படர்காரிகாலின்முடங்கலைக்கையடங்கவே
நன்னரிற்றெழுதார்பிணிப்பைநெகிழ்த்துநன்கொடுநாடினர்
புன்னெறித்தமியேனையோர்பொருளாய்நினைந்தனரோவெனுத்
தன்னிகர்த்தவரோலையக்கணம்வந்துசார்ந்தனர்தஞ்சையே.

புத்துருக்கொடணைந்ததுந்தனிப்போகநாதசுவாமிதன்
சித்துருக்கொடெழுந்ததுங்கருவூரார்வந்துசெறிந்தது
மத்திறத்தினிகழ்ந்ததுஞ்சிலராலறிந்தடலரசனும்
பத்திகூரவெதிர்ந்துவந்தனையாற்றினன்பகர்கின்றனன்.

அணுவுமேருவெனச்சிலம்புமொரணுவெனப்பரகாயமு
நணுகுநாயகநீயெனைப்பொருளாய்நடித்தனையென்னெனத்
தணிவிலாவருளுடையையாலிதுதானியற்றினமென்றுநற்
புணியசித்தரினிலைபெறுஞ்சிவபோகநாதனுரைத்தனன்.

அனையகாலையிலபயன்மீளவுமடியில்வீழ்வுறமளவிலந்
நினைவறிந்திருள்கருமமாயையுநீத்தவன்றனைநேர்ந்துநந்
தனையனுயினுமெமர்களிற்றலையாயவன்சிவயோகிநீ
யுனைவிளித்ததுமிதினிமித்தமுனுற்றுவாய்குறியொண்மையின்

அந்தவாய்மைமனக்கொளாவபயன்குயிற்றுபொனாலயஞ்
சிந்தையாதரமுற்றணைந்தனர்சென்றபோதவணின்றுளார்
முந்தையோர்தவசித்தர்மொய்த்துமுடிக்கொணாதலைதமுற்றுவா
ரிந்தவேதியராமிதற்புதமறிதுமென்றுடனெய்தினர்.

மாமலைத்தலையதகமூலி மணிக்குழாமலிநெய்குடந்
தூமநாறியகுண்டமங்கி சுருக்கினோடுசுரூவமுந்
தாமமுஞ்சிதருப்பைகுண்டிகை தண்டுமண்டலவேதிகை
யோமமார்திரவியமுமாயிடை யுளதெரிந்திளநகைசெய்தே.

பெருமைகூர்கருவூரராவுடை யார்பிறங்குமிலிங்கமென்
றிருமைகூறிடமெய்தியேயிவை விந்துநாதமெனத்தெளிந்
தொருமைகூர்தருபாவகத்தினுறைத்துவாயுமிழ்தம்பலை
யருமைகூர்விடரூடுபெய்தன ரதிசயித்தனருலகெலாம்.

உம்பருந்துணர்மாரி பெய்தன ரோடைவைத்தழலூடெழுஞ்
செம்பொனாயிரமாற்றெனப்புரை சென்றுபற்றியதுமிழ்வாய்த்
தம்பலின்னணமேயெனிற்றனி மாமுதற்பொருளாய்விளங்
கெம்பிரானருளன்பர்தஞ்செயல் யாவரேயறிவார்களே.

## கருவூரார் சமாதிமேடை.

இனி, இங்குக் காட்டிய கருவூர்ப்புராணச் செய்யுட்களால், கருவூர்த்தேவர் தஞ்சைக்கு எழுந்தருளினராதல் இனிது விளங்கும். அது நிற்க, இராசராசேச்சரத்து மேலத் திருச்சுற்றாயில் (பிரகாரத்தில்) வேம்பும் வில்வமும் நிற்கும் கிழக்கு நோக்கிய மேடை ஒன்றுளது. அதனைச் சுட்டி 'இஃது என்னென' எவரை வினவினும், 'கருவூரார் சமாதி கூடிய இடம்' எனவே கழறுகின்றனர். ஆன்றோரும் அவ்வாறிசைத்து அதனை வலம் வந்து வழிபாடு செய்கின்றனர். பிற்காலத்தில் அம்மேடையிற் கருவூரார் கோயிலெனச் சிறு கோயிலெடுத்து, யோகியர் உருவச்சிலை யொன்றமைத்துப் பலரும் வழிபட்டு வருவதையும் நாடொறும் பூசை நடப்பதை

யும் இன்றுங்காணலாம். வழக்கும் தொன்றுதொட்டு வரும் கேள்வியும்பற்றிக் கொள்ளப்படும் ஐதிக அளவைப் பொய் யெனல் அமையாது. ஆகவே பிறர்க் குரிமையாக்காது கருவூராரோடு இயைபுபடுத்துக் கூறும் அம் மேடை, இராச ராசேச்சரத்துத் திருச்சுற்று மாளிகையில் இடம்பெற்றிருத் தலின், கருவூர்த்தேவர்க்கும் இக் கோயிலுக்கும் இயை புண்மை உய்த்துணரற்பாற்று. இஃது இவ்வாறாக.

## கோயில் எடுத்துள்ள இடமும் கோபுர வாயில்களும்.

இனி, "பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பித்த திருக்கற்றளி இராஜ ராசேச்வரம்" எனச் சாசனத்துக் காணப்படுதலின், கோயில் எடுக்கப்பட்டுள்ள இடம் நாட்டின் பெரும்பகுதியில் ஒன்றாகிய பாண்டிய குலாசனி வளநாடு என்பது பெற்றாம். பாண்டிய குலாசனி என்றது இராசராசன் விருதுப்பெயர்களுள் ஒன்று. அதற்குப் பாண்டிய குலத்திற்கு இடியேற்றை ஒப்பவன் என்பது பொருள். இவ் வளநாட்டைச் சார்ந்த தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர்க்கண் எடுக்கப்பட்டுள்ள திருக்கற்றளி யாகிய இராசராசேச்சரத்துக்குத் திருவாயில்கள் மூன்று இருக்கின்றன. இவ்வாறு கோயில்கட்கு வாயில் மூன்றமைப் பது பண்டைக்காலத்து வழக்குப்போலும். பண்டை நாளைய வழக்குகளைப் பாராட்டிக்கூறும் பெரியபுராணம், முதற்கோபுர வாயிலைத் தோரண வாயில் எனவும், இரண்டாம் வாயிலைத் திருமாளிகை வாயில் எனவும், மூன்றும் வாயிலைத் திருவணுக் கன் திருவாயில் எனவும் வழங்கும். இவனோ என்றால், அவற்றை, முறையே கேரளாந்தகன், இராசராசன், அணுக்கன் எனப் பெயரிடுவா னயினன். இவன், இம்முறையின் அமைத்தவிடத்தும், கேரளாந்தகனுக்கும் அணுக்கனுக்கும் இடையே இராசராசனை வைத்திருப்பதை நோக்குமிடத்து

இராசராசன் பகைவர்க்குச் சேய்மைய னெனினும், அரனடிக் கண்மையன் என்றுய்த்துணர அமைத்திருக்கும் அருமை பாராட்டற் பாலது.

விமான உயரம், தளக்கல், தூபிக்குடம்.

இனி, இக்கோயில் விமானம் 200 அடி உயரமுடையதாகும். இதன் உச்சியில் போடப்பட்டுள்ள தளம் ஒரே கருங்கல் ; ஏறக்குறைய எண்பது டன் நிறையுள்ளது எனத் தஞ்சை ஜில்லா கெசட்டியர் கூறுகின்றது. இவ் விமானத்தின் மேல் தூபித்தறியில் வைக்கப்பட்டுள்ள செப்புக்குடம் நிறை மூவாயிரத்து எண்பத்துமூன்று பலம்.

கீழைக்கோபுரவாயிலும் சண்டேசர் ஆலயமும்.

இனி, கீழைக்கோபுரவாயிலினும் சண்டேசர் ஆலயத்தினும் வெட்டப்பட்டுள்ள சாசனங்களில், முந்நீர்ப்பழந் தீவு பன்னீராயிரம்கொண்டமை கூறப்படாமையால், அவற்றைக் கொள்வதன்முன் இவை எடுக்கப்பட்டனவாகும் என்று கொள்க.

திருச்சுற்றுமாளிகை எடுத்தவர்.

இனி, இக்கோயிலின் திருச்சுற்றுமாளிகையிற் பெரும்பான்மையும் இராசராசன் ஆணையின் பேரில் சேனாபதி கிருஷ்ணன் ராமனான மும்முடி சோழ பிரமமாராயனால் எடுக்கப்பட்டதாகும். இச் செய்கை "ஸ்ரீ ராஜராஜதேவர் திருவாய் மொழிந்தருள இத்திருச்சுற்று மாளிகை எடுப்பித்தான் சேனாபதி கிருஷ்ணன் ராமனான மும்முடி சோழபிரஹ்மமாராயன்" எனத், தென்புறத்தில் இரண்டிடத்தும் மேற்புறத்து ஓரிடத்தினும் திருச்சுற்றாலையில் எழுதப்பட்டிருத்தலைத் தென்னிந்திய சாசனத்தொகுதி II பகுதி II எண் 31, 33, 45-களிற் காண்க.

திசைகாப்பாளர் ஆலயங்கட்குக் கலசமளித்தவர்.

இனி, இச்சுற்றாலையில் எட்டுப்புறத்தினும் திக்குப்பாலர் எண்மருக்கும் கோட்டங்கள் சமைக்கப்பெற்றுள்ளன. அவற்

றுள் கல்லிற் செதுக்கிய அழகிய திசைகாப்பாளர் திரு மேனிகளைக் காணலாம். அவ்வாலயங்களின் மீது கற்கலசங்களே இக்காலத்துக் காணப்படினும், பொற்றகடு சுருக்கின செப்புக்குடங்கள் இராசராசனுடைய குருக்கள் ஈசானசிவ பண்டிதரால் கொடுக்கப்பட்டன என்று S. I. Ins. Vol. II Part IV No. 90-ஆல் அறியக்கிடக்கின்றது.

இனி, பரிவாராலயத்துப் பிள்ளையார் அதாவது சுற்றுக் கோயிற் பிள்ளையார் மேலைச் சுற்றாலயத்து வீற்றிருப்பவராதலால், இற்றை நாளையிற் காணப்படும் பிள்ளையார் கோயில் தஞ்சையை ஆட்சிபுரிந்த மராட்டிய மன்னர் சரபோசி II எடுத்ததென்பர்; (தக்கணாமூர்த்திக்கு அக்காலத்தில் தனியாகக் கோயில் கட்டப்படவில்லை. சாசனத்தை இடையே மறைத்து இவ்வாலயத்தும் பிறதளிகளினும் தக்கணாமூர்த்தி ஆலயம் எடுக்கப்பட்டிருப்பதை ஆராயின், தனியே ஆலயமெடுத்துத் தக்கணாமூர்த்தியை வழிபடும் வழக்குப் பிற்காலத்தில் ஏற்பட்டது போலும் என்றாகிக்கலாம்.) தனக்குப் பின்புறத்திருந்து அடைக்காய் தந்தவன் அரசனென்றறியாது வாங்கியுண்ட சிற்பர்கள் தலைவன் தன் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டிச் சுப்பிரமணியர் ஆலயம் எடுத்தனன் என முன்னோர்கள் கூறுவர்.

அம்மன் கோயில், இவ்வாலயத்திற்கு வடபுறத்தினுள்ள சிவகெங்கைத் தோட்டத்தில் இருந்திருக்கவேண்டும். நாயக்கவரசர் தம் காலத்தில் இடித்துவிட்டனராம். இப்போது இருப்பது பிற்காலத்தில் எடுக்கப்பட்டதென்பதைப் பார்ப்பவர் கண்கூடாகக் காணலாம்.

### சிவ சோத்துக்களைக் கண்காணிக்கும் அதிகாரி

இனி, ஆராயுமிடத்து முன்னாளையில் சண்டேசரைத் தவிர ஏனையவர்க்குத் திருச்சுற்றாலயத்தில் ஆலயம் எடுப்பித்த

தாகத் தெரியவில்லை. சண்டேசர், சிவபெருமானுக்குரிய பொருளை யெல்லாம் எவரும் கவர்ந்து செல்லாது கண்காணிக்கும் அதிகாரமுடையவர் என்பது முந்தையோர் கொள்கை யாகும். அதைப் பின்பற்றியே கோயிலைப் பொருத்தன யாவும் அக்காலத்தில் அவர் பெயரால் நடைபெற்றுவந்தன. அதனை "ஸ்ரீராஜராஜீச்வரத்தி னினிதெழுந்தருளி இருந்த பரமச்வாமிக்கு மூலவிருத்தியனுகிய சண்டேச்வர தேவர் பக்கல் பொலிசை யூட்டுக்குக்கொண்ட ஊர் கல்லில் வெட்டின" என்னும் சாசனப்பகுதியால் அறியலாம். சிவாலயத்திற்குச் செல்பவர், சிவதரிசனம் செய்து முடிந்த பின் ஆலயத்தினின்று புறப்படுமுன்னர்ச் சண்டேசர் ஆலயத்தையடைந்து, 'சிவ சொத்துக்களில் ஒன்றும் கொண்டு சென்றிலேம், எம் கரங்களைப் பார்த்தருளும்' என்பார் போலத் தம் கையொடு கையைத் தட்டிக்காட்டிச் செல்லும் வழக்கு இன்றுங் காணப்படுதலால் இவ்வுண்மை விளங்கும்.

### ஆலயத்துப் பெரிய நந்தி.

இனி, இவ்வாலயத்துள்ள நந்தி ஒரே கல்லிற் செய்யப்பட்டது. பன்னிரண்டடி உயரமும், பத்தொன்பதரை அடி நீளமும் எட்டேகால் அடி அகலமும் உடையது. இந் நந்தி மண்டபம் தஞ்சை நாயக்க அரசர் காலையிற் கட்டியதாகும்.

### விமானத்தின் பெயரும் காரணமும்.

இனி, இராசராசேச்சரத்து விமானம் (பெரிய கோபுரம்) தக்கணமேரு எனப்படும்.* இதனுள் வீற்றிருக்கும் தியாகேசர்

*வராகமிஹிரர் இயற்றிய பிருகத் சம்ஹிதை என்னும் நூலுள், மேரு, மந்தரம், கயிலாசம், நந்தனம், பத்மம், கருடம், குஞ்சரம், ரிஷபம், ஹம்சம், கடம், சிம்மம் முதலிய இருபது வகைப்பட்ட விமானங்கள் கூறப்பட்டுள்ளன. (தமிழ்ப் பொழில் துணர் 7. மலர் 10 பக்கம் 368) அவற்றுள் தஞ்சை விமானம் மேருப்போலும் அமைப்புடைமையில் இப்பெயர் பெற்றது என்பர்.

தக்கணமேரு விடங்கர் எனப்படுவார். இவரை ஆடவல்லான் எனவும் சாசனம் கூறும். விடங்கர் என்னும் வடசொல் உளியாற் செய்யப்படாதவர் என்று பொருள்படும்.

## தஞ்சை விடங்கர் என்ற பெயர்க்காரணம்.

இனி, திருவாரூர், திருநாகை, திருக்காருயில், திருக்கோளிலி, திருமறைக்காடு, திருநள்ளாறு, திருவாய்மூர் என்னும் ஏழு தலங்களினும் தியாகராசர் எழுந்தருளப்பெற்றிருத்தலின் அவை சத்தவிடங்கத் தலமெனப்பட்டன; விடங்கர் தியாகராசராதலின். இதனை,

"சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காருயில்—பேரான
ஒத்ததிரு வாய்மூ ருவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்"

என்னும் வெண்பாவால் உணர்க. இஃது இவ்வாறாக தஞ்சை இராசராசேச்சரத்து எழுந்தருளிய தியாகப்பெருமானுக்குத் தட்சணமேரு விடங்கர் என்னும் பெயர் காணப்படுகின்றது. இத்தஞ்சை மேற்கண்ட ஏழு தலங்களுள் ஒன்றன்றாகவும் இதன்கணுள்ள தியாகர்க்கு இப்பெயர் வருதற்கு இயைபென்னை என்றாராய்வது இன்றியமையாதது. ஆகலின் அதனை ஒருவாறு ஆராய்வாம்.

இனி, தியாகர் எழுவரையும் விண்ணவர்க் கரசன்பாற் பெற்று மண்ணுலகில் ஏழு தலத்தும் ஒரு பகலில் அமர்வித்து வழிபட்டவன் முசுகுந்தன் என்பர். இவ்வரலாற்றை,

"நன்றெனவே விடைகொண்டு நானிலத்தி னிடையிழிந்து
தென்றிசையா ரூர்தன்னிற் சிவனுறைபூங் கோயில்புக்கு
மன்றல்கமழ் தண்டுளவோன் வழிபடவீற் றிருந்தோரை
வென்றியரி யணைமீதில் விதிமுறையாற் றாபித்தான்.

கடஞுகை நள்ளாறு காறுயல் கோளரியூர்
மடஞுக மூத்தீனும் வாய்மியூர் மறைக்கானம்
உடஞுகுந் தலமாறி லோராறு வடிவுகொண்ட
படநாக மதிவேணிப் பரஞ்சுடரை யமர்வித்தான்.

இப்படியே யொருபகலி லெழுவரையுந் தாபித்து
மெய்ப்பரிவில் வழிபாடு விதிமுறையாற் புரிவித்துச்
செப்பரிய புகழாரூர்த் தேவனுக்கு விழாச்செய்வான்
முப்புவனங் களும்போற்று முசுகுந்தன் முன்னினஞல்."

என்னும் கந்தபுராணம் கந்தவிரதப்படலச் செய்யுட்களால் அறியலாம்.

அம்முசுகுந்தனே சரிதகாலத்திற்கு முற்பட்டிருந்த இராசராசன் முன்னோர்களில் ஒருவனென ஆனைமங்கலத்துச் செப்பேடு கூறுகின்றது. தன் முன்னோரிற் சிறந்தோனுகிய அவன் வழிபட்ட தலம் என்னும் இயைபு பற்றிப்போலும், இராசராசன், ஏனைய தலங்கட்குச் செல்லாது விடங்கர் தலத்துட் சிறந்து விளங்கும் திருவாரூர்க்குச் சென்று தியாகேசரை வழிபட்டுவருவானுயினன். இதனை, " ஆரூர்த் தியாகேசர் பதம் பணிந்து செங்கோலோச்சி யலகில் புகழ்பெறு ராசராச மன்னன் " என்னும் திருமுறைகண்ட புராணச் செய்யுளால் அறியலாம்.

இவ்வாறு வழிபட்டு வந்தவன் தனக்கு இராசராசன் என்னும் பெயர் ஏற்பட்டு, அப்பெயரால் தன் தலைநகர்க்கண் இராசராசேச்சரம் எடுப்பித்த பின்னர், திருவாரூர் ஆலய ஐதிகப்படி இவ்வாலயத்தும் தியாகராசரை எழுந்தருளுவித்துச் சிறப்பொடு பூசனை விருப்பொடு நடத்தியதன்றி விடங்கர் என்னும் பெயரையும் இவர்க்கு இட்டு வழங்கினன் என்ற இயைபு கோடல் பொருத்தமுடைத்தாயிற் கொள்க.

## பழைய வரலாறுணர்த்தும் திருமேனிகள்.

இனி, இராசராசனும் அவன் மனைவியரும் பிறரும் இவ் வாலயத்து எழுந்தருளுவித்த திருமேனிகள் (விக்கிரகங்கள்) மிகப்பலவாகும். அவற்றுள் பழைய வரலாற்றினை நினைவுறுத் தும் சிலவற்றினை மட்டும் ஈண்டு எடுத்துக்காட்டுவது இன்றி யமையாததாகலின் அவற்றைக் கூறுவேன். ஒரு இலிங்கமும் அதினின்று நான்கு திருக்கரங்களுடன் தோற்றிய சிவ வடிவமும் அதனையடுத்துப் பிரமனும் பன்றி முகமுடைய திருமாலும் நிற்கும் இலிங்க புராணதேவர் திருமேனி, திருமா லும் பிரமனும் அடிமுடி காணமாட்டாது எய்த்து நிற்க, இலிங் கத்து நின்றும் வெளிப்பட்டு அவர்க்கு இறைவன் அருளிய வண்ணத்தையும்; பிரமன் இருந்து சடங்கியற்ற, திருமால் நின்று கரத்து நீர்வார்க்கப் பிராட்டியோடு நான்கு திருக்கரத் துடன் எழுந்தருளி நின்ற கலியாணசுந்தரர் திருமேனி, புயல் வண்ணன் புனல் வார்க்கப் பூமிசையோன் தொழில்காட்டப் புவனத்துள்ளார் வாழ்க்கைச் செயல்வண்ணம் நிலைநிறுத்த இறைவன் மலைமகளை மணந்த செய்தியையும்; கின்னரர் கின் னரிகள் கர்ணபிராவிர்தர்கள் இருடிகள் நால்வர் மருங்கிருப்பப் புலியும் பாம்பும் கிடக்கும் இரண்டு சிகரத்தினையுடைய ஒரு மலையின் உச்சியில் ஒன்பது பணையும் நாற்பத்திரண்டு கிளை களும்போக்கிப் பொக்கணம் ஒன்று தூங்க நின்ற ஆலமரத்தடி யில் முயலகனைத் திருவடியிற் கிடத்தி நான்கு திருக் கரத் துடன் சுகாசனமாக வீற்றிருக்கும் தக்கணமூர்த்தி திருமேனி, கல்லாலின் புடையமர்ந்து இருடிகள் நால்வர்க்கும் அண்ணல் அறவுரை பகர்ந்த மாண்பினையும்; சிவ வழிபாட்டிற்கு இடை யூறு விளைத்த தந்தையை தாளற வீழ்த்தி இறைவனை வழி பட்டுப்பிரசாதம் பெறுதற்கு இரண்டு கரத்தையும் நீட்டி நிற்கும் சண்டேசர்க்கு, முயலகன் திருவடியிற் கிடப்ப, பிராட்டி யோடும் எழுந்தருளித் தமது திருக்கரத்தால் மலர் மாலையை

நல்கும் சண்டேசப்பிரசாத தேவர் திருமேனி, சண்டேசநாயனர் வரலாற்றினையும்; நாற்புறத்தினும் நந்நான்கு திருக்கரங்களோடு நான்கு திருமேனிகள் தன்னிற்கிளைத்து நிற்க, அவற்று நாப்பண் பத்துத் திருக்கரங்களோடு அவற்றினும் உயரமாக எழுந்தருளி நின்ற பஞ்சதேக மூர்த்திகள், பிரமன், விண்டு, உருத்திரன், மகேசன் என்பார் சதாசிவத்தினின்றும் தோன்றிய உண்மையினையும் விளக்கி நிற்றல் காண்க.

## மிலாடுடையார் காலம்.

இனி, இவ்வாலயத்து எழுந்தருளப்பெற்றுள்ள சிவனடியார் வடிவங்களுள் மிலாடுடையார் படிமம் ஒன்றாகும். இம் மிலாடுடையாரே, சிவனடியார் அறுபத்து மூவருள் ஒருவராகிய மெய்ப்பொருள் நாயனர் என்பவர். இவர் பெயரால் திருநாகேச்சரத்தைச் சார்ந்த குமாரமாத்தாண்டபுரத்தில் எடுக்கப்பெற்ற மிலாடுடையார்பள்ளி எனப் பெயரிய கோவிலுக்குக் குமாரமாத்தாண்டன் என்னும்திருச்சுற்றுலையை அந்நகரத்தார் எடுப்பித்தனர் என்பது 222 of Appendix B of 1911-ஆல் அறியக் கிடக்கின்றது. திருவிடைமருதூர் மகாலிங்கேச்வரர் ஆலயத்து நடுவிமானத்தின் வடசுவரில் வெட்டப்பட்டுள்ள சாசனம், காடுபட்டிகள் நந்திபோத்தரையன் என்னும் பல்லவ மன்னன், குமாரமாத்தாண்டன் என்னும் விளக்கொன்றினைக் கொடுத்தனன் எனக் கூறுநிற்கும். இதனல் குமாரமாத்தாண்டன் என்பது நந்திபோத்தரையனது மறுபெயர் எனக் கொள்ளக்கிடத்தல் காண்க. இம்மிலாடுடையாரைப்பற்றி முன்னர்ச் சுட்டுவது இராசகேசரிவன்மன் முதலாம் ஆதித்தனது இரண்டாம் ஆண்டுச் சாசனமேயாம். ஆதித்தனே என்றால் கி. பி. 880 முதல் 907 வரை ஆட்சிபுரிந்தவன். ஆகவே மெய்ப்பொருள் நாயனராகிய மிலாடுடையார், அவனுக்குச் சிலகாலத்திற்கு முற்பட்டிருந்தாரெனக்கோடல் அமையும்

என்பர். இதனை Annual Report on Epigraphy for 1912, Part II, para 12-இல் காண்க.

## அக்காலத்தில் வழக்கில் இல்லாதன சில.

இனி திருமுறைகண்ட இவன் காலத்தில், எட்டாவது திருமுறையாகிய திருவாசகம் பாடியருளிய மாணிக்கவாசகர் பெயர் தெரிந்திருந்தும், ஏனைய மூவரோடு இவரையும் எழுந்தருளச் செய்யாமைக்குக் காரணம் புலப்படவில்லை. இவனும் இவன் மனைவியரும், பிறரும் பற்பல சிவமூர்த்தங்களை எழுந்தருளுவித்தமை அறியக்கிடப்பினும், வாகனங்கள் செய்து கொடுத்தமை காணப்படவில்லை. இதனால் இக்காலத்திற்போல அக்காலத்தில் யானை, குதிரை, பூதம் முதலியவற்றில் புறப்பாடு செய்விக்கும் வழக்கு இருந்திலது போலும். இன்னும் பலதிறப்பட்ட சிவமூர்த்தங்கள் கேட்கப்பெறினும் அவர்கட்குரிய அம்மையின் பெயர், இற்றை நாளையிற் போலப் பலதிறப்பட வழங்கப்பெறாமல், 'உமாபரமேச்வரி' எனவே வழங்கப்பட்டிருத்தல் ஆராயத்தக்கது.

## நிபந்தத்துள் ஏற்படாத பொருள்கள்.

இனி, இவ்வாலயத்திற்கு வேண்டு நிபந்தங்களைக் கூறிப்போதரும் சாசனங்களில் தேங்காயும் மிளகாயும் கூறப்படவில்லை. தேவர்க்காகும் உணவாதலின் மிளகாய் ஒழித்தனரோ எனின்? அற்றன்று. மிளகாய் இந்நாட்டுப் பொருளன்று. சில்லி என்ற ஊரினின்று சில நூற்றாண்டுகட்கு முன்னர்தான் நம் நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது. கார்ப்புச் சுவையில் மிளகை யொத்திருந்தமையின், மிளகுகாய் எனப்பட்டு, மிளகாய் எனப்பின்னர் மரீஇ வழங்குவதாயிற்று. அக்காலத்தில் மிளகாய் இருந்ததில்லை யாதலால், சாசனங்கள் அதனைக் கூறுதொழிந்தன.

இனி, சோழநாட்டில் தென்னை இருந்திலது என்றல் அமையாது. என்னை? ஆனைமங்கலச் செப்புப்பட்டயத்தில் "இவ்வூராரிட்ட தெங்கும் பனையும் ஈழவர் ஏறப்பெறாத தாகவும்" என்றும், "காவு தெங்கிடப் பெறுவதாகவும்" என்றும் காணப்படுதலின். அன்றியும் இவ்வாலயத்து வடசுவரில் பொறிக்கப் பெற்றுள்ள சாசனத்திலும், "தெங்குமரம் நின்ற நந்தவனமும்" எனக் கூறப்படுதலின், தென்னை இருந்தமை அறியலாம். எனினும் சாசனங்களிற் கூறப்படாமையின், இற்றை நாளையிற்போலத் தேங்காயுடைத்து வழிபடும் வழக்கு அற்றை நாளையில் இருந்ததில்லை போலும் என்று ஊகிக்கலாம்.

## ஆலயத்து வழங்கிய சில பரிபாடைச் சொற்கள்.

இனி, இவ்வாலயத்து அக்காலத்து வழங்கிய சம்பிரதாயச் சொற்களைக் கேட்பதும் இன்பம் பயக்குமாகலின் அவற்றுட் சில ஈண்டுத் தருகின்றேன். அவை, திருவமுது, திருமஞ்சனம், திருப்பரிகலம், திருப்பரிசட்டம், திருவொற்றாடை, திருப் பாவாடை, திருப்பள்ளித்தாமம் முதலியனவாம். அவற்றுள் முதன் மூன்றும் எவர்க்கும் எளிதின் விளங்குமாதலின், அவற்றை விடுத்திட்டு ஏனையவற்றை விளக்குமிடத்துத் திருப்பரிசட்டம் என்பது கடவுட்கணியும் ஆடை. இதனை இந் நாளையில் திருப்பரிவட்டம் என வழங்குவர். திருவொற்றாடை என்பது திருமஞ்சனம் செய்வித்த பின்னர் கடவுட்டிருமேனிக் கண் உள்ள நீரை ஒற்றியெடுக்கும் ஆடை. திருப்பாவாடை என்பது திருமுன் அமுது செய்விக்கச் சோற்றினைப் பரப்பு தற்கு இடும் ஆடை. அது இக்காலத்தும் உண்டு. திருப் பள்ளித்தாமம் என்பது மாலையெனப் பொருள்படுமேனும் ஈண்டு அருச்சனைக்குரிய மலரைக் குறிக்கும். அதனை, 'திருப் பள்ளித்தாமம் பறித்துத் தொடுப்பார் இருவர்' என்னும் திருவையாறு, திருவேதிகுடி சாசனப் பகுதிகளாலும்,

'சாத்தலாகுந் திருப்பள்ளித்தாமம் பலவுந் தாங்கொய்து' எனவும், 'வண்டு மருவுந் திருப்பள்ளித் தாமம் கொண்டு வரன் முறையே—பண்டைப் பயில்வா லருச்சித்து' எனவும், 'கொய்த தூநறும் பள்ளித்தாமம் குஞ்சிமேற் றுதையக் கொண்டார்' எனவும், 'சடைமே லணியத் திருப்பள்ளித் தாமம் பறித்துச் சாத்துவார்' எனவும், 'தெய்வ நாயகற்குச் சாத்துந் திருப்பள்ளித்தாமம் கொய்து' எனவும், 'சிவகாமி யாண்டார் கொய்து—பன்னகாபரணர்ச் சாத்தக்கொடுவரும் பள்ளித்தாமம்' எனவும், பெரியபுராணத்துப் பல விடத்தும் பரந்து கிடத்தலானும் அறியலாம்.

## அக்காலத்தில் சாம்பிராணி இல்லை.

இனி, "வெந்த குங்கிலியப் புகைவிம்மவே—கந்த நாறுங் கழிப்பாலையார்" எனத் தேவாரத்தும், "கங்கைநீர் கலிக்குஞ் சென்னிக் கண்ணுதலெம்பிராற்குப்—பொங்குகுங் கிலியத் தூபம் பொலிவுறப் போற்றிச் செல்ல" எனப் பெரிய புராணத்தும், "ஆலயமெங்கெங்கும்—காதிய குங்கிலியப் புகை" எனச் சேக்கிழார் நாயனூர் புராணத்தும் ஆலயங்களிற் குங்கிலியப்புகை யிட்டமை கேட்கப்படுவதானும், கண்டியூர்க் கணுள்ள இராஜேந்திரன் சாசனத்தும் திருப்புகைக்குக் குங் கிலியமே கூறப்பட்டிருத்தலானும், திருவையாற்றில் ஆட் கொண்டார் திருமுன்னர் குங்கிலியக்குழி இன்றும் காண்டக இருத்தலானும், பண்டைக்காலத்தில் குங்கிலியமே திருப் புகைக்குக் கைக்கொண்டனரென்பதும் இற்றை நாளையில் வழக்கிலுள்ள சாம்பிராணி இருந்ததில்லை என்பதும் ஒருதலை.

## திருப்புகைக்குச் சீதாரி.

இனி, இவ்வாலயத்தில் திருவமுது செய்விக்கும்போது திருப்புகையோடு கற்பூரம் காட்டப்பட்டமை சாசனங்களால் அறியக்கிடக்கின்றது. அப்பொழுது புகைக்குக்கொண்டது

எதுவெனிற் குங்கிலியம் அன்று; சீதாரியாம். அதனைச் சிதாரி எனக் கொண்டு தீப்பற்றவைப்பதற்கு இன்றியமையாத மெல்லிய மரப்பட்டை என்று எழுதினோரு முண்டு. ஆனல் அது சிதாரியன்று, சீதாரியேயாம். சீதத்திற்கு—குளிர்ச்சிக்கு, அரி-பகையாதலால், இப்பெயர் பெற்றது. மக்கள் நீராடிய பின்னர் இப்புகைகாட்டும் வழக்கு முற்காலத்துண்டு; அது, "பாதாதிகேசம் பழிப்பில்லாள் பாங்கமைந்த சீதாரி கொண்டு தன் மெய்புகைத்தாள்" என ஞானவுலாக் கூறுமாற்றாலறிக. அஃது யாதோவெனிற் சந்தனத்தூளேயாம். அதனை, இராசராசதேவர் முதற்பெருந்தேவியார் எடுப்பித்த ஒலோகமாதேவீச்சரத்து, "திருமெய்ப்பூச்சுக்கும் சீதாரிக்குமாக நிசதம் சந்தனம் முப்பலம்" என்னும் சாசனப்பகுதியால் நன்கு உணரலாம்.

## திருமஞ்சனமும் திருவிளக்கும்.

இனி, இவ்வாலயத்தில், சிறுகாலை உச்சம்போது இராவை என்ற மூன்று காலத்தும் பூசை நடைபெற்றது. "ஸ்ரீராஜராஜீச்வர முடையார் ஆடியருளுந் திருமஞ்சன நீரிலும் தண்ணீர் மீதிலுமிட பெருஞ்சண்பக மொட்டுக்கும் ஏலவரிசிக்கும் இலாமச்சத்துக்கும்" என்னும் சாசனப்பகுதியால், பெருஞ்சண்பகமொட்டு ஏலரிசி இலாமச்சம் ஆகிய இவைகளை ஊறவைத்த நீரால் திருமஞ்சனம் ஆட்டினமை அறியலாம். நெய்கொண்டு திருவிளக்குகள் எண்ணிறந்தன ஏற்றப்பட்டன. நாடோறும் விளக்கு ஒன்றினுக்கு உழக்கு விழுக்காடு நெய் அளப்பதற்கு, ஆடு பசு எருமை என்ற மூவினமும் இடையர்கள் பெறுவாராயினர். அங்ஙனம் பெறுமிடத்து, ஆடெனில் தொண்ணூற்றாறும், பசுவாயின் நாற்பத்தெட்டும், எருமை என்றால் பதினாறும் பெறுவர்.

### திருவமுது.

இனி, பழவரிசியாற் சமைத்த போனகம், கறியமுது, பருப்பமுது, நெய்யமுது, தயிரமுது, அடைக்காயமுது, வெள்ளிலை யமுது ஆகிய இவைகொண்டு நாடோறும் மூன்று போதினும் திருவமுது செய்விக்கப்பட்டன. கடவுட்குப் படைக்கும் பொருள்கள் அமுதெனப்படும்.

### திருவிழா நாளில் திருவமுது.

இனி, திங்கடோறும் திருவிழா எழுந்தருளுந் திருமேனிகட்குப் பழவரிசியால் அட்டபோனகமும்; பருப்பு, பழவரிசி, மிளகு, சீரகம், சர்க்கரை, கடுகு, நெய் என்ற இவைகொடு செய்த அப்பக்காய்க் கறியமுதும்; மிளகு, சீரகம், சர்க்கரை, கொள்ளு, வாழைப்பழம், புளி, தயிர், நெய், கடுகு இவை கொண்டு அட்டபுளிங்கறியமுதும், புளியிட்டடுங்கறியமுதும், காய்க்கறி யமுதும், பொரிக்கறியமுதும் பிறவும் அமுது செய்வித்தனர்.

### திங்கள் விழா.

இனி, திங்கட்டிருவிழா என்பன, இராசராசன் பிறந்த நாளாகிய திருச்சதயத் திருவிழாப் பன்னிரண்டும், கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாள் ஒன்றும் ஆகப் பதின்மூன்றுமாம்.

### ஆண்டுவிழா—இராசராசேச்வர நாடகம்.

இனி, திங்கள் விழாவேயன்றி ஆண்டு விழாவும் நடைபெற்றது. அது ஒன்பது நாள் நடைபெறும். ஆட்டைப் பெரிய திருவிழாவுக்குக் கொடியேற்று நாளையும் ஆடவல்லார் எழுந்தருளு நாளையும் பறையறைந்து தெரிவிப்பர். ஒவ்வொரு திங்கட்டிருவிழாவினும் ஆட்டைத் திருவிழாவினும் வழிபட்டு உடன்வரும் சிவயோகியர் பதின்மர்க்கு உடையார் சாலையில்

உணவளிப்பதுண்டு. ஆட்டை விழாவாகிய வைகாசிப் பெரிய திருவிழாவில் இராசராசேச்வரத்தில் இராசராசேச்வர நாடகம் நடைபெறும். நாடகம் ஆடுவோனுக்கு ஆண்டாண்டு தோறும் நூற்றிருபதின் கல நெல் நிபந்தம் ஏற்பட்டிருந்தது. இக்காலத்தில் குறவஞ்சி நாடகம் நடக்கின்றது.

## திருச்சின்னங்களும் பிறவும்.

இனி, இவன் சேரமானையும் பாண்டியர்களையும் மலைநாட்டு எறிந்து கொடுபோந்த பொன்னாற் செய்து 'சிவபாதசேகரன்' என்றும் 'ராசராசன்' என்றும் திருநாமம் வாங்கிய காளங்கள், திருப்பள்ளித்தொங்கல் மகுடம், தவளச்சத்திர மகுடம், வண்ணிகைத் திருக்கொற்றக்குடைமகுடம், ஈச்சோப்பிகை, காளாஞ்சி முதலிய திருச்சின்னங்களும், பொன்னாலும் வெள்ளியாலும் செய்த திருப்பரிகலங்களும், பொன்னிற் செய்து நவமணி பதித்த திருவாபரணங்கள் பலப்பலவும் கொடுத்தனன். இவன் திருத்தமக்கையார் குந்தவையார் கொடுத்துள்ள அணிகலன்களுக்கும் பிறவற்றிற்கும் அளவில்லை. அணிகலங்களை எவரும் மாற்றிவிடாவண்ணம் அரக்கு, செப்பாணி, சரடுகளை நீக்கிப் பொன்னை நிறையெடுத்து, அவற்றில் நவமணிகள் பதிக்கப்பெற்றிருப்பின், அவை இத்துணை, இவ்வளவு நிறை யுடையன, இன்னின்ன தன்மையன என்றுரைத்து விலையும் கண்டிருப்பது பாராட்டற்பாலது.

## கோயில் காரியம் பார்த்தவர், அருச்சகர்.

இனி, கோயில் காரியம் பார்ப்பவரை ஸ்ரீ காரியம் பார்ப்பவர் என வழங்கி வந்தனர். அக்காலத்தில் இராசராசேச்சரத்தில் ஸ்ரீ காரியஞ் செய்தவர் பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் என்பவர். ஸ்ரீ காரியக் கண்காணி நாயகம் செய்தவர் பாண்டிநாடான ராசராச

மண்டலத்துக் திருக்கானப்பேர்க் கூற்றத்துப் பாளூர் கிழவன் அரவணையான் மாலரிகேசன் ஆவார். இராசராசேச்சரத்து அருச்சகர் சைவாச்சாரியன் பவனபிடாரர் என்பவர்.

## திருப்பதிகம் விண்ணப்பம் செய்வோர்.

இனி, திருமுன்னர் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்வதற்காக இசைத்தமிழில் வல்லார் நாற்பத்தெண்மர், உடுக்கைவாசிப்பான் ஒருவன், கொட்டிமத்தளம் வாசிப்பான் ஒருவனுடன் ஐம்பதின்மர் இருந்தனர். இவ் வைம்பதின்மரும் நிசதம் நெல்லு முக்குறுணியாக நிபந்தம் பெற்றனர். இவரைப் பிடாரர் எனச் சாசனம் கூறுகின்றது. பிடாரர் என்பது, இற்றை நாளையிற் பாம்பு பிடிப்பாரைக் குறிக்கும் பெயராக வழங்குதலின், அது பட்டாரகரின் மரூஉப் பெயராகிய படாரர் போலும். இவ் வைம்பதின்மரையும் ராசராச பிச்சனான சதாசிவன், மாதேவன் திருஞான சம்பந்தனான ஞானசிவன், கயிலாயன் ஆரூரனான தர்மசிவன் என்றின்னோரன்ன சிவன் என வழங்கியிருத்தல் பாராட்டற்பாலது. இவர்களை யன்றிக் கானபாடி, ஆரியம்பாடுவார், தமிழிசை பாடுநரும் இருந்தனர்.

## ஆலயத்துப் பணிப்பெண்கள்.

இனி, ஆலயத்துக்குரிய பணிகளைச் செய்வதற்காகச் சோழநாட்டுப் பிறதளிகளினின்றும் குடியேற்றம் பெற்ற பதியிலார் நானூறு பேர்கள் இருந்தனர். இராசராசேச்சரத்தை அடுத்து வடபுறத்தினும் தென்புறத்தினும் அவர்கட்காகத் தனித்தனி மனைகள் கட்டப்பட்டிருந்தன. ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு வேலி நிபந்தம் கொடுக்கப்பட்டது. அன்னவர் பெயர்க்கு முன்னர் நக்கன் எடுத்த பாதம், நக்கன் சோழகுல சுந்தரி, நக்கன் ராசராசகேசரி என்றாற்போல நக்கன் என்னும் பெயர் புணர்க்கப்பட்டிருக்கும். நக்கன் என்பது சிவனுக்குரிய

பெயர்களில் ஒன்று. அவர்களுள் ஆடல் பாடல்களில் வல்லுநர் பலர் உண்டு.

### இன்னிசை வல்லோரும் இசைக்கருவி யியக்குவோரும்.

இனி, பாடுவோர் காந்தர்விகள் எனப்பட்டனர். காந்தர் வரும் எழுபத்தைவர் இருந்தனர். கொட்டிமத்தளக்காரர், பக்கவாத்தியர், வீணைவாசிப்பவர், மொரலியம், வங்கியம், பாடவியம், உடுக்கை, முத்திரைச்சங்க முழக்குவோரும் இருந்தனர். உவச்சுப்பறை, சகடை, கரடிகை என்னும் பறைவிசேடங்களும் உண்டு.

### அஃறிணைப் பெயர்களை உயர்திணைப் பெயரான் வழங்கல்.

இனி, இராசராசேச்சரத்தின் திருவாசல்களைக் கேரளாந்தகன், இராசராசன், அணுக்கன் எனவும், பெரும்பண்டாரத்தைத் தஞ்சை விடங்கன் எனவும், மரக்காலை ஆடவல்லான் எனவும் நிறைகல்லை தக்ஷிணமேரு விடங்கன் எனவும், உயர்திணைப் பெயரால் வழங்கியிருப்பது ஆராயத்தக்கது. இவ்வழக்குப் பற்றிப்போலும் திருவாரூர்க் கண்ணுள்ள ஆயிரக்கால் மண்டபத்தைத் "தேவாசிரியன் எனுந் திருக்காவணம்" என்று பெரியபுராணங் கூறும்.

### திருமேனி, பிரதிமம் என்பவற்றின் வேறுபாடு.

இனி, ஆலயத்து எழுந்தருளுவித்தவற்றுள் கடவுள் வடிவமெனில் திருமேனி எனவும், மக்கள் வடிவமாயின் பிரதிமம் எனவும் வழங்குவர். அவற்றை, 'எழுந்தருளுவித்த பிச்சதேவர் திருமேனி ஒன்று' 'நம்பி ஆரூரனர் பிரதிமம் ஒன்று' என்பவற்றுட் காண்க.

இனி இவ்வாலயத்துள்ள சாசனங்கள் மிகப்பலவாகும். அவற்றுள் கூறுவனவற்றை எல்லாம் விரித்துரைக்கப் புகின்

விரியுமாதலின், அதனை விடுத்துச் சுருங்கக் கூறுமிடத்து, இச்சாசனங்களால், அக்காலத்துப் பலராலும், எழுந்தருளு வித்த (பிரதிஷ்டை செய்வித்துள்ள) திருமேனிகள் (விக்கிர கங்கள்) அவைகளுக்காக அவர்கள் கொடுத்த விளை நிலங்கள், திருப்பரிகலங்கள் (பாத்திரங்கள்) திருச்சின்னங்கள், திருவா பரணங்கள் ஆகிய இவைகட்கு விபரமும், எவரும் எவ்வித குறையும் கூறுதற்கு இடமின்றி, உப்பு முதல் கற்பூரம் வரைக்கும் வேண்டிய எல்லாப் பண்டங்கட்கும் செய்யப்பட் டுள்ள எல்லா ஏற்பாடும் பிறவும் நன்குணரலாம்.

---

## 11. இராசராசேச்சரத் திருவிசைப்பாக்கள்.

### கருவூர்த் தேவர்.

இனி, கருவூர்த்தேவர் இராசராசேச்சரம் பாடிய வரலாற் றினை ஆராய்வோம். இவர், கருவூரில் அந்தணர் மரபிற் பிறந்து, சிவாகமங்களை ஓதியுணர்ந்து, சிவனே பரம்பொருள் எனத் தேர்ந்து, அவரடிக்கண் அன்பு பூண்டு வழிபட்டுவந்தனர். பின்னர், சித்தர்களை அடுத்து, உடலை நிலைபெறச் செய்யும் அருமருந் தருந்தி அல்லல் தீர்ந்து, சிவயோகம் கைவரப் பெற்று, அங்கையில் ஓடேந்தி எங்கும் பலியேற் றுண்டு திரிவாராயினர். இவரது செய்கை இவ்வாறாக. அவ்வூர் வேதியர் சிலர், இவரது தன்மையை அறியாது, அரசன்பாற் சென்று, ‘இவர் ஊனுண்டு கள்ளருந்தித் தம் மரபிற்கு இழிவுண்டாக்குகின்றனர், இவரை நாட்டைவிட்டு அகற்ற வேண்டும்’ என்று முறையிட்டனர். அதைக்கேட்ட அரசன், தேவரது இருப்பிடத்தையடைந்து அங்கு இருந்த பொருள் களை ஆராய்வானாயினன். அவை யாவையும் சிவ வழிபாட்டிற்

குரிய தூய பொருள்களாக இருப்பக் கண்டு, அஞ்சி அடி பணிந்திட, 'நீ போய் நின்னை என்பால் அனுப்பிய அந்தணர் இல்லங்களை ஆராய்க' எனக் கருவூரார் கட்டளையிட்டனர். அவ்வாறே அரசன் சென்று பார்த்தபோது அன்னவர் இல்லங் களில் ஊனும் கள்ளும் மிக்கிருப்பக் கண்டு, அவர்களைச் சினந்து ஊரைவிட்டோட்டினன். அதற்கு மனம் பொறாத தேவர், அருள் சுரந்து, அவர்களை மன்னிக்கச் செய்தனர்.

அதன் பின்னர், இவர், அவ்வூர் அந்தணர்க்கு அறிவு புகட்டவேண்டிக், காலமல்லாத காலத்தில் மழை பெய்யவும், ஆற்றில் வெள்ளம் பெருகி வரவும், கருவூரில் மூடுண்டிருந்த திருவானிலைக்கோயிற் கதவங்கள் தாமே திறக்கவும், பூதங்கள் தமக்குக் குடை பிடிக்கவும், தம்மை வேண்டிய வாமிகள் பொருட்டு வன்னி மரங்கள் மீன் மழை பொழியவும் செய்து காட்டிப் பொதிகை மலையை அடைந்து தவம் செய்திருந்தனர்.

இவ்வாறிருக்கையில் போகர் விடுத்த திருமுகம் கிடைக் கப்பெற்றுத் தஞ்சைக்கு வந்தருளி இராசராசேச்சரத்துப் புகுந்து சிவலிங்கத்தை ஆவுடையாருடன் சேர்த்து, வாயிற் றம்பலத்தை மருந்தாக உமிழ்ந்து இறுகச் செய்தனர், திரு விசைப்பாவும் பாடினர்.

அதற்குப் பிறகு தேவர் தலங்கள் பலவும் சென்று வணங்கி வழிபட்டுத் திருவிசைப்பாப் பாடியருளி மீண்டு கருவூரையடைந்து திருவானிலை ஆலயத்துப் புகுந்து சோதி யுட் கலந்தனர் எனக் கருவூர்ப்புராணம் கூறுகின்றது.

கருவூர்த்தேவர், இராசராசேச்சரத்தையும், இராசராசன் மகன் இராசேந்திரன் எடுப்பித்த கங்கைகண்ட சோழேச் சரத்தையும் பாடியிருக்கின்றனர். கங்கை கண்டான் என்பது இராசேந்திரன் பெயர்களுள் ஒன்றாகும். இராசேந்திரன்,

கி. பி. 1012 முதல் 1043 வரையிலும் செங்கோல் செலுத்தினவன். இராசராசனோ என்றால், கி. பி. 985 முதல் 1012 வரை இருந்தவன். ஆகவே, இராசராசன், இராசேந்திரன் என்ற இருவரால் எடுப்பித்த கோயில்களைப்பாடிய கருவூர்த்தேவரை பதினோராம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்திலிருந்தவர் எனக்கோடல் பொருத்தமுடைத்தாதல் காண்க.

## இராசராசேச்சரத் திருவிசைப்பாக்கள்.

இனி, தஞ்சை யிராசராசேச்சரத் திருவிசைப்பாக்கள், அன்பொழுகி இன்பம் பயக்கும் இயல்பினவன்றி, அற்றை நாளையில் தஞ்சை நகர், மன்னர் முடியொடு முடிதேய்ந் துக்க மணிகள் ஒளிவிடு மறுகும், கடலெனக் கம்பலைமிக்க தெருவும், நெடுநிலை மாடமும், அகில் கமழ் மாளிகையும், யாழ் பயிலிடமும், ஆடரங்கும், நாடகசாலையும், கழுநீர்ப் பொய்கையும், நந்தவனமும், இஞ்சியும், கிடங்கும், பிறவும் பொலிதர இருந்த காட்சியைப் புலப்படுத்து மாட்சியும் உடையவாகலின் அவற்றினை ஈண்டு எடுத்தெழுதுவது இன்றியமையாததாயிற்று.

உலகெலாந்தொழவந்தெழுகதிர்ப்பரிதியொன்றுநூறுயிரகோடி
யலகெலாம்பொதிந்ததிருவுடம்பச்சோவங்கனேயழகிதோவரணம்
பலகுலாம்படைசெய்நெடுநிலைமாடம்பருவரைஞாங்கர்வெண்டிங்க
ளிலகுலாம்பதணத்திஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

நெற்றியிற்கண்ணென்கண்ணினின்றகலாநெஞ்சினிலஞ்சிலம்பலைக்கும்
பொற்றிருவடியென்குடிமுழுதாளப்புகுந்தனபோந்தனவில்லை
மற்றெனக்குறவேன்மறிதிரைவடபாற்றிடுபுனன்மதகில்வாழ்முதலை
யெற்றுநீர்க்கிடங்கிலிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

சடைகெழுமகுடந்தண்ணிலாவிரியவெண்ணிலாவிரிதருதரளக் [ரனைய
குடைநிழல்விடைமேல்கொண்டுலாப்போதுங்குறிப்பெனுங்கொங்கிண
குடைகெழுநிருபர்முடியொடுமுடிதேய்ந்துக்கசெஞ்சுடர்ப்படுகுவை
கிடைகெழுமாடத்திஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே [யோங்

வாழியம்போதத்தருகுபாய்விடையம்வரிசையின்விளக்கலினடுத்த
சூழலம்பளிங்கின்பாசலராதிச்சுடர்விடுமண்டலம்பொலியக்
காழகில்கமழுமாளிகைமகளிர்கங்குல்வாயங்குலிகெழும
யாழொலிசிலம்புமிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

எவருமாமறைகளைவையும்வானவர்களீட்டமுந்தாட்டிருக்கமலத்
தவருமாலவனுமறிவரும்பெருமையடலழலுமிழ்தழற்பிழம்ப
ருவரிமாகடலினொலிசெய்மாமறுகிலுறுகளிற்றரசினதீட்ட
மிவருமால்வரைசெயிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

அருளுமாறருளியாளுமாருளவடிகடமழகியவிழியுங்
குருளும்வார்காதுங்காட்டியான்பெற்றகுயிலினைமயல்செய்வதழகோ
தரளவான்குன்றிற்றண்ணிலாவொளியுந்தருகுவால்பெருகுவான்றெரு
விருளெலாங்கிழியுமிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே. [வி

தனிப்பெருந்தாமேமுழுதுறப்பிறப்பின்றளிரிறப்பிலையுதிர்வென்று
னினைப்பருந்தம்பாற்சேறலின்றேனுநெஞ்சிடித்துருகுவதென்னோ
சுனைப்பெருங்கலங்கற்பொய்கையங்கழுநீர்ச்சூழன்மாளிகைசுடர்வீசு
மெனைப்பெருமணஞ்செயிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

பன்னெடுங்காலம்பணிசெய்துபழையோர்தாம்பலரேம்பலித்திருக்க
வென்னெடுங்கோயினெஞ்சுவீற்றிருந்தவெளிமையையென்றுநான்மறக்
மின்னெடும்புருவத்திளமயிலனையார்விலங்கல்செய்நாடகசாலை [கேன்
யின்னடம்பயிலுமிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

மங்குல்சூழ்போதினொழிவறநிறைந்துவஞ்சகர்நெஞ்சகத்தொளிப்பா
ரங்கழற்சுடராமவர்க்கிளவேனிலலர்கதிரனையவாழியரோ
பொங்கெழிற்றிருநீறழிபொசிவனப்பிற்புனறுளும்பவிர்சடைமொழுப்ப
ரெங்களுக்கினியரிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

தனியரெத்தனையோராயிரவருமாந்தன்மையரென்வயத்தினராங்
கனியரத்தருதீங்கரும்பர்வெண்புரிநூற்கட்டியரட்டவாரமிர்தர்
புனிதர்பொற்கழலர்புரிசடாமகுடர்புண்ணியர்பொய்யிலாமெய்யர்க்
கினியரெத்தனையுமிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே.

சரளமந்தாரசண்பகவகுளசந்தனநந்தனவனத்தி
னிருள்விரிமொழுப்பினிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவரை
யருமருந்தருந்தியல்லறீர்கருவூரறைந்தசொன்மாலைமீரைந்தின்
பொருண்மருந்துடையோர்சிவபதமென்னும்பொன்னெடுங்குன்றுடை-
[யோரே.

---

## இராசராசன் திருமுறை கண்டது.

இனி, இராசராசன் திருமுறை கண்ட வரலாற்றினைக் கூறப்புகுவதன்முன், அதுபற்றி ஒரு சாரார் எடுத்துரைக்கும் தடைகளை ஆராய்ந்து உண்மை காண்டல் இன்றியமையாதது. ஆதலின் அவற்றினை ஆராய்வாம்.

இனி, திருமுறை கண்ட புராணத்தில், "தியாகேசர் பதம்பணிந்து செங்கோ லோச்சி—யலகில் புகழ்பெறு ராசராச மன்ன னபய குலசேகரன்" என வந்திருத்தலின் திருமுறை கண்டவன் அபய குலசேகரன் என்பவன். அபயன் என்னும் பெயர் முதலாவது குலோத்துங்கன் ஒருவனுக்கே உரியது ; ஏனையோர்க்கு உரித்தாகாது. அன்றியும், திருமுறைகளுள், திருவிசைப்பாவும் ஒன்று ; அதன் கண், இராசராசன் காலத்திற்குப் பின்னிருந்தவர் பாடியவைகளும் காணப்படுகின்றன. ஆதலால், இராசராசன் காலத்தில், திருமுறைகள் வகுத்திருக்க முடியா தென்பர் ஒரு சிலர்.

இனி, " அபயன் என்பது முதற்கண் உபயகுலோத்தமனுக்கு வழங்கி அவன் வழித்தோன்றிய விக்கிரமன் முதலாகப் பலர்க்கும் வழங்கியதாகலின் அதுவும் பொதுப்பெயர் போல்வது " (செந்தமிழ் வால்யம் 2 பக்கம் 394) என்பதால், அபயன் என்னும் பெயரும், குலோத்துங்கன், விக்கிரமன், உத்துங்கன், கண்டன், அகளங்கன், மானுபரணன் என்பன போலச் சோழர் என்னும் பொருளில் பயில்வதாயிற்று. ஆதலால், அபயன் என்றது குலோத்துங்கற்கே உரியதெனல் அமையாது.

இனி, திருமுறை கண்ட புராணம் ஆறுவது செய்யுளில் " மல்லன் மிகு சேனையுடன் இராசராச மன்னவனு மந்நகரில் வந்து சேர்ந்தான் " எனவும், சேக்கிழார் புராணத்தில், " திருமுறைகண்ட ராசராசதேவர் " எனவும் கூறப்பட்டுள்ளது. சேக்கிழார் புராணம் இயற்றிய உமாபதி சிவாசாரியரே திருமுறைகண்ட புராணத்தையும் செய்தவர். அவர் மேற்கண்ட இரண்டு இடங்களிலும் இராசராசன் எனவே கூறிப்போதலின், ஈண்டு அபயன் என்றது, இராசராசனுக்குப் புகழ்ப்பெயர் எனக் கோடற்பாலதேயன்றிப் பிறிதன்று.

இனி, அபயன் என்றது இராசராசனுக்குப் புகழ்ப்பெயராயினும் ' தியாகேசர் பதம்பணிந்து செங்கோலாச்சினவன் ' இராசராசனு, குலோத்துங்கனு என்று ஆராய்வதும் இன்றியமையாதது. இராசராசன் தஞ்சையின்கண் ஆட்சிபுரிந்தவன். இவனுக்கு 85 வருடங்கட்கு பிற்பட்டு அரசுரிமை தாங்கினவன் அபயன். அவன், கொள்ளிடத்திற்கு வடகரைக்கண் உள்ள கங்கைகண்ட சோழபுரத்தில் அரசாண்டவன். கங்கைகண்ட சோழபுரத்திற்கும் திருவாரூருக்கும் இடையில் ஆறுகள் பல இருந்தன. அவற்றைக் கடப்பதற்கு அக்காலத்தில் பாலங்கள் ஏற்படவில்லை. கங்கைகண்ட சோழபுரத்தைத் தலைநகரமாகக் கொண்ட சோழர்க்குத் தில்லைநகர்க்குச் செல்வது தான் எளிது.

அவர்கள் எல்லோரும் நடராசப்பெருமானிடத்து மிக்க அன்பு வாய்ந்தவர்கள். அதனை, "தன் குலநாயகன் தாண்டவம் பயிலுஞ் செம்பொன்னம்பலம் சூழ்திருமாளிகையும் கோபுர வாசல் கூடசாலைகளும் உலகு வலங்கொண் டொளிவிளங்கு நேமிக்குலவரை உதயகுன்றமொடு நின்றெனப் பசும்பொன் மேய்ந்து" என வரும் விக்கிரமசோழன் பதினைந்தாம்யாண்டுச் சாசனத்தில், தன் தந்தையாகிய அபயன் நடராசாவுக்குப் பொன் கொடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது. இதில் விக்கிரமன் சிதம்பரத்தைத் தன் தந்தையின் 'குலநாயகன் தாண்டவம் பயிலும் செம்பொன்னம்பலம்' எனக் கூறியிருப்பது கொண்டு குலோத்துங்கன் நடராசரைக் குலதெய்வமாகக் கொண்டவன் என்றறியலாம். இதனால் அபயன் தியாகேசர் பதம்பணிந்து செங்கோல் செலுத்தினவன் அல்லன் என்றுணரலாம்.

இனி, தியாகேசர் பதம்பணிந்து செங்கோலோச்சினோன் அபயன் அல்லன் எனின், இராசராசன் அவ்வாறு ஓச்சினனோ என்று கேட்கிற் கூறுவேன்.

## இராசராசேச்சரத்தில் நடைபெறும் திருவாரூர் ஐதிகம்.

இனி, இராசராசன் தன் தலைநகர்க்கண் இராசராசேச்சரம் எடுப்பித்தபின், தான் வழிபட்டு வந்த திருவாரூர் வழக்கினையொட்டி இராசராசேச்சரத்தில் தியாகராசரை எழுந்தருளுவித்து அவர்க்குத் 'தஞ்சைவிடங்கர்' எனப் பெயர் அமைத்தனன். திருவாரூரில் தியாகர்க்குப் பூசை நடந்தபின்னர் மூலலிங்கத்துக்குப் பூசை நடப்பதுபோல இங்கும் விடங்கர்க்குப் பூசை நடந்த பின் மூலலிங்கத்துக்குப் பூசை நடக்கவும், திருவாரூரில் வசந்தவிழா பதனெட்டுநாள் நடப்பதுபோல இங்கும் வசந்த காலத்தில் 18 நாட்கள் விழாக்கொண்டாடவும், வசந்தவிழாவில் திருவாரூரில் வீதிவிடங்கர் எந்த நாளில்

எவ்விதமாகப் புறப்படுவாரோ, அவ்விதமாகத் தஞ்சை விடங்கரைப் புறப்பாடு செய்விக்கவும் ஏற்பாடு செய்தனன். திருவாரூரிலும் அசபாநடம், ஈண்டும் அசபாநடமே. அவ்வூரில் விடங்கர்க்குப் போலவே தஞ்சையினும் சுத்தமத்தளம், எக்காளம் என்னும் இவைகள் உண்டு. நாடகமும் தேரும் நடைபெறும். (தமிழ்வரலாறு)

இதுகாறும் கூறியவைகளைக் கொண்டு, இராசராசனே தியாகேசர் பதம்பணிந்து செங்கோலோச்சினவன் என்று தெரிந்துகொள்ளலாம்.

இனி, இராசராசன் தியாகேசர் பதம் பணிந்து செங்கோலோச்சினன் எனினும் அமைக, திருமுறைகளில் ஒன்றாகிய திருவிசைப்பாவில், இராசேந்திரன் தன் தந்தைக்குப் பின்னர்த் தலைநகராகக்கொண்ட கங்கைகண்ட சோழபுரத்தில் எடுப்பித்த கங்கைகண்ட சோளீச்சரப் பதிகமும் சேர்க்கப்பட்டிருத்தலின் இவன் திருமுறைகண்டானென்பது எங்ஙனம் பொருந்தும் எனிற் கூறுவேன்.

இனி, மூவர் திருமுறைகளும் திருமந்திரமும் அல்லாத மற்றவைகளுள், தொகுத்த காலத்திருந்தனவும் பின்னர்ச் சேர்க்கப்பட்டனவும் இன்னவென வறையறுத்தற் கியலாது. எனினும், காலந்தோறும் பிறரால் சேர்க்கப்படும் வழக்கம், உண்டென்பதை அடியில் வருவனகொண்டு உணரலாம். "ஆகவளர் திருமுறையேழருட்டிருவாசகமொன்று" எனத் திருவாசகம் ஒன்றுமே எட்டாந் திருமுறையாகக் கூறியிருப்பவும், திருக்கோவையாரும் எட்டாந் திருமுறையின் பகுதியாக இப்போது அமைக்கப்பட்டுள்ளது. இது பிற்காலத்திற் சேர்க்கப்பட்டிருக்கலாமெனக் கொள்ளலாமேயல்லது, எவரால் எக்காலத்திற் சேர்க்கப்பட்டதென்று தெரிதற் கியலாது.

இன்னும் திருமுறைகளைப் பதினொன்றாக வகுத்த பிறகு

"பத்திதருந் திருமுறைகள் பதினொன்றுப் பண்ணினார்."

"ஆக்கியபின் திருத்தொண்டத் தொகையடைவே யருளாலே
நோக்கியபின் நாயன்மார் நடங்கடைவுந் தொழிற்பேறும்
பாக்கியத்தாலிபமுகத்தோனருள்செய்த பகுதியினால்
வாக்கியல்சே ரந்தாதி நம்பியடை வேவகுத்தார்."

எனத் திருமுறைகண்ட புராணம் கூறுமாற்றால், நம்பி யாண்டார் நம்பி திருமுறை வகுத்த பின்னரே திருத்தொண்டர் திருவந்தாதி பாடினார் என்று அறியக்கிடப்பவும், இவ்வந்தாதியும் அவர் இயற்றிய வேறு நூல்களும், இற்றை நாளையில் பதினோராந்திருமுறையின் பகுதியாக வழங்குகின்றன. இவை பிற்காலத்துச் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டுமேயல்லாது நம்பியே சேர்த்திருப்பார் என்று எண்ணுதற் கிடமில்லை. இதனால் திருமுறைதொகுத்த காலத்திற் சேர்த்தவைகளும் பின்னர்ச் சேர்க்கப்பட்டவைகளும் இன்னின்னவை எனத் தெரிந்துரைத்தற்கியலாதாயிற்று. ஆகவே, இம்முறையில் நோக்குமிடத்து, கங்கைகண்ட சோளேச்சரப் பதிகமும் பின்னர்ச் சேர்க்கப்பட்டவைகளில் ஒன்றெனக் கொள்வதற்கு இயைபிருத்தல் காணலாம்.

இனி, இதுகாறும் கூறியவாற்றால் இராசராசனே திருமுறைகண்டவன் என்பது போதரும். இவன் சிவபெருமானிடத்துப் பேரன்புடையவன்; 'சிவபாதசேகரன்' எனப் பெயர் பெற்றவன். இவனது ஆட்சியில் தேவாரம் பாடிய மூவர் வடிவங்களை இராசராசேச்சரத்து எழுந்தருளுவித்தனர். நாடோறும் திருப்பதியம் திருமுன்னர் விண்ணப்பம் செய்தற்கென நாற்பத்தெண்மர் நியமிக்கப்பட்டனர். அவர்களை, மாதேவன் திருஞானசம்பந்தனை ஞானசிவன்' 'திருநாவுக்கரயனை நேத்திரசிவன்' என்றாற் போலச் 'சிவன்'

எனப் பெயரிட்டு இவன் வழங்கினன். இவ்வுண்மைகளும் திருமுறை கண்டவன் இராசராசன் என்பதை வலியுறுத்து நிற்றல் காண்க.

## இராசராசன் திருமுறை கண்ட வரலாறு.

இனி, இராசராசன் திருமுறைகண்ட வரலாற்றினைச் சுருங்கக் கூறுவேன். அவன் அரியணை ஏறிய பின் சில யாண்டுகள் வரையும் போர்மேற் செல்லாது நாட்டிற் காவன செய்திருக்கையில், திருவாரூர்க்குச் சென்று தியாகேசப் பெருமானை வழிபடுவா னாயினன். அப்போது, அங்குப் போதரும் அடியாருட் சிலர், திருமுன்னர் மூவர் திருப்பதிகங்களில் ஒவ்வொன்று விண்ணப்பம் செய்யக்கேட்டுக் கைகளிரண்டும் உச்சிமேலேறக் கண்ணீர் வார மெய்ம்மயிர் சிலிர்ப்ப நெஞ்சம் நெக்குருகி, "எம்பெருமானே! இப்பதிகம் முழுவதும் கேட்டு என்று இன்புறுவேன்" என ஐயன் மலரடிகளை உள்ளத்தே கொண்டு போற்றி, அவ்வரிய முறைகளைத் தேட எங்கும் ஆட்போக்கியும் அகப்படாமையால், நையு மனத்தினனாகி இருந்தனன். அப்பொழுது, பொன்னியாற்றின் வடகரையி லுள்ள திருநாரையூரில் ஆதி சைவ மரபில் நம்பியாண்டார் நம்பி என்பவர் பொல்லாப்பிள்ளையாரின் திருவருள் பெற்றுச் சிறந்து விளங்குவதைக் கேட்டுணர்ந்தனன். அவர்பாற் சென்று, பிள்ளையார்க்குத் திருவமுது படைத்தற்கும் திருமஞ்சனத்திற்கும் வேண்டுவனவற்றை நிரம்பக் கொடுத்துத் தன் கருத்தினை அறிவித்தனன். அவரும் பிள்ளையாரை வழிபட்டு, அரசன் எண்ணத்தை விண்ணப்பம் செய்ய, அப்பெருமான் அருளிச்செயவால், பொன்னம்பலத்தின் மேற்றிசையில் மூவர் கையிலச்சினை பெற்ற காப்பினையுடைய அறையின்கண் தேவாரத் திருமுறைகள் இருத்தலை அறிந்து, இவற் குணர்த்தினர். கேட்ட இராசராசன் பெரிதும் மகிழ்வுற்று நம்பியோடு

தில்லைநகரை அடைந்து தில்லைவாழந்தணரை எதிர்ப்பட்டுத் திருமுறைகளை எடுக்க இசைந்திட வேண்டும்' என்றுரைத்தனன். அவரும், 'அவற்றினை வைத்த மூவரும் எழுந்தருளின், அறை திறக்கும்' என்றனர். இவன் நுண்ணறிவிற் சிறந்தோனாதலின், அம்மூவர் திருமேனிகளையும் வீதியில் திருவுலாப் போதரச்செய்து, முறைகளை அடக்கஞ் செய்துள்ள அறைக்கெதிரில் கொணர்ந்து நிறுத்திக்கொண்டு, 'மூவரும் வந்தனர்; இனி அறை திறக்கலாமே' எனக் கூறினன். அந்தணர்கள் இவனது அறிவின் திறத்தினை வியந்து, அறை திறப்பதற்கு உடன்பட்டனர்.

அறை திறக்கப்பட்டது. முறைகளெல்லாம் புற்றினால் மூடுண்டிருந்தன. கண்டான், என் செய்குவான்! கலக்கமெய்தினான். அப்பொழுது 'அரச! கவலற்க; இக்காலத்திற்கு வேண்டியவை போக எஞ்சியவற்றைச் செல்லரித்திடச் செய்தேம்' என விண்ணிடை நின்றும் ஒரு நன்மொழி எழுந்தது. அதைக் கேட்டவுடனே திருவருளை வியந்து, நம்பியை வணங்கி, ஐயனே! 'இவற்றைத் தொகுத்தருள வேண்டும்' என்றிரந்தனன்.

## நம்பியாண்டார் நம்பி திருமுறை வகுத்தமை.

இராச்ராசனது வேண்டுகோட் கிணங்கிய நம்பியாண்டார் நம்பியும் திருஞான சம்பந்தர் திருப்பதிகங்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் திருப்பதிகங்களை அடுத்த மூன்று திருமுறைகளாகவும், நம்பியாரூரர் திருப்பதிகங்களை அவற்றிற்கு அடுத்த ஒரு திருமுறையாகவும் வகுத்து, மூவர் பதிகங்களையும் ஏழு திருமுறைகளாகச் செய்த பின்னர், திருவாசகத்தை எட்டாந் திருமுறையாகவும், திருவிசைப்பா, திருப்பல்லாண்டுகளை ஒன்பதாம் திருமுறையாகவும், திருமந்திரத்தைப் பத்தாம் திருமுறையாகவும், திருமுப்பாசுரம் முதலிய

வற்றைப் பதினொன்றும் திருமுறையாகவும், வகுப்பாராயினர். அதனை அடியிற்கண்ட திருமுறைகண்ட புராணச் செய்யுட்களால் அறியலாம். அவை,—

"பண்புற்ற திருஞான சம்பந்தர் பதிகமுந்நூற்
றெண்பத்தி னொன்கினால் இலங்குதிரு முறைமூன்று
நண்புற்ற நாவரசர் முந்நூற்றேழ் மூன்றினால்
வண்பெற்ற முறையொன்று நூற்றினால் வன்றொண்டர்"

"ஆகவளர் திருமுறையே ழருட்டிருவா சகமொன்று
மோகமெறி திருவிசைப்பா மாலைமுறை யொன்றுசிவ
போகமிகு மந்திரமா முறையொன்று புகழ்பெறவே
பாகமிகுந் திருமுறைகள் பத்தாக வைத்தார்கள்"

"வைத்ததற்பின் நம்பிகழன் மன்னர்பிரான் மகிழ்ந்திறைஞ்சிச்
சித்திதரும் இறைமொழிந்த திருமுகப்பா சுரமுதலா
வுய்த்தபதி கங்களையும் ஒருமுறையா செய்கவெனப்
பத்திதருந் திருமுறைகள் பதினொன்றாப் பண்ணினார்."

என்பனவாம். இராசராசன் நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு திருமுறைகளை வகுத்த காலம் கி. பி. 1011 ஆகும். இதனை Ephigraphica Indica பக்கம் 113-ல் காண்க.

## 13. இராசராசன் எடுப்பித்த வேறு ஆலயங்களும் பிறவும்.

இனி, இராசராசன் தன் இருபத்தொன்பதாம் யாண்டில் தொண்டை மண்டலமாகிய சயங்கொண்ட சோழமண்டலத்தில் பெரும்பாணப்பாடித் தூநாட்டில் மேற்பாடியாகிய இராசாச்ரய புரத்தில் தேவதான இறையிலியாக அந்நகரத்தாரிடத்தில் நிலம் பெற்று திருவரிஞ்சியீச்வரம் எடுப்பித்தனன் என மேற்பாடி சாசனங்களால் அறியக்கிடக்கின்றது. மேற்பாடி என்பது

வடவாற்காட்டில் உள்ள திருவல்லத்துக்கு வடக்கே ஆறு கல் சேய்மைக்கண் உள்ளதொரு நகராகும். இராசாச்ரயன் என இராசராசனுக்கு ஒரு பெயருண்மையான், மேற்பாடி இராசாச்ரயபுரம் என்று வழங்குவதாயிற்று. அரிஞ்சயன் என்பவன் இராசராசனது பாட்டன். இவன் தன் பாட்டன் பள்ளிப் படையாக அதாவது இளைப்பாறுமிடமாக இவ்வாலயம் எடுப்பித்தனன். இதனை, "ஸ்ரீகோவிராஜ ராஜகேசரி வன்மரான ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு உ௰கூ-ஆவது ஜயங்கொண்ட சோழமண்டலத்துப்பெரும்பாணப்பாடித் தூனாட்டுமேற்பாடியாகிய ராஜாச்ரயபுரத்து நகரத்தோம் ஆற்றூர்த்துஞ்சின தேவர்க்குப் பள்ளிப்படையாக உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் எங்கள் நகரத்திலெடுப்பித்தருளின திரு அறிஞ்சிகை ஈச்வரத்து மகாதேவர் ஸ்ரீ கோயிலுக்குந் திருச்சுற்றாலைக்குந் திருமுற்றத்துக்குந் திருநந்தனவனத்துக்கும் மடவிளாகத்துக்குமாக நாங்களித் தேவற்குக் குடுத்த நிலத்துக்கெல்லை" (S. I. I. Vol. III Part I page 23) என்னும் சாசனத்துட் காண்க.

இனி, திருவரிஞ்சியீச்வரமன்றி இராசராசன் காலத்தில் மும்மடி சோழமண்டலம் என வழங்கிய ஈழத்தில் மாதோட்டமான இராசராசபுரத்தில் உள்ள இராசராசேச்சரமும், பழையாற்றில் அருண்மொழி தேவேச்சரமும், இராசராசன் எடுப்பித்த ஆலயங்கள் போலும் என்று ஊகிக்கின்றனர். இவையல்லாமல், திருவலஞ்சுழி ஆலயத்துள் கேத்திரபாலர்க்கு ஒரு ஆலயம் இவன் எடுப்பித்தமை No. 633 of the Madras Epigraphical Collection for 1932 ஆல் புலப்படுகின்றது.

## இராசராசன் காலத்துப் பிடாரிகோயில்கள்.

இனி, இராசராசன் காலத்தில் கொள்ளிடத்திற்கு வடகரையிலுள்ள மழநாடான இராசாச்ரய வளநாட்டில், பிடாரி

புன்னைத்துறை நங்கை, பிடாரி பொதுவகை ஊருடையாள், காளார் பிடாரியார், பிடாரி குதிரைவட்டமுடையாள், பிடாரி திருவாலுடையாள் என்ற பல்வகைப்பட்ட பிடாரி கோயில்கள் இருந்தன. (Vol. II. Part I. p. 57.)

---

## 14. முடிப்புரை.

இனி, இதுகாறும் விரித்துக் கூறியவற்றுட் கண்ட இன்றியமையாத நயமும் பிறவும் ஈண்டுத் தொகுத்துரைக்கப் படும்.

தஞ்சையைத் தலைநகராகக் கொண்டிருந்த விசயாலயன் மரபினருள், இராசராசன் பத்தாவது சோழனுவான். இவன் இரண்டாம் பராந்தகனுகிய சுந்தர சோழனுக்கு இளைய மகன்; இவனது இயற்பெயர் அருண்மொழித்தேவன்; பட்டப்பெயர் இராசகேசரி; இவன் செல்வத்தின் மேம்பட்டுச் சிவனடிக்கண் அன்பிற் சிறந்திருக்கக் கண்ட தில்லைவாழந்தணரால் இவனுக்கு இடப்பட்ட பெயர் இராசராசன் என்பது. இவனுக்கு விருதுப் பெயர்கள் பல உண்டு.

இவன் மனைவியர் பலருள், இவன் துலாபாரம் புக்கபோது இரணிய கர்ப்பம் புக்கவரும், திருவையாற்றில் லோகமா தேவீச்வரம் எடுப்பித்தவருமான தந்திசக்தி விடங்கியார் என்ற லோகமாதேவியாரே இவனது முதற்பெருந்தேவியாவார். இவனுக்கு இராசேந்திரன், மாதேவடிகள், குந்தவை என மக்கள் மூவர் இருந்தனர்.

இவன், தன் தமையன் இறந்தபோது, அரசாளுவதற் கேற்ற பருவமும், குடிகளின் விருப்பமும் உடையவனுக

இருந்தும், தாயத்தாரிடத்துக் கலகம் கூடாதென்னும் கருத்தினனாய், ஆட்சியை மேற்கொள்ளாது, அரசாள விருப்பம் உடைய தன் சிற்றப்பன் மதுராந்தகனை அரசனாக்கித், தான் அவன் கீழ் இளவரசாக இருந்த இவனது பேரறிவும், தன் தமக்கையாரைத் தன்னோடொப்ப நன்குமதித்து, அவர் கொடுத்த நிபந்தங்களைமட்டும் தான் அளித்தவைகளோடடுத்து இராசராசேச்சரத்து நடுவிமானத்தில் வெட்டுவதற்கு ஆணைதந்த இவனது பெருந்தகைமையும் மூதறிவும் போற்றத்தக்கன.

இவன், இளவரசாக இருந்தபோது, பின்னர் இன்னின்ன செய்யவேண்டுமெனத் தன் மனத்தில் அமைத்து வைத்திருந்தனனோ அறியோம். பட்டத்திற்கு வந்து எட்டு ஆண்டுகள் வரையும், பகைவர் நாட்டின்மீது படையெடுத்துச் செல்லாது, நாட்டிற்கு அரணமைத்தல், பெரும்படைகூட்டல், உள்நாட்டுக் குழப்பங்களை ஒழித்தல் என்ற இவைகளை மேற்கொண்டிருந்தனன் என்பரேல், இவன் எதனையும் முன்னர் ஆராய்ந்து பின்னர் செய்யத் துணியும் இயல்பினன் என்று கூறலாம்.

சோழநாட்டின் வடவெல்லையில் நெடுநாளாகக் கீழைச் சளுக்கியர்கள் உண்டாக்கி வந்த குழப்பத்தை, அவர்கட் கரசனாகிய விமலாதித்தனை வென்று சிறைகொண்டும் தீங்கு புரியாது அன்புடன் நடத்தியதோடு அமையாமல், தன் மகள் குந்தவை என்பாளை அவற்கு மணஞ்செய்வித்து, வேங்கி நாட்டிற்கு முன்னையிற்போல அன்னவனை மன்னவனாக்கி, அதனால், அவர்கள் பகைமை நீங்கி உறவு கொண்டாடும்படிச் செய்த இவனது அரசசூழ்ச்சி பாராட்டற் பாலது.

இவன், எந்தப்படை எங்கு வென்றதோ அதனை இன்ன இடத்து வென்ற படை இது என்பது விளங்க, 'கேரளாந்தகத் தெரிந்த' 'சிங்களாந்தகத் தெரிந்த' 'அரிதுர்க்கலங்கனத்

தெரிந்த' 'சண்ட பராக்கிரமத் தெரிந்த' என்பன போன்ற அடைமொழிகள் கொடுத்து அவற்றை மேம்படுத்து முறையில் ஊக்கும் இயல்பினன் என்று தெரியலாம்.

இவனிடத்து, யானை குதிரை காலாள் என்ற படைகளே யல்லாமல், வேற்படை, விற்படை, வாட்படை என ஒவ்வொரு படைக்கலத்துப் பயின்ற படைகளும் பலப்பல இருந்தன. மெய்யுரை பூண்ட வீரர், உடனிலை குதிரைச் சேவகர், பரிவார மெய்க்காப்பாளர் என்பாரும் இருந்தனர். வென்ற நாட்டில் குழப்பம் உண்டாகாமல் காக்கவல்ல நிலைப்படையும், கடலிற் கலத்திற் சென்று போர் செய்யும் கடற்படையும், உற்றிடத்து உயிர் வழங்கும் பெற்றியராகிய வேளைக்காரப் படைகள் பதின் மூன்றும் இருந்தன. இரட்டபாடியின்மீது ஒரே காலத்தில் ஒன்பது நூறாயிரம் பேர்கள் அடங்கிய பெரும் படை யொன்றை அனுப்பி வென்றமை அறிகின்றோம். இவற்றால், இவன் எத்துணைப் பெரும்படை வன்மை பெற்றிருந்தவன் என்றுய்த் துணரலாம்.

இவன், இறக்குமளவும் வெற்றியையே விரும்பி நின்ற வீரனாதலின், இவனது ஆட்சியின் கடைசி வருடமாகிய இருபத்தொன்பதாம் யாண்டிற்கூட, முந்நீர்ப்பழந்தீவுகள் பன்னீராயிரமும் கைக்கொண்டு 'சயங்கொண்ட சோழன்' என விளங்கியதற்கேற்பத், தன்னை உய்யக்கொண்ட இறைவனை மறவாமைக்கு அறிகுறியாக, உய்யக்கொண்டான் திருமலை ஈசற்குச் சயங்கொண்ட சோழன் என்னும் பொற் பட்டம் சாத்தி வழிபடுவானாயினன். தேவார காலத்தெல்லாம் 'கற்குடி' என வழங்கிய இம்மலை இவன்காலம் தொட்டு உய்யக்கொண்டான் மலை என்னும் பெயருடையதாயிற்று. உய்யக்கொண்டான் என்பது இவன் பெயர்களில் ஒன்றாகும்.

இவன் தன்கீழ் வாழும் மக்கள் ஆட்சி முறையில் தேர்ச்சி பெறுதல் காரணமாக, அவர்களைக்கொண்டு ஊர்தோறும் சபை அமைத்தல், நிர்வாக அங்கத்தினரைத் தேர்தல் என்பவைகளைச் செய்வித்து, அவர்கட்குத் தத்தம் ஊரின் நன்மை தீமைகளை ஆராய்ந்து, அவற்றிற்கு ஆவனபுரிதற்கேற்ற அதிகாரத்தையும் அளித்துப் பழக்கிய இவனது பரந்த நோக்கம் பாராட்டற்பாலது.

அக்காலத்தில், அரசனே எக்காரியத்தையும் செய்தற்கு உரிமையுடையவன் எனினும், இவன் அதனைப் பின்பற்றாது, அமைச்சர், உடன்கூட்டத்ததிகாரிகள் என்ற இவர்களோடிருந்து ஆராய்ந்தே காரியம் நடத்தியமை கருதத்தக்கது.

இவன்காலத்தில், செல்வம் செழித்தோங்குதற்கு இன்றியமையாத உழவு, வாணிபம், கைத்தொழில்கள் மிகச் சிறந்த நிலையில் இருந்தமையால், இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் தழைத்து ஓங்கிச் செழித்து நின்றதும், நாட்டில் வாணிபத் துறையில் குறைபாடு நேரிடற் கிடமின்றி எடுத்தலுக்கு வேண்டிய எடைக்கல்லினும், முகத்தலுக்குரிய மரக்காலினும் 'இராசகேசரி' என அரச முத்திரை இடப்பட்டிருந்ததும் நன்கு மதிக்கத்தக்கன.

இராசராசேச்சரத்துச் சாசனங்களிற் கூறப்பட்டுள்ள அணிகலங்களை நோக்குமிடத்து, இவன் காலத்தில், சோழ நாட்டில், பொன்னாலும் நவமணிகளாலும் அணிகலங்கள் செய்யும் தொழில் மிகவும் மேலான நிலையில் இருந்ததென்றறியலாம்.

இற்றை நாளையில், அறச்சாலைக்கும் ஆலயங்களுக்கும் நன்கொடை கொடுப்போர் தாம் கொடுக்கும் பாத்திரங்களில் தம் பெயரை வரைந்து கொடுக்கும் வழக்கம், இவன் காலத்தும்

இருந்த தென்பதை, இராசராசேச்சரத்துக்கு இவன் அளித்த திருப்பரிகலத்தும் திருச்சின்னத்தும் இராசராசன், சிவபாத சேகரன் எனத் தன்பெயர்களை வரைந்து கொடுத்திடச் செய்த மையால் அறியலாம்.

அரசியல் அங்கம், ஐம்பெருங்குழு முதலியவற்றோடு விளங்கும், அரசிருக்கை மண்டபம், நீதிமன்றம், ஆவணக்களரி கலைக்கழகம், அறச்சாலை, பெரும்பண்டாரம் முதலியவற்றைத் தன்பாற்கொண்ட இவனது தலைநகரமாகிய தஞ்சை நகர் தஞ்சாவூர் உள்ளாலை, தஞ்சாவூர்ப் புறம்படி என்று இரு பகுப்பினதாய், வீரசோழப்பெருந்தெரு, இராச வித்தியாதரப் பெருந்தெரு, சயங்கொண்ட சோழப் பெருந்தெரு, சூரசிகா மணிப் பெருந்தெரு, வானவன் மாதேவிப் பெருந்தெரு எனப் பலப்பல பெருந்தெருக்களும்; கந்தர்வத்தெரு, வில்லிகள் தெரு, ஆனையாட்கள் தெரு, ஆனைக்கடுவார் தெரு, மடைப்பள்ளித் தெரு, பன்மையார் தெரு, சாலியத்தெரு என்றின்னோரன்ன தெருக்களும்; திருபுவனமாதேவிப்பேரங்காடி, கொங்காள்வார் அங்காடி, இராசராச பிர்ம்ம மாராயன் அங்காடி முதலிய ஆவணங்களும்; உய்யக் கொண்டான் திருமஞ்சனத்தார் வேளம், பஞ்சவன் மாதேவியார் வேளம், உத்தம சீலியார் வேளம், திருப்பரிகலத்தார் வேளம், அபிமானபூஷணத்தெரிந்த வேளம் முதலிய வேறுபல இடங்களும்; ஆடரங்கும், நாடக சாலையும், மாடமாளிகையும், கூடகோபுரமும், இஞ்சியும் கிடங்கும் என்னும் இவற்றால் சிறந்து பரந்து நிலாவியது. இந்நகர்க்குத் தென்மேற்கில் ஏழு மைலுக் கப்பாலுள்ள வல்லத்தில் அரணமைந்த அரண்மனை இவனுக்கு இருந்தது என்பர்.

இவன் எங்கும் வென்று அமைதியை உண்டாக்கிய பின் தன் 17-ஆம் யாண்டில் இராச்சியம்முழுவதும் அளந்து காணிக்

கடன் ஏற்படுத்தினன். 19-ஆம் யாண்டில் தனது தலைநகரமாகிய தஞ்சையில் இராசராசேச்சரம் என்னும் பெரியகோயிலை எடுப்பித்து, அதன்கண் தக்கணமேரு விடங்கர் முதலிய கடவுட் டிருமேனிகளை எழுந்தருளுவித்து, அவற்றிற்குச் சிறுகாலை முதல் மூன்றுகாலத்தும், சண்பகமொட்டு ஏலக்காய் வெட்டிவேர் என்ற இவைகளை ஊறவைத்த நீரால் திருமஞ்சனம் செய்வித்து நெய்கொண்டு எண்ணிறந்த திருவிளக்குகள் ஏற்றுவித்து, திருமுன்னர் நாற்பத்தெண்மர் திருப்பதிகம் விண்ணப்பம் செய்ய, சாமகானத்தைக் கனபாடிகள் பாட, மத்தளம் பக்கவாத்தியங்களுடன் காந்தர்விகள் இன்னடம்புரிய, உடுக்கையும் முத்திரைச் சங்கமும் முழங்கப், பழவரிசியாற் சமைத்த போனக முதலியவற்றைச் சீதாரி திருப்புகையும், கற்பூரத் தீபமும் காட்டி அமுது செய்வித்தனன். இவற்றை எல்லாம் இக் கோயிலின்கண் வெட்டப் பெற்றுள்ள சாசனங்களால் அறியலாம். அவற்றுள், பெரிய விமானத்தின் வடபுறத்தில் திருமஞ்சன நீர் வந்து விழும் இடத்திற் கருகில், "ஏதத் விச்வ சிரேணி மௌலி" எனத் தொடங்கும் சாசனமே முதன் முதலில் வெட்டப்பட்டதாகும். இவன் சரித ஆராய்ச்சிக்கு இன்றியமையாத மெய்க்கீர்த்தியை முன்னர் எழுதிப் பின்னர்ச் சாசனம் தொடங்கும் வழக்கத்தை உண்டாக்கியவன். சாசனத்தால் ஆயபயனை நன்கு தெரிந்தவன். ஆதலால் அவைகளைப் பாதுகாப்பதில் பெருநோக்கமுற்றவன். அதனை இந்நூலில் 72-ஆம் பக்கத்திற் காணப்படும் 'பழங்கோயிலைப் புதுப்பிக்குமாறு' என்னும் தலைப்பிற் காணலாம்.

இவனுக்கு நெடுங்காலத்திற்குப் பின் பெரிய புராணமாக விரித்தெழுதுவதற்குச் சேக்கிழார் ஆதாரமாகக்கொண்ட 'திருத்தொண்டர் திருவந்தாதி' இவன் காலத்தில் இயற்றப் பெற்றதாகலின், சோழ நாட்டில் அறுபத்துமூவர் வரலாறு

கர்ணபரம்பரையாக எங்கும் இவனது ஆட்சியில் வழங்கி வந்திருத்தல் அமையும் என்று கூறலாம்.

திருக்கோவலூர் திருவீரட்டானேச்வரர் கோயில் கர்ப்பக் கிரகத்தின் தெற்கு, கிழக்கு, வடக்கு குமுதப்படைகளில் வெட்டப்பட்டுள்ள ஒரு அழகிய அகவற்பாவால் அமைந்த இவனது 27-ஆம் யாண்டுச் சாசனத்தில், இவன், பாண்டியரை வரைபுகத் துரத்திக், கலிங்கத்தை வென்று, கங்கபாடியைக் கைக்கொண்டு கொங்கவரசரை வெளிப்படுத்திச், சேரனை மலை நாட்டுப் போகவிடுத்து, உதகையை அழித்துப் புலிக்கொடியை எங்கும் நாட்டினன் எனக் கூறியிருப்பதோடமையாமல், இவனை, மகிபதி, நரபதி, அசுவபதி, கஜபதி எனவும், தண்டமிழ் நாடன், சண்டபராக்கிரமன், திண்டிறற் கண்டன், செம்பியர் பெருமான், செந்திரு மடந்தைமன், இந்திர சமானன், இராஜ சர்வஞ்ஞன் எனவும் புகழ்ந்திருப்பனவும் வேறு எந்த சாசனத்தும் கூறப்படாத செய்திகளாகும். (செந்தமிழ் தொகுதி 4, பகுதி 5, பக்கம் 232.)

இக்காலத்திற் சென்னைராசதானி எனவழங்கும் நிலப் பரப்பினும், பம்பாய் இராசதானியின் தென்பகுதி நாடுகளினும், இலங்கையினும் முன்னீர்ப்பழந்தீவுகள் பன்னீராயிரத்தினும் தன் ஆணை செல்ல, மக்கள் எல்லோரும் சமவுரிமை பெற்று இன்பமுற, செல்வமும் கல்வியும் செழித்தோங்க, இராசராசேச்சரம் எடுப்பித்து, சைவம் தழைக்கத் திருமுறை கண்டு, எங்கும் புகழ் பரப்பிய இராசராசன், செங்கோலோச்சிய காலம் கி. பி. 983 முதல் 1013 வரையிலும் எனத் தெரிந்து மகிழுவோமாக.

## 15, தஞ்சைச் சோழர் வம்சாவளி.

- விசயாலயன்
  - ஆதித்தன் I
    - பராந்தகன் I
      - இராசாதித்தன்
      - கண்டராதித்தன் I
        - மதுராந்தக உத்தம சோழன்
          - கண்டராதித்தன் II
      - அரிஞ்சயன்
        - பராந்தகன் II (சுந்தர சோழன், மனுச்சோழன்)
          - ஆதித்தன் II (கரிகாலன் II)
          - இராசராசன் I